# பகுதி III

# பகுதி III

## 2004 ஆம் ஆண்டில் நாணயச் சபையால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய நிருவாக வழிமுறைகள்

### தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களும், சுற்றறிக்கைகளும், பணிப்புரைகளும், அறிவித்தல்களும்

**வங்கி மேற்பார்வைத் திணைக்களம்**


பக்கம்

1. மூலதனப் போதுமை விகிதத்தினை நிர்ணயித்தல் - எண்: 02/ 04/ 002/ 0005/ 003 (i)
2. மூலதன நிதியம் பற்றிய விளக்கம் - எண்: 02/ 04/ 003/ 0005/ 003 (i)
3. வங்கித் தொழில் நிறுவனங்களின் கொடுகடன் தரமிடல் மீதான வழிகாட்டல்கள் - எண்: 02/ 04/ 003/ 0400/ 001 (ii)
4. 19995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்ட வாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 39ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க வெளிக்கணக்காய்வாளர்களின் நியதிக் கடமைகள் தொடர்பான அவர்களுக்கான வழிகாட்டல்கள் (iii)
5. உள்நாட்டு வங்கித் தொழில்பிரிவுகள், மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் என்பனவற்றிற்கான திரவச் சொத்துக்களின் மாதாந்தக்கூற்று - எண்: 02/ 04/ 002/ 0005/ 003 (v)
6. முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பகுப்பாய்வு/ மூலதன போதுமை விகிதாசாரத்தினது கணிப்பீட்டிற்காக நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டினைப் பொறுப்பேற்கும் விலை மதிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம் - எண்: 02/ 04/ 003/ 0004/ 001 (v)
7. தனியொரு கடன்படுநருக்கான வரையறை - எண்: 02/ 04/ 002/ 0005/ 003 (vii)
8. ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயமுற்பணங்களை வகைப்படுத்தல் (viii)
9. வங்கிகளினால் வழங்கப்பட்ட கப்பற்படுத்துகை உத்தரவாதங்கள் - எண்: 02/ 04/ 003/ 0400/ 002 (xi)
10. ஏற்பாட்டு நோக்கங்களுக்காக பிணையங்களை பெறுமதியிடல் - எண்: 02/ 04/ 002/ 0103/ 0002 (xiii)
11. பிணையங்களை பறிமுதல் செய்தல்/ படுகடனின் பகுதியான தீர்ப்பனவு என்பன வாயிலாக பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீடு (xiv)
12. சேமிப்புக் கணக்குகளின் மீதான மீளப்பெறல் (xv)

## உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்


13. பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - எண்: 35/ 01/ 005/ 0006/ 04 (xvi)

14. லங்கா செட்டிலுள்ள மீதான பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிரான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - எண்: 35/ 01/ 005/ 0006/ 05 (xxv)

15. இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் - எண்: 35/ 01/ 005/ 0006/ 06 (xxix)

16. லங்கா செட்டிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல் - எண்: 35/ 01/ 005/ 0006/ 07 (xxx)

17. பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் - எண்: 35/ 01/ 005/ 006/ 08 (xxxi)

18. நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள் - எண்: 35/ 01/ 005/ 0010/ 01 (xxxiv)


## செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்


19. மடகாஸ்கரிலிருந்து இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவொன்றாக இரத்தினக்கல் வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல் - எண்: 06/ 05/ 01/ 2004 (xxxvii)

20. முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் செய்யப்பட்ட இறக்குமதிகள் மீதான கண்காணிப்புத் திட்டம் - எண்: 06/ 05/ 02/ 2004 (xxxix)

21. இலங்கை அபிவிருத்தி முறிகள் - எண்: 06/ 05/ 03/ 2004 (xli)

22. மியன்மாரிலிருந்து இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவொன்றாக இரத்தின்கல் வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல் - எண்: 06/ 05/ 04/ 2004 (xliv)

23. பொருட்களின் கப்பலேற்றம் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்றுமதி முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல் - எண் : 06/ 04/ 05/ 2004 (xlvi)

## பன்னாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்


24. வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றம் (ஐ.அ.டொலர்/ இ.ரூபா) மீதான வர்த்தக வங்கிகளுக்கான வழிகாட்டல்கள் - எண் : 33/ 05/ 031/ 0004/001 (xlvii)


## கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்


25. மத்திய வைப்பக முறையின் முன் உடனடி விடுவிப்பினை மத்திய கணக்கீட்டு முறையுடன் பரீட்சிப்பதற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினைத் திறத்தல்
- சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 01/ 2004 - எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (xlviii)

26. லங்கா செட்டில் முறைக்கான புதிய பங்கேற்பாளரின் நியமனம் நட் வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் - சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 02/ 2004
- எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (xlviii)

27. 2004 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்தல் - சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 03/ 2004
- எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (xlix)

28. லங்கா செட்டில் முறையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கான திருத்தங்கள்
- சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 04/ 2004 - எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (l)

29. 2004 ஒகத்து 01ஆம் நாளன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை - பொதுப்பேரேடு இடைத்தளமுக பரீட்சிப்பிற்காக அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையினைத் திறத்தல்
- சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 05/ 2004 - எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (l)

30. லங்காசெட்டிலின் அலுவல் நேரத்தினை 2004ஆம் ஆண்டு திசெம்பர் 24ஆம் நாளன்றும் திசெம்பர் 31ஆம் நாளன்றும் கட்டுப்படுத்தல்
- சுற்றறிக்கை எண் ஆர்ரிஜிஎஸ்/ 06/ 2004 - எண்: 34/ 07/ 029/ 0001/ 001 (li)


## பொதுப்படுகடன் திணைக்களம்


31. தம்வசமில்லாத பிணையங்களின் விற்பனை மீதான பணிப்பு
- எண்: 08/ 24/ 002/ 0005/ 004 (lii)

32. 2003ஆம் ஆண்டு ஒகத்தின் லங்கா செட்டில் முறையின் ஒழுங்கு விதிகளுக்கான திருத்தம் (lii)

33. சீராக்கப்பட்ட வர்த்தகப்படுத்தல் மீதான பணிப்பு(சந்தை விலையிலும் உயர்வான விலை) (liv)

**சுற்றறிக்கை எண் 02/04/002/0005/003**

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*

*2004 சனவரி 2*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

*அன்புள்ள ஐயா/ அம்மணி*

## மூலதனப் போதுமை விகிதத்தினை நிர்ணயித்தல்

*2001 டிசெம்பர் 27ஆம் நாளன்றும், 2002 டிசெம்பர் 24ஆம் நாளன்றும் திருத்தம் செய்யப்பட்டவாறான 1997 ஓகத்து 22ஆம் நாளிடப்பட்ட மூலதனப் போதுமை விகிதத்தினை நிர்ணயிப்பது தொடர்பில் நிர்ணயம் செய்தலின் நியதிகளில் மூலதனப் போதுமை விகிதத்தினை பேணுவது தொடர்பாக பின்வரும் தேவைப்பாடுகளைத் தெளிவுபடுத்துவதற்காக எழுதுகின்றேன்.*

1. *அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் எல்லா நேரங்களிலும் 5 சதவீதத்தற்குக் குறையாத மைய மூலதனத்தினை உள்ளடக்கியவிதத்தில் இடர்நேர்வுகள் நிறையேற்றப்பட்டசொத்துக்கள் தொடர்பாக ஆகக் குறைந்தது 10 சதவீதமான மைய மூலதனத்தினைப் பேண வேண்டுமென்றும் இரண்டும் உள்நாட்டு மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளைக் கருத்திற் கொள்கையில் அவை தனியாகவும் வங்கி அடிப்படையிலும் மற்றும் திரட்டிய அடிப்படையில் அதாவது வங்கி மற்றும் அனைத்து துணை நிறுவனங்களையும் உள்ளடக்கியதாக இருக்கும். வெளிநாட்டு வங்கிகளைப் பொறுத்தவரையில் திரட்டுக்கள் இலங்கையிலுள்ள ஏதாவது துணை நிறுவனங்கள் தொடர்பாக மட்டுமே இருக்கக்கூடும்.*

11. *இதன்படி அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் 2003 டிசெம்பர் 31ஆம் நாள் முடிவடைந்த காலாண்டு தொடக்கம் ஆண்டின் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலுமுள்ளவாறு நியதி மூலதன போதுமை விகிதம் தொடர்பாக கீழே உள்ளவாறு இரண்டு கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.*

   *(அ ) வங்கி மாத்திரம்/ தனி அடிப்படையில் அமைந்த மூலதனப் போதுமை விகிதத்தினை எடுத்துக் காட்டுகின்ற கூற்று*

   *(ஆ) திரட்டப்பட்ட அடிப்படையிலமைந்த மூலதனப் போதுமை விகிதத்தினை எடுத்துக் காட்டுகின்ற கூற்று*

111. *காலாண்டு கூற்றுக்களுக்குப் புறம்பாக, ஆண்டுக் கணக்காய்வு முடிவடைந்த பின்னர், கணக்காய்வு செய்யப்பட்ட தரவுகளை அடிப்படையாகக் கொண்ட மேலேயுள்ள இரு கூற்றுக்களை சமர்ப்பிக்குமாறு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.*

*உங்கள் உண்மையுள்ள*

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

**சுற்றறிக்கை எண் 02/04/002/0005/003**

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*

*2004 சனவரி 6*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

*உரிமம்பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளுக்கும்*

*அன்புள்ள ஐயா/ அம்மணி*

## மூலதன நிதியம் பற்றிய விளக்கம்

*வங்கித் தொழிற் சட்டம் மற்றும் அதன்கீழ் வழங்கப்பட்ட பணிப்புக்கள், தனியொரு கடன்பாட்டாளர் வரையறை மற்றும் பங்குகளிலான முதலீடுகள் என்பன தொடர்பான வங்கித் தொழிற்சட்டத்தின் 46 மற்றும் 17அ மற்றும் 76ஒ ஆகியவற்றின் நோக்கங்களுக்காக மீட்கத்தக்க அனைத்து உள்நாட்டு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளுக்கும் திரண்ட முன்னுரிமைப் பங்குகளிலிருந்தான பெறுகைகள் மூலதன நிதியத்தின் ஒரு பகுதியயாக உள்ளடக்கப்படும் என்பதுபற்றி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*உங்கள் உண்மையுள்ள*

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

**சுற்றறிக்கை எண்** 02/04/003/0400/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2004 சனவரி 19

உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினதும், உரிமம்பெற்ற

சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளினதும் நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

**வங்கித் தொழில் நிறுவனங்களின் கொடுகடன் தரமிடல் மீதான வழிகாட்டல்கள்**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக 20.11.2003 மற்றும் 18.12.2003 ஆகிய நாட்களில் நடைபெற்ற உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் என்பனவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டங்களில் மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக இடம்பெற்ற கலந்துரையாடல்கள் பற்றியும் வங்கிகளுக்கான தரமிடலைப் பெற்றுக்கொள்வதற்கான முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் உடன்படிக்கை பற்றியும் குறிப்பிடுகின்றேன்.

இது தொடர்பாக அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் பின்வரும் வழிகாட்டல்களைக் பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. 2004 யூன் 30ஆம் நாளன்றோ அல்லது அதற்கு முன்னரோ கொடுகடன் தரமிடலைப் பெற்றுக்கொள்ளுமாறு அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளும் (உள்நாட்டு, வெளிநாட்டு வங்கி இரண்டும்) கேட்டுக் கொள்ளப்படுகின்றன.
2. அனைத்துத் தரமிடல்களும் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளத்தக்க சுதந்திரமான தரமிடல் முகவரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்படல் வேண்டும்.
3. வெளிநாட்டு வங்கிகளின் உள்ளூர் கிளைகள் தமது தாய் வங்கியின் தரமிடலை வெளிப்படுத்தலாம்.
4. 2004 யூலை தொடக்கம் அனைத்து வங்கிகளும் வைப்புக்களைத் திரட்டுகின்ற மற்றும் படுகடன் கருவிகள் தொடர்பான விளம்பரங்கள் அனைத்திலும் அவற்றின் தரங்களை வெளிப்படுத்த வேண்டுமென கோரப்படுகின்றன. வங்கியொன்று தரமிடலை பெற்றிருக்காவிடின் அது குறித்தும் வெளிப்படுத்தப்படல் வேண்டும்.
5. கொடுகடன் தரமிடல் ஆண்டுதோறும் பூரணப்படுத்தப்பட வேண்டியதுடன் தரமிடல் அறிக்கையானது, அறிக்கையிடப்பட்ட நாளிலிருந்து ஒரு மாதத்திற்கிடையில் இலங்கை மத்திய வங்கிக்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

இக்கடிதம் கிடைத்தமைபற்றி தயவுசெய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2004 ஏப்பிறல் 27*

*அனைத்து ஒப்புதல்பெற்ற வெளிக் கணக்காய்வாளர்களுக்கும்*

*அன்புள்ள ஐயா*

**1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழிற் சட்டத்தின் 39ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க வெளிக் கணக்காய்வாளர்களின் நியதிக் கடமைகள் தொடர்பான அவர்களுக்கான வழிகாட்டல்கள்**

வங்கித் தொழில் நிறுவனங்களை மேற்பார்வை செய்து ஒழுங்குமுறைப்படுத்தும் அதிகார சபையாக விளங்கும் மத்திய வங்கி இலங்கையில் வங்கித் தொழில்துறையில் காணப்படுகின்ற இடர்நேர்வுகளைத் தணிப்பதற்கும் முகாமைப்படுத்துவதற்கும் தொடர்ந்தும் கடுமையாக உழைத்து வருகிறது. இது தொடர்பாக வெளிக் கணக்காய்வு நிறுவனங்களினால் ஆற்றப்படும் முக்கிய பங்கினை மத்திய வங்கி அங்கீகரித்துள்ளதுடன் வங்கிக் கணக்காய்வின் தரத்தினையும் நேர்மையான தன்மையினையும் மேம்படுத்துகின்ற நோக்கில் பணியாற்றிவருகிறது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளிக் கணக்காய்வாளர்களுக்கு முதலாவது வழிகாட்டல்களை அறிமுகப்படுத்தியதன் பின்னர் உலகளாவிய நிதியியல் கட்டுக்கோப்பில் குறிப்பிடத்தக்களவு அபிவிருத்திகளும் மாற்றங்களும் இடம் பெற்றிருக்கின்றன. நீங்கள் அறிந்திருக்கின்றவாறு, ஐக்கிய அமெரிக்காவின் சார்பன்ஸ் – ஒக்ஸ்லி சட்டம் இப்பிரச்சனைகளில் சிலவற்றினை கட்டுப்படுத்துவதற்கு முயற்சித்தது. இதன்படி, இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபை 1998 மே 20ஆம் நாள் வழங்கிய வழிகாட்டல்களுக்கு இணைப்பு ஒன்றினை இணைப் பதற்கு ஒப்புதலளித்தது. இம் மேலதிக வழிகாட்டல்கள் இக்கரிசனைக்குரிய விடயங்களில் சிலவற்றைக் கட்டுப்படுத்துமெனவும் இவற்றால் வங்கிக் கணக்குகள் முன்னேற்றமடைவதற்கு பங்களிக்கும் எனவும் மத்திய வங்கி நம்புகிறது.

உங்களது நிறுவனம் இலங்கை மத்திய வங்கியின் ஒப்புதல்பெற்ற கணக்காய்வாளர் குழுமத்தில் ஒன்றாக இருப்பதனால் உடனடியாகத் தொழிற்பாட்டிற்கு வரும் இவ்வழிகாட்டல்களுக்கு உங்கள் நிறுவனம் இணங்கியொழுகுவதனை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்

இக்கடிதம் கிடைத்தமைபற்றி தயவுசெய்து அறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

**இணைக்கப்பட்டுள்ளது**

*இணைப்பு 1*

**1995ஆம்ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம்ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 39ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க வெளிக் கணக்காய்வாளர்களின் நியதிக் கடமைகள் தொடர்பான, அவர்களுக்கான வழிகாட்டல்கள்**

**பின்னிணைப்பு**

**கணக்காய்வல்லாப் பணிகள்**

1. வெளிக் கணக்காய்வினை மேற்கொள்ளும் சமகாலப்பகுதியில் தகைமைபெற்ற வெளிக் கணக்காய்வாளர்கள் வங்கியுடன் எந்தவொரு ஆலோசனைகளையும் அல்லது கணக்காய்வல்லா மற்றைய பணிகளையும் மேற்கொள்ளக் கூடாது. கட்டுப்படுத்தப்பட்ட கணக்காய்வு அல்லா பணிகளாவன:

- கணக்காய்வுக் கட்சிக்காரரின் கணக்கீட்டுப் பதிவேடுகள் அல்லது நிதியியல் கூற்றுக்களுடன் தொடர்பான கணக்குப் பதிவு அல்லது ஏனைய பணிகள்
- நிதியியல் தகவல் முறைகளை வடிவமைத்து நடைமுறைப்படுத்தல்
- பெறுமதியிடல் அல்லது மதிப்பீட்டு பணிகள், நியாயமான விருப்பாக்கம் அல்லது பங்களிப்பு வகையிலான அறிக்கைகள்
- கணிப்பீட்டுப் பணிகள்
- உள்ளகக் கணக்காய்வுகளை வெளியார் மூலம் மேற்கொள்ளும் பணிகள்
- முகாமைத்துவத் தொழிற்பாடுகள், மனிதவளம் மற்றும் சம்பளப்பட்டியல் பணிகள்
- தரகர் அல்லது வணிகர், முதலீட்டு மதியுரையாளர், அல்லது முதலீட்டு வங்கித் தொழில் பணிகள்; அத்துடன்
- கணக்காய்வுடன் தொடர்பான சட்டரீதியான பணிகள் மற்றும் நிபுணத்துவப் பணிகள்

கணக்காய்வு நிறுவனமொன்றின் பங்காளர் பணிப்பாளராக இருக்கின்ற அல்லது குறிப்பிடத்தக்க பங்குடைமையைக் கொண்டுள்ள நிறுவனமொன்றினால் வழங்கப்படும் பணிகளுக்கும் இக் கட்டுப்பாடுகள் ஏற்புடையதாகும்.

**முகாமைத்துவக் கடிதம்**

2. வெளிக் கணக்காய்வு நிறுவனமானது, வங்கியின் முகாமைத்துவத்திற்கு கணக்காய்வாளரினால், கணக்காய்வு செய்து பிரசுரிக்கப்பட்ட கணக்குகளுடன் சேர்த்து நியதிச் சட்டத்திற்குட்படாத அறிக்கையான முகாமைத்துவக் கடிதத்தினை நிதியாண்டு முடிவடைந்த ஐந்து மாதங்களுக்கிடையில் சமர்ப்பிக்க வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றது. கணக்காய்வாளர்கள் முகாமைத்துவ கடிதத்தினை இறுதியாக்க முடியாமல் போகுமிடத்து, குறிப்பிடப்பட்ட காலப்பகுதியில் அவர்களினால் கண்டறியப்பட்ட முக்கிய விடயங்களுடன் இடைக்கால அறிக்கையொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். இது உரிய நேரத்தில் குறிப்பிடத்தக்கதும் முறையியல் சார்ந்த முக்கியத்துவம் கொண்டதுமான இடர்நேர்வினை அடையாளம் காண்பதற்கு வங்கிகளையும், ஒழுங்கு முறைப்படுத்துநரையும் இயலச்செய்யும்.

02/04/002/0005/003

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

*2004 மே 20*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளுக்கும்*

*அன்புள்ள ஐயா/ அம்மணி*

**உள்நாட்டு வங்கித் தொழில்பிரிவுகள், மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகள் என்பனவற்றிற்கான திரவச் சொத்துக்களின் மாதாந்தக் கூற்று**

மேற் குறிப்பிடப்பட்ட விடயம் பற்றிய 2002.12.24ஆம் நாளிடப்பட்ட தீர்மானம் மற்றும் 2003.01.21 மற்றும் 2003.10.08 நாளிடப்பட்ட பணிப்புரைகள் தொடர்பானது.

2004 மேயிலிருந்து மத்திய வங்கி மற்றும் பங்குடைமையாளர்கள் என்போருக்கான பொறுப்புக்கள் கழித்த மொத்தப் பொறுப்புக்களில் 20% இற்குக் குறையாத தொகையொன்றினை நியதி திரவச் சொத்துக்களாக உள்நாட்டு வங்கித்தொழில் பிரிவினைப் பொறுத்தவரையில் ரூபாவிலும் வெளிநாட்டு வங்கித் தொழில் பிரிவினைப் பொறுத்தவரை டொலரிலும் பேண வேண்டுமென்பதனைக் கவனிக்குமாறு அனைத்து உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளும் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவில் அல்லது கரைகடந்த வங்கித் தொழில் பிரிவில் நியதி ஒதுக்குச் சொத்துக்களில் காணப்படும் எந்தவொரு குறைபாடும் 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 21(3) இன் ஏற்பாடுகளுக்கு உட்படுத்தப்படுவதுடன் தொடர்பான தண்டம் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவைப் பொறுத்தவரை ரூபாவிலும் கரைகடந்த வங்கித் தொழிலைப் பொறுத்தவரை டொலரிலும் செலுத்தப்பட வேண்டியிருக்கும்.

இக்கடிதம் கிடைத்தமைபற்றி தயவு செய்து அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/003/0004/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

*2004 யூலை 13*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளின்*
*முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்*

*அன்புள்ள ஐயா*

**முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பகுப்பாய்வு/ மூலதன போதுமை விகிதாசாரத்தினது கணிப்பீட்டிற்காக நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டினைப் பொறுப்பேற்கும் விலை மதிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வருவனவற்றைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. வங்கித் தொழிற்சட்டத்தின் 46(அ) பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பகுப்பாய்வுகளின்மீது 1997 ஒகத்து 22ஆம் நாளிடப்பட்ட பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட நடைமுறை தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பது வெளியக சுதந்திர மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நடைமுறை தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கைகளைக் குறிக்கலாம்.

2. மேலே 1இல் குறிப்பிடப்பட்ட பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக ரூ.250,000 அல்லது அதற்குக் குறைவான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பாக தொழில்சார் நிபுணத்துவ மதிப்பீட்டு

அறிக்கைகளை வங்கிகள் பெறவேண்டுமென்ற தேவைப்பாடு அத்தகைய கடன்களுக்காக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியானது நடைமுறை உள்ளக மதிப்பீடுகள் உதவிப் பொதுமுகாமையாளரினால் அல்லது அவரையொத்த கடனுக்குப் பொறுப்பாகவுள்ள வங்கியின் மூத்த அலுவலரினால் கையொப்பமிடப்பட்டிருக்குமிடத்து, விலக்கப்பெற்றது.

குறிப்பு: நடைமுறை உள்ளக மதிப்பீடு என்பது இரண்டாண்டுகளை விஞ்சாத மதிப்பீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

3. "மூலதனப் போதுமை விகிதத்தினது கணிப்பீட்டிற்காக நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டினைப் பொறுப்பேற்கும் விலை மதிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம்" தொடர்பாக வெளியிடப்பட்ட 1999 ஏப்பிறல் 19ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டாளர் என்பது சுதந்திரமான வெளியக மதிப்பீட்டாளர்களைக் குறிக்கும்.

இச்சுற்றறிக்கை கிடைத்தமைபற்றி தயவுசெய்துஅறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/003/0400/001

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2004 யூலை 13

உரிமம்பெற்ற அனைத்து சிறப்பியல்புவாய்ந்த வங்கிகளின்

முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கும்

அன்புள்ள ஐயா

## முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பகுப்பாய்வு/ மூலதன போதுமை விகிதாசாரத்தினது கணிப்பீட்டிற்காக நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டினைப் பொறுப்பேற்கும் விலை மதிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம்

உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள் பின்வருவனவற்றைக் கவனிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

1. வங்கித் தொழிற்சட்டத்தின் 76ஒ(1) பிரிவின்கீழ் வெளியிடப்பட்ட முற்பணங்கள் மற்றும் குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளின் பகுப்பாய்வுகளின்மீது 1997 நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட பணிப்புரைகளில் குறிப்பிடப்பட்ட நடைமுறை தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கைகள் என்பது வெளியாக சுதந்திர மதிப்பீட்டாளர்களிடமிருந்து பெறப்பட்ட நடைமுறை தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கைகளைக் குறிக்கலாம்.

2. மேலே 1இல் குறிப்பிடப்பட்ட பணிப்புரைகளின் நோக்கங்களுக்காக ரூ.250,000 அல்லது அதற்குக் குறைவான கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பாக தொழில்சார் நிபுணத்துவ மதிப்பீட்டு அறிக்கைகளை வங்கிகள் பெறவேண்டுமென்ற தேவைப்பாடு அத்தகைய கடன்களுக்காக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியானது நடைமுறை உள்ளக மதிப்பீடுகள் உதவிப் பொதுமுகாமையாளரினால் அல்லது அவரையொத்த கடனுக்குப் பொறுப்பாகவுள்ள வங்கியின் மூத்த அலுவலரினால் கையொப்பமிடப்பட்டிருக்குமிடத்து, விலக்கப்பெற்றது.

   குறிப்பு: நடைமுறை உள்ளக மதிப்பீடு என்பது இரண்டாண்டுகளை விஞ்சாத மதிப்பீடுகள் என வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

3. "மூலதனப் போதுமை விகிதத்தினது கணிப்பீட்டிற்காக நிலையான சொத்துக்களின் மீள் மதிப்பீட்டினைப் பொறுப்பேற்கும் விலை மதிப்பீட்டாளரைத் தெரிவு செய்வதற்கான பிரமாணம்" தொடர்பாக வெளியிடப்பட்ட 1999 ஏப்பிறல் 19ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட மதிப்பீட்டாளர் என்பது சுதந்திரமான வெளியக மதிப்பீட்டாளர்களைக் குறிக்கும்.

இச்சுற்றறிக்கை கிடைத்தமைபற்றி தயதுசெய்துஅறியத்தரவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/002/0005/003

*வங்கி மேற்பார்வைத் திணைக்களம்*
*2004 யூலை 16*

*இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட உரிமம் பெற்ற*
*வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*
*இலங்கை மத்திய வங்கியினால் ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வாளர்கள்*
*செயலாளர் நாயகம், இலங்கை வங்கியாளர் சங்கம்*
*அனைத்து அலுவலர்களுக்கும்*

*அன்புள்ள ஐயா*

## தனியொரு கடன்படுநருக்கான வரையறை

இது தனியொரு கடன்படுநருக்கான வரையறையை கரைகடந்த வங்கித் தொழில் பிரிவுகளுக்கும் ஏற்புடையதாக்கும் விதத்தில் 2002 திசெம்பர் 24ஆம் நாளன்று தனியொரு கடன்படுநருக்கான வரையறை தொடர்பாக வழங்கப்பட்ட பணிப்புரைக்கு செய்யப்பட்ட திருத்தம் தொடர்பானதாகும். தனிப்பட்ட கடன்படுநருக்கான வரையறையைக் கணிப்பதற்கான அடிப்படையாக முற்பணத்தினை கருத்திற் கொள்ளுகின்ற இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்டுள்ள உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் பின்வருமாறு நடந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

(i) உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவினையும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவினையும் தனித்தனியாக கருதி இப்பிரிவுகளின் தனியொரு கடன்பாட்டாளருக்கான கடன் வழங்கலை தொடர்பான பிரிவுகளின் கடன்வழங்கலில் 15%இற்கு மட்டுப்படுத்தல்;

(ii) உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித் தொழல் பிரிவு என்பனவற்றின் திரட்டப்பட்ட கடன் வழங்கலில் 15% கொண்ட தனியொரு கடன்படுநருக்கான வரையறையை வங்கி பயன்படுத்த விரும்புமிடத்து தொகையானது தலைமை அலுவலக உத்தரவாதம் அல்லது பொறுப் பேற்பொன்றினால் ஆதரவளிக்கப்படுமிடத்து கரைகடந்த வங்கித் தொழில் பிரிவின் கடன் வழங்கலின் 15% இனை விஞ்சிய அத்தகைய ஐ.அ.டொலர்களில் நிர்ணயிக்கப்பட்ட வரையறையினை கரைகடந்த வங்கித் தொழில் பிரிவிற்கு பிரயோகிக்க முடியும்.

(iii) தனியொரு வாடிக்கையாளர் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு மற்றும் கரைகடந்த வங்கித் தொழில் பிரிவு ஆகிய இரண்டிலுமிருந்தும் வசதிகளைப் பயன்படுத்துமிடத்து, அத்தகைய வாடிக்கையாளர்களுக்கான இணைந்த வெளிப்படுத்துகையானது ஒன்றில் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவின் அல்லது கரைகடந்த வங்கித் தொழில் பிரிவின் மொத்த கடன் வழங்கலில் எது உயர்வானதோ அதற்கு மட்டுப்படுத்தப்பட வேண்டும்; அத்துடன்

(iv) வெளிக் கணக்காய்வாளர் நிறுவனத்தினால் உறுதிப்படுத்தப்பட்ட முன்னைய ஆண்டின் மொத்தக் கடன் வழங்கலின் மாதாந்த சராசரியானது 2005ஆம் ஆண்டிலிருந்து தனியொரு கடன்பாட்டாளரின் வரையறையைக் கணிப்பதற்கான அடிப்படையாகக் கருதப்படலாம்.

நடைமுறைப்படுத்துகை ஏதுமிருப்பின், அதாவது 2004 யூன் 30 ஆம் நாளன்று மேலே குறிப்பிடப்பட்ட வரை யறையை விஞ்சியிருக்குமாயின் அத்தகைய மிகை, 2004ஆம் ஆண்டின் இறுதியளவில் இச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கிணங்க வீழ்ச்சியடையும் விதத்தில் ஒழுங்குமுறைப்படுத்தப்பட வேண்டுமென கேட்டுக் கொள்ளப் படுகிறது.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/002/0005/004

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
2004 செத்தெம்பர் 8

*அனைத்து வர்த்தக வங்கிகளினது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா*

## ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயமுற்பணங்களை வகைப்படுத்தல்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான செயற்றிட்டம் சார்ந்த தவணைக் கடன்கள் தொடர்பாக, வங்கித் தொழில் சட்டததின் பிரிவு 46(அ) இன் கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 1997 ஒகத்து 22ஆம் நாளிடப்பட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட வகைப்படுத்தல் நியமத்திலிருந்து வங்கிகள் மாறுபட்டுச் செல்ல விரும்பக்கூடிய அடிப்படையின்மீது வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துவதற்காக 2004 ஒகத்து 19ஆம் நாளன்று நடத்தப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்பாடுபற்றி குறிப்பிடுகின்றேன்.

இது தொடர்பாக வங்கிகள் பின்வரும் வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

## நடுத்தர மற்றும் நீண்டகால செயற்றிட்டக் கடன்களின் வகைப்படுத்தலில் மாறுபாட்டினை ஒப்புதலளித்தல் மீதான வழிகாட்டல்கள்

(i) **தகைமையுடைய முற்பணங்கள்** நடுத்தர மற்றும் நீண்டகால செயற்றிட்டக் கடன்கள் (12 மாதங்களுக்குக் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட கடன்கள்)

(ii) **அனுமதிக்கப்பட்ட மாறுபட்ட தன்மை** தற்போதுள்ள பணிப்புரைகளின்கீழ் 3 மாத காலம் நிலுவையில் உள்ளவைக்குப் பதிலாக வகைப்படுத்தலிற்கு முன்னர் ஆறுமாதகாலம் செலுத்தத் தவறியவையே செயற்படா முற்பணங்களென அவதானிக்கப்படலாம். (ஆறு மாத காலப்பகுதிக்கும் கூடுதலாக அனுமதிப்பது கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்திற்கு முரணாக இருப்பதுடன், செயற்றிட்டத்துடன் தொடர்பான பிரச்சனைகளை மீளாய்வு செய்வதற்கான செயற்றிட்ட இயலளவைப் பரீட்சிப்பதற்கு 6 மாத காலம் போதுமானதெனவும் கருதப்படுகிறது.)

(iii) **மாறுபாட்டிற்கான ஒப்புதல்களை கோரும் வேளையில் வங்கிகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள்**

(அ) தற்போதுள்ள பிரச்சனை கடன்பாட்டாளரின் கடன்பாட்டு இயலளவை விஞ்சியதன் காரணமாகவன்றி கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் விளைவாகவே தோன்றியதென்பதனை காட்டுகின்ற விதத்தில் கடன்வழங்கும் வங்கி நியாயமான காரணங்களை வழங்குதல் வேண்டும்.

(ஆ) சூழ் நிலைகள் தற்காலிகமான தன்மைகளைக் கொண்டதாகவும் செயற்றிட்டத்தின் நீண்டகால ஆற்றல் தன்மையினை பாதிக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

அத்தகைய சூழ்நிலைகளாவன:

1. வழங்கல் செய்யப்பட்ட பொருட்களின்/ பணிகளின் மோசமான தரம் போன்ற காரணங்களாலன்றி வாங்குனரினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக குறிப்பிட்ட/ குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் சடுதியாக இரத்துச் செய்யப்பட்டமை.

2. வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் அல்லது வேளாண்மை மற்றும் மீன்பிடிச் செயற்றிட்டங்களைப் பொறுத்தவரையில் சாதாரண தொழிற்பாடுகளைப் பாதிக்கும் உற்பத்தியைத் தாக்குகின்ற நோய்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியொன்றினுள் வழமையான தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவதற்கு வங்கியானது செயற்றிட்டத்தின் இயலளவினை உறுதிப்படுத்த வேண்டும்.

3. நிரம்பலர்/வாங்குனரின் நிலைமைகளை மோசமாகப் பாதிக்கக்கூடிய விதத்தில் பன்னாட்டுச் சந்தையில் ஏற்படும் நிகழ்வுகள்

4. குறிப்பிட்ட செயற்றிட்டங்களின் துறைகளில் தற்காலிகத் தடைகளை உருவாக்கக்கூடிய அரச சட்டவாக்கங்கள்

5. செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்திவிடக் கூடிய உள்நாட்டுக் குழப்பங்கள்

6. நீண்டகால தொழில் அமைதியின்மையின் காரணமாக செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றமை.

7. தற்காலிகமான பொருளாதார வீழ்ச்சி மற்றும் காலவோட்டத்தின் போக்கில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் குறுங்காலப்பகுதியில் சீர் செய்யப்படக்கூடிய குறிப்பிட்ட துறை.

வங்கிகள், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சூழ்நிலைகளை விளக்கி, நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் போன்ற ஆவணச் சான்றுகளின் ஆதாரங்களுடன் தற்காலிக பிரச்சனைகளைக் கட்டுப் படுத்துவதற்கும் மீள் கொடுப்பனவுகளை மீள செலுத்தவுமான கடன்பாட்டுநரின் உத்தேசத் திட்ட நடவடிக்கைகளுடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

தயவுசெய்து இச் சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/002/0005/004

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2004 செத்தெம்பர் 8

அனைத்து வர்த்தக வங்கிகளினது முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு

அன்புள்ள ஐயா

## ஏற்பாட்டு நோக்கங்களுக்காக அறவிடமுடியா மற்றும் ஐயமுற்பணங்களை வகைப்படுத்தல்

சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான செயற்றிட்டம் சார்ந்த தவணைக் கடன்கள் தொடர்பாக, வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76ஒ(1) இன் கீழ் மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட 1997 நவெம்பர் 21ஆம் நாளிடப்பட்ட பணிப்புரைகளில் குறித்துரைக்கப்பட்ட வகைப்படுத்தல் நியமத்திலிருந்து வங்கிகள் மாறுபட்டுச் செல்ல விரும்பக்கூடிய அடிப்படையின்மீது வழிகாட்டல்களை அறிமுகப்படுத்துவதற்காக 2004 ஓகத்து 19ஆம் நாளன்று நடத்தப்பட்ட உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்பாடுபற்றி குறிப்பிடுகின்றேன்.

இது தொடர்பாக வங்கிகள் பின்வரும் வழிகாட்டல்களை பின்பற்றுமாறு அறிவுறுத்தப்படுகின்றன.

## நடுத்தர மற்றும் நீண்டகால செயற்றிட்டக் கடன்களின் வகைப்படுத்தலில் மாறுபாட்டினை ஒப்புதலளித்தல் மீதான வழிகாட்டல்கள்

(i) **தகைமையுடைய முற்பணங்கள்** நடுத்தர மற்றும் நீண்டகால செயற்றிட்டக் கடன்கள் (12 மாதங்களுக்குக் கூடுதலான முதிர்ச்சியைக் கொண்ட கடன்கள்)

(ii) **அனுமதிக்கப்பட்ட மாறுபட்ட தன்மை** தற்போதுள்ள பணிப்புரைகளின்கீழ் 3 மாத காலம் நிலுவையில் உள்ளவைக்குப் பதிலாக வகைப்படுத்தலிற்கு முன்னர் ஆறுமாதகாலம் செலுத்தத் தவறியவையே செயற்படா முற்பணங்களென அவதானிக்கப்படலாம். (ஆறு மாத காலப்பகுதிக்கும் கூடுதலாக அனுமதிப்பது கொடுகடன் தகவல் பணியகச் சட்டத்திற்கு முரணாக இருப்பதுடன், செயற்றிட்டத்துடன் தொடர்பான பிரச்சனைகளை மீளாய்வு செய்வதற்கான செயற்றிட்ட இயலளவைப் பரீட்சிப்பதற்கு 6 மாத காலம் போதுமானதெனவும் கருதப்படுகிறது.)

(iii) **மாறுபாட்டிற்கான ஒப்புதல்களை கோரும் வேளையில் வங்கிகளினால் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகள்**

(அ) தற்போதுள்ள பிரச்சனை கடன்பாட்டாளரின் கடன்பாட்டு இயலளவை விஞ்சியதன் காரணமாகவன்றி கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட சூழ்நிலைகளின் விளைவாகவே தோன்றியதென்பதனை காட்டுகின்ற விதத்தில் கடன்வழங்கும் வங்கி நியாயமான காரணங்களை வழங்குதல் வேண்டும்.

(ஆ) சூழ் நிலைகள் தற்காலிகமான தன்மைகளைக் கொண்டதாகவும் செயற்றிட்டத்தின் நீண்டகால ஆற்றல் தன்மையினை பாதிக்காததாகவும் இருத்தல் வேண்டும்.

அத்தகைய சூழ்நிலைகளாவன:

1. வழங்கல் செய்யப்பட்ட பொருட்களின்/ பணிகளின் மோசமான தரம் போன்ற காரணங்களாலன்றி வாங்குனரினால் எதிர் நோக்கப்பட்ட பிரச்சனைகளின் காரணமாக குறிப்பிட்ட/ குறித்துரைக்கப்பட்ட கட்டளைகள் சடுதியாக இரத்துச் செய்யப்பட்டமை.
2. வெள்ளம், வரட்சி போன்ற இயற்கை அனர்த்தங்கள் அல்லது வேளாண்மை மற்றும் மீன்பிடிச் செயற்றிட்டங்களைப் பொறுத்தவரையில் சாதாரண தொழிற்பாடுகளைப் பாதிக்கும் உற்பத்தியைத் தாக்குகின்ற நோயாள் ஏற்றுக்கொள்ளப்பட்ட காலப்பகுதியொன்றினுள் வழமையான தொழிற்பாடுகளை மீளத் தொடங்குவதற்கு வங்கியானது செயற்றிட்டத்தின் இயலளவினை உறுதிப்படுத்த வேண்டும்.
3. நிரம்பலர்/ வாங்குனரின் நிலைமைகளை மோசமாகப் பாதிக்கக்கூடிய விதத்தில் பன்னாட்டுச் சந்தையில் ஏற்படும் நிகழ்வுகள்
4. குறிப்பிட்ட செயற்றிட்டங்களின் துறைகளில் தற்காலிகத் தடைகளை உருவாக்கக்கூடிய அரச சட்டவாக்கங்கள்
5. செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகளைத் தற்காலிகமாக இடைநிறுத்திவிடக் கூடிய உள்நாட்டுக் குழப்பங்கள்
6. நீண்டகால தொழில் அமைதியின்மையின் காரணமாக செயற்றிட்டத்தின் தொழிற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தப்படுகின்றமை.
7. தற்காலிகமான பொருளாதார வீழ்ச்சி மற்றும் காலவோட்டத்தின் போக்கில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களினால் பாதிக்கப்பட்ட நிலையில் குறுங்காலப்பகுதியில் சீர் செய்யப்படக்கூடிய குறிப்பிட்ட துறை.

வங்கிகள், வங்கி மேற்பார்வைத் திணைக்களத்திற்கு சூழ்நிலைகளை விளக்கி, நிதியியல் கூற்றுக்கள் மற்றும் காசுப்பாய்ச்சல் போன்ற ஆவணச் சான்றுகளின் ஆதாரங்களுடன் தற்காலிக பிரச்சனைகளைக் கட்டுப் படுத்துவதற்கும் மீள் கொடுப்பனவுகளை மீள செலுத்தவுமான கடன்பாட்டுநரின் உத்தேசத் திட்ட நடவடிக்கைகளுடன் சேர்த்து அனுப்பி வைத்தல் வேண்டும்.

தயவுசெய்து இச் சுற்றறிக்கை கிடைத்தமை பற்றி அறிவிக்கவும்.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

02/04/003/0400/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
*2004 திசெம்பர் 16*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

*உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

*ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வாளர் குழுமம்*

*செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் சங்கம்*

*அன்புள்ள ஐயா*

**வங்கிகளினால் வழங்கப்பட்ட கப்பற்படுத்துகை உத்தரவாதங்கள்**

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள் ஆகியவற்றின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயம் தொடர்பாகக் கலந்துரையாடப் பட்டவற்றுக்கு மேலதிகமாக, பொருட்களின் பொருட் பட்டியல் பெறுமதியில் வழங்கப்பட்ட கப்பற்படுத்தல் உத்தர வாதங்களையும் உள்ளடக்குவதற்கு வங்கிகளை இயலச் செய்யும் விதத்தில் தனியொரு கடன்பாட்டாளர் வரை யறை மற்றும் இடர்நேர்வு நிறையேற்றப்பட்ட மூலதனப் போதுமை விகிதம் என்பனவற்றுக்கான திருத்தம் இத்துடன் உள்ளடக்கப்பட்டுள்ளது.

கிடைத்தமை பற்றி தயவுசெய்து அறியத்தரவும்

உங்கள் உண்மையுள்ள
ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 19 (2) மற்றும் 19 (7) (அ) என்பனவற்றின் கீழ் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29ஆள் நாள் செய்யப்பட்ட தீர்மானங்களினால் திருத்தப்பட்டவாறான இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் செய்யப்பட்ட தீர்மானத்திற்கான திருத்தம்*

**மேற் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தின் அட்டவணை 1இன் விடயம் 19.1இன் கீழ் கப்பற்படுத்தல் உத்தரவாதங்களின் வரைவிலக்கணத்திற்கு பின்வரும் விடயம் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் சேர்க்கப்படுகின்றது.**

ஒவ்வொரு பொருள் அனுப்பலின் கீழும் உள்ள பொருட்களின் பட்டியல் பெறுமதியுடன் அவற்றிற்காக வழங்கப்படும் கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் உள்ளடக்கப்படலாம்.

ஒப்பம். **சுனில் மெண்டிஸ்**
ஆளுநர்

கொழும்பு

*2004 திசெம்பர் 15*

## 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76ஒ (1) இன் கீழ் 2000ஆம் ஆண்டு நவெம்பர் 29ஆள் நாளிடப்பட்ட பணிப்புரையினால் திருத்தப்பட்டவாறு இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபையினால் வழங்கப்பட்ட பணிப்புரைக்கான திருத்தம்*

**மேற் குறிப்பிடப்பட்ட தீர்மானத்தின் அட்டவணை 1இன் விடயம் 18.1இன் கீழ் கப்பற்படுத்தல் உத்தரவாதங்களின் வரைவிலக்கணத்திற்கு பின்வரும் விடயம் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் சேர்க்கப்படுகின்றது.**

*ஒவ்வொரு பொருள் அனுப்பலின் கீழும் உள்ள பொருட்களின் பட்டியல் பெறுமதியுடன் அவற்றிற்காக வழங்கப்படும் கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் உள்ளடக்கப்படலாம்.*

ஒப்பம். **சுனில் மென்டிஸ்**

*ஆளுநர்*

கொழும்பு

*2004 திசெம்பர் 15*

## 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46(1) இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கான திருத்தம்.*

ஒப்பம். சுனில் மென்டிஸ்

*ஆளுநர்*

கொழும்பு

*2004 திசெம்பர் 15*

## வங்கித் தொழில் சட்டம் (தனிக் கடன்பாட்டாளர் வரையறை) 1999ஆம் ஆண்டின் 2ஆம் இலக்க பணிப்புரை

*2003 நவெம்பர் 18ஆம் நாள் திருத்தப்பட்டவாறான 1999 ஒத்தோபர் 11ஆம் நாளிடப்பட்ட மேற்குறிப்பிட்ட பணிப்புரை பின்வரும் பந்திகளை பந்தி 4அ மற்றும் 5அ வினை உட்புகுத்துவதன் மூலம் இத்தால் திருத்தப் படுகின்றது.*

*4அ. மேலேயுள்ள பந்தி 4(1) இன்கீழ் மொத்த முற்பணங்களைக் கணிக்கின்ற நோக்கத்திற்காக, வழங்கப்பட்ட கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் ஒவ்வொரு பொருள் அனுப்பலின் கீழும் பொருட்களின் பொருட்பட்டியல் பெறுமதியில் உள்ளடக்கப்பட வேண்டும்.*

*5அ. மேலேயுள்ள பந்தி 3 அல்லது பந்தி 4இன் கீழ் கடன் வழங்கலின் வெளிநின்ற தொகையினை கணிக்கும் நோக்கத்திற்காக, வழங்கப்பட்ட கப்பற்படுத்தல் உத்தரவாதங்கள் ஒவ்வொரு பொருள் அனுப்பலின் கீழும் பொருட்களின் பொருட்பட்டியல் பெறுமதியில் உள்ளடக்கப்பட வேண்டும்.*

*மேலேயுள்ள திருத்தம் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வரும்.*

## 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டம்

*1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 76ஒ (1) இன் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைக்கான திருத்தம்*

ஒப்பம். **சுனில் மென்டிஸ்**

ஆளுநர்

கொழும்பு

*2004 திசெம்பர் 15*

### 76ஒ(1) ஆம் பிரிவின் கீழான பணிப்புரை

## தனியொரு கடன்படுநரின் மீதான வரையறை

பின்வரும் பந்தி 3ஆவது பந்தியாக உட்புகுத்தப்படல் வேண்டும்.

3. மேலே பந்தி 1 இன்கீழ் கடன் வழங்கலைக் கணிக்கின்ற நோக்கத்திற்காக, வழங்கப்பட்ட கப்பற்படுத்தல் உத்தரவாதங்களை பொருள் அனுப்பலின் கீழ் பொருட்களின் பொருள் பட்டியல் பெறுமதியில் உள்ளடக்க முடியும்.

மேலேயுள்ள திருத்தம் உடனடியாக தொழிற்பாட்டிற்கு வரும்.

02/04/002/0103/002

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

*2004 திசெம்பர் 16*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்*

*ஒப்புதலளிக்கப்பட்ட கணக்காய்வாளர் குழுமம்*

*செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் சங்கம்*

*அன்புள்ள ஐயா*

### ஏற்பாட்டு நோக்கங்களுக்காக பிணையங்களை பெறுமதியிடல்

உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினதும் மற்றும் உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினதும் முதன்மை நிறைவேற்று அலுவலர்களின் கூட்டத்தில் மேற்குறிப்பிட்ட விடயம் பற்றிய கலந்துரையாடல் மற்றும் 2004.10.25ஆம் நாளன்று நடத்தப்பட்ட கூட்டத்தில் எட்டப்பட்ட உடன்பாடு என்பனவற்றிற்கு புறம்பாக, 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46அ இன் நியதிகளின் கீழ் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கான பின்வரும் திருத்தங்களையும் 2003 ஒகத்து 15ஆம் நாளிடப்பட்ட பணிப்புரை 2004 யூலை 13ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை என்பனவற்றிற்கான திருத்தத்தையும் தயவுசெய்து கவனிக்கவும்.

கடிதம் கிடைத்தமை பற்றி தயவுசெய்து அறியத்தரவும்

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

## செயற்படா முற்பணங்கள் மீதான வட்டியை இடைநிறுத்தல் மற்றும் ஏற்பாட்டு நோக்கங்களுக்கான அற விடமுடியா மற்றும் ஐய முற்பணங்களின் வகைப்படுத்தல் என்பன மீதான பணிப்புரைகளுக்கான திருத்தம்: 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க வங்கித் தொழில் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 46அ இன் நியதிகளின் கீழ் வழங்கப்பட்ட ஏற்பாட்டு நோக்கங்களுக்காக பிணையங்களின் மதிப்பீடு

மேலேயுள்ள பணிப்புரையின் அட்டவணை 11இன் பிரிவு 1இன் பின்னர் பின்வரும் பந்தி உட்புகுத்தப்படல் வேண்டும்.

ரூபா ஒரு மில்லியன் (ரூ.1,000,000) அல்லது அதற்குக் குறைவான மீதியுடன் கூடிய கடன்கள் மற்றும் முற்பணங்கள் தொடர்பான கடன்களைப் பொறுத்தவரை அத்தகைய கடன்களுக்காக ஈடுவைக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகளினது தற்போதைய உள்ளக மதிப்பீடுகள் உதவிப் பொது முகாமையாளர் அல்லது கொடுகடனுக்குப் பொறுப்பான வங்கியின் ஏனைய மூத்த அலுவலரினால் கையொப்ப மிடப்பட்டிருக்குமிடத்து தற்போதைய தொழில்சார் மதிப்பீட்டு அறிக்கையொன்றினை பெற்றுக் கொள்ள வேண்டிய தேவை ஏற்புடையதாக இருக்கமாட்டாது.

"தற்போதைய உள்ளக மதிப்பீடு" என்பது வங்கியின் அலுவலரொருவரினால் மேற்கொள்ளப்பட்ட சொத்துப் பெறுமதியின் மதிப்பீடு எனவும் இரண்டாண்டுகளுக்கு மேற்பட்டதாக இருக்கக்கூடாது எனவும் வரைவிலக்கணம் செய்யப்படுகிறது.

மேற் குறிப்பிடப்பட்ட திருத்தம் உடனடியாகத் தொழிற்பாட்டிற்கு வரும்.

ஒப்பம். **சுனில் மென்டிஸ்**
ஆளுநர்

கொழும்பு

*2004 திசெம்பர் 15*

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்
*2004 திசெம்பர் 31*

*உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகள் மற்றும்*

*உரிமம் பெற்ற சிறப்பியல்புவாய்ந்த வங்கிகள்*

*ஒப்புதல்பெற்ற கணக்காய்வாளர்கள்*

*அன்புள்ள ஐயா*

## பிணையங்களை பறிமுதல் செய்தல்/ படுகடனின் பகுதியான தீர்ப்பனவு என்பன வாயிலாக பொறுப்பேற்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீடு

கடன் செலுத்தத்தவறிய வாடிக்கையாளர்களிடமிருந்து பிணையங்களை பறிமுதல் செய்ததன் காரணமாக கையேற்கப்பட்ட அல்லது படுகடனின் பகுதியளவு தீர்ப்பனவாக வங்கிகளுக்கு உரித்தாக்கப்பட்ட அசையாச் சொத்துக்கள் தொடர்பாக சில வங்கிகளினால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டு முறைகள் வங்கிகளின் சொத்துக்கள் மற்றும் வங்கிகளின் செயற்படா முற்பணங்களின் மட்டம் தொடர்பாக தவறான விளக்கங்களுக்கு இட்டுச் சென்றுள்ளமை அவதானிக்கப்பட்டிருக்கிறது.

2. அத்தகைய சொத்துக்களின் கணக்கீட்டில் வங்கிகளுக்கிடையே ஒரே சீரான நடைமுறைகளை உருவாக்குவதன் பொருட்டும் செயற்படாக்கடன்களின் மட்டம் தொடர்பான தவறான விளங்கங்களை தவிர்த்துக் கொள் வதற்குமாக, அத்தகைய சொத்துக்களை கணக்கீடு செய்வதில் அனைத்து வங்கிகளும் பின்வரும் நடைமுறை களை பின்பற்றுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றன.

2.1. கடன் செலுத்தத் தவறிய வாடிக்கையாளர்களிடமிருந்து கையேற்கப்பட்ட அல்லது படுகடனின் பகுதியளவு தீர்ப்பனவாக வங்கிகளுக்கு உரித்தாக்கப்பட்ட அசையாசச் சொத்துக்கள் வங்கியின் முதலீட்டுச் சொத்துக்களாகவோ அல்லது வங்கிச் சொத்துக்களின் ஒரு பகுதியாகவோ கணக்கிடப்படக் கூடாது. அத்தகைய சொத்துக்கள் விளக்கக் குறிப்பு அடிப்படையில் பதிவு செய்யப்படல் வேண்டும்.

2.2 அத்தகைய சொத்துக்கள் விற்பனை செய்யப்பட்டு வங்கியினால் பணம் பெறப்படும்வரை தொடர்பான வசதிகள் வங்கிகளின் ஏட்டில் வகைப்படுத்தப்பட்டு வைத்திருக்கப்படல் வேண்டும்.

3. கடன் செலுத்தத் தவறிய வாடிக்கையாளர்களிடமிருந்து கையேற்கப்பட்ட அல்லது படுகடனின் பகுதியளவான தீர்ப்பனவாக வங்கிகளுக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களை இயன்றளவுக்கு விரைவாக விற்றுத் தீர்க்குமாறு வங்கிகளைக் கோருகின்ற 1995ஆம் ஆண்டின் 33ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் பிரிவு 48 (அ) இன்பால் உங்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2004 திசெம்பர் 31

உரிமம்பெற்ற அனைத்து வர்த்தக வங்கிகளின் முதன்மை நிறைவேற்று அலுவலர்கள்

செயலாளர் நாயகம்/ இலங்கை வங்கியாளர் சங்கம்

அன்புள்ள ஐயா

## சேமிப்புக் கணக்குகளின் மீதான மீளப்பெறல்

1990 யூன் 29ஆம் நாளிடப்பட்ட சுற்றறிக்கை எண் பீஎஸ்/ 6/ 81 இன் நியதிகளின்படி குறிப்பிட்ட மாத மொன்றில் 4 தடவைகளுக்கு மேலாக பணம் மீளப் பெறப்பட்டிருக்கும் சேமிப்புக் கணக்குகளைப் பொறுத்த வரையில் அக் குறிப்பிட்ட மாதத்திற்கான வட்டிக் கொடுப்பனவுகளின்மீது விதிக்கப்பட்ட கட்டுப்பாடு உடனடியாக நடைமுறைக்கு வருமாறு அகற்றப்படுகிறது என்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

இது கிடைத்தமைபற்றி தயவு செய்து அறியத்தரவும்

உங்கள் உண்மையுள்ள

ஒப். **பணிப்பாளர், வங்கி மேற்பார்வை**

சுற்றறிக்கை எண் 35/01/005/006/04

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
*27 சனவரி 2004*

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் இச்சுற்றறிக்கையில் மேலெழுந்த வாரியாக குறிப்பிடப்பட்டுள்ளன. இத் தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2004 பெப்புருவரி 2 ஆம் நாளன்று லங்கா செகுயர் நடைமுறைப்படுத்தப் படுவதுடன் நடைமுறைக்கு வரும்.

வட்டிவீத வீச்சொன்றிற்குள் வங்கிக்ளுக்கிடையிலான வட்டி வீதங்களில் உறுதியான தன்மையினைப் பேணும் பொருட்டு உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுடனும் இதனகத்துப் பின்னர் பங்கேற்கும் நிறுவனங்கள் என அழைக்கப்படும் அரச பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களுடனும், இலங்கை மத்திய வங்கியானது திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை மேற்கொள்ளும். மத்திய வங்கியினால் பிரகடனம் செய்யப்பட்ட மீள்கொள்வனவு வீதம் (குறைந்த மட்டம்), நேர்மாற்று மீள்கொள்வனவு வீதம் (உயர்ந்த மட்டம்) என்பனவற்றின் நியதிகளில் வரைவிலக்கணப்படுத்தப்பட்ட வட்டிவீத வீச்சு தேவையானவிடத்து, மாதாந்த இடைவெளியில் அறிவிக்கப்படும், திருத்தம் செய்யப்படும், மாற்றம் செய்யப்படும்.

நாளாந்த சந்தைத் திரவத்தன்மை தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடொன்றின் அடிப்படையில், இலங்கை மத்திய வங்கியின் சந்தைத் தொழிற்பாட்டுக்குழுவானது சந்தையிலிருந்து திரவத்தன்மையினை ஈர்த்துக்கொள்ள வேண்டுமா அல்லது சந்தைக்குள் திரவத்தன்மையினைப் புகுத்தவேண்டுமா என்பதனையும், தொகையையும் எந்த வகைக் கொடுக்கல்வாங்கல்கள் வகையின் கீழ் திரவத்தன்மை ஈர்க்கப்பட அல்லது உட்புகுத்தப்பட வேண்டும் என்பதையும் தீர்மானிக்கும். இலங்கை மத்திய வங்கி உடனடி மின்னியல் விலைக்கோரல் முறை மற்றும் றொயிட்டர் திரை அல்லது காத்திரமான ஏனைய தொடர்பூட்டல் முறையொன்றினூடாக அதன் தீர்மானத்தினைச் சந்தைக்கு அறிவிக்கும். திறந்த சந்தைத் தொழிற்பாட்டினை நடத்துவதற்கு ஏலமிடும் முறை பயன்படுத்தப்படும். திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் 'மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்' 'நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்' 'உடனடிக் கொள்வனவுகள்' மற்றும் உடனடி விற்பனைகள் என்பனவற்றை உள்ளடக்கியிருக்கும். ஏலங்களில் அவற்றின் திரவத் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்யத்தவறுகின்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கான துணைநில் வசதிகளாக ஓரிரவு அடிப்படையில் மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வசதிகள் தற்போது காணப்படும் முறையே மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதங்களில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். இக்கொடுக்கல் வாங்கல்களுக்காகப் பயன்படுத்தப்படவுள்ள பிணை திறைசேரி உண்டியல்களாகவும், திறைசேரி முறிகளாகவுமிருக்கும்.

இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் பகுதிகள் அ.ஆ மற்றும் இ இன் நியதிகளின்படி பங்கேற்கும் நிறுவனத்திற்கும் இலங்கை மத்திய வங்கிக்குமிடையில் மேற்கொள்ளப்படும் அனைத்து மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களும் அத்தகைய பங்கேற்கும் நிறுவனத்திற்கும் இலங்கை மத்திய வங்கியின் நாணயச்சபைக்குமிடையில் மேற்கொள்ளப்பட்ட முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைகளின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டனவாகும். இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் பயன்படுத்தப்பட்ட நியதிகள் முதன்மை மீள்கொள்வனவு மற்றும் நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையில் அவர்கள் ஏற்றுக்கொண்டவற்றின் அதே கருத்துக்களையே கொண்டிருக்கும்.

பங்கேற்கும் நிறுவனங்களுக்கான முன்னறிவித்தலுடன் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் எந்த ஒரு நியதியையும் அத்துடன்/ அல்லது நிபந்தனைகளையும் அல்லது அவற்றின் ஒரு பகுதியினை மாற்ற, திருத்த அல்லது வேறுபடுத்துவதற்கான உரிமையை மத்திய வங்கி கொண்டிருக்கும்.

### அ. ஏலமிடும் முறையின்கீழான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள்

1. மறுஅறிவித்தல் வரை, மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான காலம் ஒரு நாளாக இருக்கும் (ஓரிரவு).

2. சந்தைத் தொழிற்பாட்டுக்குழுவானது, பணச்சந்தையிலுள்ள நாளாந்த திரவத்தன்மையினை மதிப்பீடு செய்த பின்னர் உடனடி மின்னியல் அத்துடன் அல்லது றொயிட்டர் திரை அறிவித்தல் மூலமாக 1030 மணியளவில் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து விலைக்கோரல்களைக் (விலைக்குறிப்பீடுகள்) கோரும். வழங்குவதற்கான தொகையையும் இது அறிவிக்கும்.

3. மீள்கொள்வனவு வசதியின் கீழ் முதலீடு செய்யவிரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவில் அவர்களது விலைக்கோரல்களை அதேநாளன்று 1100 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ வழங்குகின்ற தொகையினையும் வட்டி வீதத்தினையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

4. விலைக்கோரல்கள் இந்நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள உடனடி மின்னியல் விலைக்கோரல் முறைமினூடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உடனடி விலைக்கோரல் முறையில் தவறுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் தொலைபேசி மூலமான விலைக்கோரல்கள் பரிசீலனைக்கெடுக்கப்படும். தொலைபேசி மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் 15 நிமிடத்திற்குள் தொலைநகல் மூலம் இரு அதிகாரம்பெற்ற அலுவலர்களினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும். தொலைநகலின் மூலப்பிரதி உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்திற்கு அதே நாளன்று அலுவல்கள் முடிவடைவதற்கு முன்னதாக அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும்.

5. பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் ஆகக்கூடியது மூன்று விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்க முடியும். விலைக்கோரலுக்கான ஆகக்குறைந்த தொகை ஒரு மில்லியனாக இருப்பதுடன் விலைக்கோரல் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கில் இருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் அல்லது அதற்கு கூடுதலான வீதத்திலான எந்த ஒரு விலைக்கோரலும் நிராகரிக்கப்படும்.

6. ஏலத்தின் பெறுபேறுகள் உடனடி மின்னியல் விலைக்கோரல் முறை அத்துடன்/ அல்லது றொயிட்டர் திரையினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத்தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி மீள்கொள்வனவு வீதம் என்பனவற்றுடன் 1130 மணிக்கு அறிவிக்கப்படும்.

7. வெற்றி பெற்ற விலைக்கோருநர் ஒவ்வொருவருக்கும் அவர்களின் விலைக்கோரல் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் அவர்களது பங்கீடு பற்றியும் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக 1130 மணிக்கு அறிவிக்கப்படும். பங்கீடு, வெற்றி பெற்ற விலைக்கோருநர்களால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தினடிப்படையில் மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு வெற்றிபெற்ற விலைக்கோரலுக்காகவும் கோரப்பட்ட தொகைக்கு நடைமுறைச் சந்தை விலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளில் பத்திரங்களற்ற பிணையங்கள் ஒதுக்கப்படும்.

8. பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்குள் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் பற்றி உறுதிப்படுத்தல் வழங்கப்படும். உறுதிப்படுத்தல் இணைப்பு I இல் உள்ள படிவத்தினைப் பெரும்பாலும் ஒத்திருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைச் சரியான முறையில் பார்த்துக்கொள்ளுமாறும் உறுதிப்படுத்தலின் பத்திர வடிவமொன்றினைத் தமது பதிவேடுகளில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றனர். மின்னியல் விலைக்கோரல் முறையினைப் பயன்படுத்துவதில் காணப்படும் தொழில்நுட்பப் பிழைகள் காரணமாக பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைப் பார்க்க அல்லது அச்சில் பெறமுடியாமல்போகும் சந்தர்ப்பத்தில், கோரிக்கை விடப்படுமிடத்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதி ஒன்றினை தொகைநகல் மூலம் அனுப்பும்.

9. கொடுக்கல்வாங்கல்களின் தீர்ப்பனவு, லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் வசதியினூடாக வழங்கல் எதிர் கொடுப்பனவு என்ற அடிப்படையில் வழங்கப்படும். பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு/ பிணையங்களின் விற்பனைப் பெறுமதிக்கான (கொள்வனவு விலைகள்) நிதியங்களின் பெறுகைக்கெதிராக (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) லங்கா செகுயரிலுள்ள வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலமாக கொடுக்கல் வாங்கல்கள் தீர்ப்பனவு செய்யப்படுவதன் அடிப்படையில் 12.45 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ சமர்ப்பிக்கப்படும். பங்கேற்கும் நிறுவனங்கள் இது தொடர்பாக எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படவில்லை. உள்நாட்டுத் தொழிற்பாடுகளின் மீள்கொள்வனவு கணக்கிற்கு மாற்றல் செய்யப்பட்ட கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் பங்கேற்கும் நிறுவனங்களினால் வர்த்தகம் செய்யப்படக்கூடாது.

10. வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்கள், லங்கா செட்டிலில் உள்ள தங்கள் கணக்கில் பிணையங்களில் கொள்வனவு விலைகளைத் தீர்ப்பனவு செய்வதற்குப் போதுமானதான நிதி உள்ளது என்பதனை 1245

மணிக்கோ அல்லது முன்னரோ உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள் மீள்கொள்வுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யத்தவறுமாயின், இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் வழங்கப்பட்டுள்ள விதத்தில் கணிக்கப்பட்டவாறு விற்பனைப் பெறுமதிக்கும் (கொள்வனவு விலை) மீள்கொள்வனவுப் பெறுமதிக்குமிடையிலான (மீள்கொள்வனவு விலை) வேறுபாட்டிற்குச் சமமானதொரு தொகையினை மத்திய வங்கிக்கு நட்டஈடாக வழங்குவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும்.

11. முதிர்ச்சி நாளன்று (மீள்கொள்வனவு விலை) மேலே கிளைவாசகம் 9 இல் குறிப்பிடப்பட்ட அதே விதத்தில், லங்கா செகுயரில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வழங்குவதற்கெதிராக பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பிணையங்களின் மீள்கொள்வனவு விலையினைச் செலுத்துவதற்காக பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும்.

12. மீள்கொள்வனவு விலையானது கொள்வனவு விலையினையும் (ஏற்றுக்கொள்ளப்பட்ட விலை) அத்துடன் பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பிடப்பட்ட வீதத்தில் கணிக்கப்படவுள்ள வட்டிக்கூறினையும் உள்ளடக்கியிருக்கும்.

13. மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக நேர்மாற்றல் செய்வதனை இயலச் செய்யும் விதத்தில் மேலே கிளைவாசகம் 11 இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் மீள்கொள்வனவு நாளன்று லங்கா செகுயரிலுள்ள தமது உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கிடைப்பனவினை பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மீள்கொள்வனவு நாளன்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச்செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் போதுமான பிணையங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியானது மறுதரப்பினருக்கான மீள்கொள்வனவு விலைகளின் கொடுப்பனவினை தடுத்துவைப்பதுடன், மேலதிகமாக மேலே கிளைவாசகம் 10 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து நட்டஈட்டையும் அறவிடும்.

14. வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட தொகையை விஞ்சியதாக ஒரே வீதத்தில் விலைக்கோரல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் திறைசேரி உண்டியல்/முறிகளின் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை விகிதசம அடிப்படையில் அத்தகைய விலைக்கோருநர்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்படும். இதன்படி, வெட்டு வீதத்தில் விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

15. எந்த ஒரு மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான மீள்கொள்வனவு நாள் வங்கி விடுமுறை நாளாக இருக்குமிடத்து அந்த நாளன்று இடம்பெறக்கூடிய அத்தகைய மீள்கொள்வனவுகளுக்கான தரப்பினரின் எந்த ஒரு கடப்பாட்டினையும் உடனடுத்துவரும் வியாபார நாளன்று அத்தரப்பினரால் மேற்கொள்ள முடியும்.

16. தேவைப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி அதே நாளில் மேலதிக ஏலங்களையும் நடத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கிறது.

17. இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

## ஆ. நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள்

1. மறுஅறிவித்தல் வரை, மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்கான காலம் ஒரு நாளாக இருக்கும் (ஓரிரவு).

2. திறந்த சந்தைத் தொழிற்பாட்டுக்குழுவானது, பணச்சந்தையிலுள்ள நாளாந்த திரவத்தன்மையினை மதிப்பீடு செய்த பின்னர் உடனடி மின்னியல் முறை அத்துடன் அல்லது றொயிட்டர் திரை அறிவித்தல் மூலமாக அல்லது வேறு ஏதேனும் காத்திரமான தொடர்பூட்டல் முறையினூடாக 0930 மணியளவில் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து விலைக்கோரல்களைக் கோரும். வழங்குவதற்கான தொகையையும் இது அறிவிக்கும்.

3. இவ்வசதியின் கீழ் கடன்பெற விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுப் பிரிவின் வணிகப்பீடத்தில் அவர்களது விலைக்கோரல்களை அதே நாளன்று 1000 மணிக்கோ அல்லது அதற்கு முன்னரோ வழங்குகின்ற தொகையினையும் வட்டி வீதத்தினையும் சமர்ப்பிக்க வேண்டும்.

4. விலைக்கோரல்கள் இந்நோக்கத்திற்காக நிறுவப்பட்டுள்ள உடனடி மின்னியல் விலைக்கோரல் முறையினூடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். உடனடி விலைக்கோரல் முறையில் பழுது ஏற்படும் சந்தர்ப்பத்தில் மட்டும் தொலைபேசி மூலமான அல்லது தொலைநகல் மூலமான விலைக்கோரல்கள் பரிசீலனைக்கெடுக்கப்படும்.

தொலைபேசி மூலம் சமர்ப்பிக்கப்படும் விலைக்கோரல்கள் 15 நிமிடத்திற்குள் தொலைநகல் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

5. பங்கேற்கும் நிறுவனமொன்று ஒவ்வொரு கேள்விப்பத்திரத்திற்கும் ஆகக்கூடியது மூன்று விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்க முடியும். விலைக்கோரலுக்கான ஆகக்குறைந்த தொகை ஒரு மில்லியனாக இருப்பதுடன் விலைக்கோரல் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கில் இருத்தல் வேண்டும். இலங்கை மத்திய வங்கியின் நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் அல்லது அதற்கு கூடுதலான வீதத்திலான எந்த ஒரு விலைக்கோரலும் நிராகரிக்கப்படும்.

6. ஏலத்தின் பெறுபேறுகள் உடனடி மின்னியல் விலைக்கோரல் முறை அத்துடன்/ அல்லது றொயிட்டர் திரையினூடாக ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தத் தொகை மற்றும் நிறையேற்றப்பட்ட சராசரி மீள்கொள்வனவு வீதம் என்பனவற்றுடன் 1030 மணிக்கும் அறிவிக்கப்படும்.

7. வெற்றி பெற்ற பங்கேற்கும் நிறுவனம் ஒவ்வொன்றுக்கும் அவர்களின் விலைக்கோரல் ஏற்றுக்கொள்ளப்பட்டமை பற்றியும் அவர்களுக்கான பங்கீடு பற்றியும் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக 1030 மணிக்கு அறிவிக்கப்படும். பங்கீடு வெற்றிபெற்ற விலைக்கோருநர்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தினடிப்படையில் மேற்கொள்ளப்படும்.

8. பெறுபேறுகள் வெளியிடப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கிடையில் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக ஒவ்வொரு வெற்றிபெற்ற பங்கேற்கும் நிறுவனங்களுக்கும் மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்கள் பற்றி உறுதிப்படுத்தல்களை வழங்கும். உறுதிப்படுத்தல் இணைப்பு Iஇல் உள்ள படிவத்தினைப் பெரும்பாலும் ஒத்திருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைச் சரியான முறையில் பார்த்துக்கொள்ளுமாறும் உறுதிப்படுத்தலின் பத்திர வடிவமொன்றினைத் தமது பதிவேடுகளில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப் படுகின்றனர். மின்னியல் விலைக்கோரல் முறையினைப் பயன்படுத்துவதில் காணப்படும் தொழில்நுட்பப் பிழைகள் காரணமாக பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைப் பார்க்க அல்லது அச்சில் பெறமுடியாமல்போகும் சந்தர்ப்பத்தில், கோரிக்கை விடப்படுமிடத்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதி ஒன்றினை தொலைநகல் மூலம் அனுப்பும்.

9. கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவானது லங்கா செட்டிலில் கிடைக்கத்தக்கதாகவுள்ள பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கனூடாக மேற்கொள்ளப்படும். லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுத் தீர்ப்பனவுக் கணக்கிலுள்ள கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கு எதிரான கொள்வனவு விலைகளுடன் பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு வரவு வைப்பதன் மூலம், முறையானது, கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பதன் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது 1145 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா செட்டிலில் சமர்ப்பிக்கப்படும். பங்கேற்கும் நிறுவனங்கள் இது தொடர்பாக முறைக்கு எந்த ஒரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு கோரப்படவில்லை.

10. மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறிகளின் கொள்வனவு விலையானது சந்தை அபிவிருத்திகளைக் கருத்திற்கொண்டு நாளாந்தம் நிர்ணயிக்கப்படும் திறைசேரி உண்டியல்/ முறிகளின் அலுவல்சார் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படவுள்ளது. அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதியப்படுகின்றன

11. மீளவிற்கும் நாளன்று (மீள்கொள்வனவு நாள்), மேலே கிளைவாசகம் 9 இல் குறித்துரைக்கப்பட்டவாறான அதே தன்மைகளில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் மீள்விற்பனைப் பெறுமதிக்கான (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கான கொடுப்பனவுப் பெறுகைக்கு எதிராக, லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் சொந்தக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை முறையானது மாற்றல் செய்யும் அடிப்படையில், பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் சேவை 11.00 மணிக்கு லங்கா செட்டிலில் சமர்ப்பிக்கப்படும்.

12. மீளவிற்கும் பெறுமதி (மீள்கொள்வனவு விலை) கொள்வனவு செய்யப்பட்ட விலையினையும் பங்கேற்கும் நிறுவனங்களினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் கணிக்கப்படவிருக்கும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருக்கும்.

13. எந்த ஒரு நேர்மாற்று மீள்கொள்வனவின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான மீள்கொள்வனவு நாள் வங்கி விடுமுறை நாளாக இருக்குமிடத்து அந்நாளில் எழக்கூடிய நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கைக்கான தரப்பினரின் எந்த ஒரு கடப்பாட்டினையும் அத்தகைய தரப்பினர் உடனடுத்துவரும் வேலை நாளன்று மேற்கொள்ள முடியும்.

14. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் விலைக்கோரல்கள் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னர் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை கௌரவிக்கத் தவறுமிடத்து, பங்கேற்கும் நிறுவனங்கள், இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க கணிக்கப்பட்ட ஆரம்ப பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்கும் மீள்கொள்வனவு விலைக்குமிடையில் வேறுபடும் தொகைக்குச் சமனான தொகையினை நட்டஈடாக செலுத்த வேண்டும்.

15. மீள்கொள்வனவு நாளன்று, மீள்கொள்வனவு விலைகளை முழுமையாகச் செலுத்துவதற்கு தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதிகளைப் பேணுவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து, மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட உடனடிக் கொள்வனவாகக் கருதுவதற்கு மத்திய வங்கி உரித்தினைக் கொண்டுள்ளதுடன், மேலே 14 ஆவது கிளைவாசகத்தில் குறிப்பிடப்பட்டவாறு பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து நட்டஈட்டையும் அறவிடமுடியும்.

16. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களைக் கௌரவிப்பதற்கு அத்தகைய பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து மத்திய வங்கி, நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் பங்கேற்கும் நிறுவனங்களை இடைநிறுத்திக் கொள்ள முடியும்.

17. வழங்குவதற்காக முன்வைக்கப்பட்ட தொகையை விஞ்சியதாக ஒரே வீதத்தில் விலைக்கோரல்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் திறைசேரி உண்டியல்/முறிகளின் கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகை விகிதசம அடிப்படையில் அத்தகைய விலைக்கோருநர்களுக்கிடையே ஒதுக்கீடு செய்யப்படும். இதன்படி, வெட்டு வீதத்தில் விலைக்குறிப்பீடு பகுதியளவில் ஏற்றுக்கொள்ளப்படலாம்.

18. தேவைப்படுமிடத்து இலங்கை மத்திய வங்கி அதே நாளில் மேலதிக ஏலங்களையும் நடத்துவதற்கான உரிமையையும் கொண்டிருக்கிறது.

19. இலங்கை மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது.

## இ. துணை நில்வசதி

### (அ) மீள்கொள்வனவு வசதி

1. மீள்கொள்வனவு ஒரிரவு அடிப்படையில் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

2. துணைநில் வசதியின் கீழ் மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்த விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனம் கேட்டுக்கொள்ளப்படுகின்ற தொகை உட்பட இவ்வணிகம் தொடர்பான விபரங்கள் பற்றி தொலைபேசி மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு அறிவிக்குமாறும் அத்துடன் இவ்வணிகம் தொடர்பாக 30 நிமிடங்களுக்குள், ஆனால் அதே நாளன்று 1400 மணிக்குப் பிந்தாமல் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு எழுத்து மூலம் உறுதிப்படுத்திக் கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றன.

3. கொடுப்பனவு தீர்ப்பனவுத் திணைக்களம் வர்த்தகத்தில் கோரப்பட்ட தொகைக்கு அலுவல்சார் விலைகளில் பிணையங்களை ஒதுக்கும். பங்கேற்கும் நிறுவனங்களினால் வர்த்தகம் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கிடையில் ஆனால் அதேநாள் 1500 மணிக்குப் பிந்தாமல் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக பங்கேற்கும் நிறுவனங்களுக்கு மின்னியல் ரீதியாக உறுதிப்படுத்தல் வழங்கப்படும். உறுதிப்படுத்தல் இணைப்பு I இன் படிவத்தினைப் பெரும்பாலும் ஒத்திருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைச் சரியான முறையில் பார்த்துக் கொள்ளுமாறும் உறுதிப்படுத்தலின் பத்திரப் படிவமொன்றினைத் தமது பதிவேடுகளில் வைத்திருக்குமாறும் அறிவுறுத்தப்படுகின்றன. மின்னியல் விலைக்கோரல் முறையினைப் பயன்படுத்துவதில் காணப்படும் தொழில்நட்ப பிழைகள் காரணமாக பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்தல்களைப் பார்க்க அல்லது அச்சில் பெறமுடியாமல்போகும் சந்தர்ப்பத்தில், கோரிக்கை விடப்படுமிடத்து கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் அத்தகைய உறுதிப்படுத்தலின் பிரதி ஒன்றினை தொலைநகல் மூலம் அனுப்பும்.

4. இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு, பிணையங்களின் கொள்வனவு செய்யப்பட்ட விலைக்கான (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) நிதியங்களின் பெறுகைக்கு எதிராக லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவு கணக்கிற்கு ஒதுக்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் மூலம் முறையானது கொடுக்கல் வாங்கல்களை தீர்ப்பனவு செய்யும் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை 1500 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் முறைக்கு எந்த ஒரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படவில்லை.

5. பிணையங்களின் கொள்வனவு விலையினை முழுமையாக தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்களின் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளமையை அந்நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பங்கேற்கும் நிறுவனங்கள் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யத் தவறுமிடத்து, பங்கேற்கும் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்கி கணிக்கப்பட்ட விற்பனைப் பெறுமதிக்கும் (கொள்வனவு விலை) மீள்கொள்வனவுப் பெறுமதிக்குமிடையிலான (மீள் கொள்வனவு விலை) தொகைக்குச் சமமான தொகையை இலங்கை மத்திய வங்கிக்கு நட்டஈடாகச் செலுத்தப் பொறுப்புடையனவாகும்.

6. மீள்கொள்வனவு நாளன்று (முதிர்ச்சி நாள்) பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது, மேலேயுள்ள கிளைவாசகம் 4 இல் குறிப்பிடப்பட்டவாறான அதே தன்மையில் லங்கா செகுயரில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்கள் கிடைக்கப் பெற்றதும் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு பிணையங்களின் மீள்கொள்வனவு விலைகளைக் கொடுப்பனவு செய்வதற்காக 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்கப்படும்.

7. மீள்கொள்வனவு விலையானது (மீளவிற்கும் பெறுமதி) கொள்வனவு விலையினையும் மத்திய வங்கியினால் நிர்ணிக்கப்பட்ட தற்பொழுது நிலவுகின்ற மீள்கொள்வனவு வீதத்தில் கணிக்கப்படும் வட்டிக் கூறினையும் உள்ளடக்கியிருக்கும்.

8. மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக நேர்மாற்றல் செய்வதனை இயலச்செய்யும் விதத்தில் மீள்கொள்வனவு நாளன்று மேலேயுள்ள கிளைவாசகம் 6 இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் லங்கா செகுயரிலுள்ள தமது உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கிடைப்பனவினைப் பங்கேற்கும் நிறுவனங்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மீள்கொள்வனவு நாளன்று, மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச் செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் போதுமான பிணையங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் மத்திய வங்கியானது மறுதரப்பினருக்கான மீள்கொள்வனவு விலைகளின் கொடுப்பனவினை பிடித்துவைப்பதுடன், மேலதிகமாக மேலே கிளைவாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து நட்டஈட்டையும் அறவிடும்.

## ஆ. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி

1. நேர்மாற்று மீள்கொள்வனவு ஓரிரவு அடிப்படையில் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

2. நேர்மாற்று மீள்கொள்வனவின் கீழ், இலங்கை மத்திய வங்கி உடன்பாடு காணப்பட்ட திகதியன்று உடன்பாடு காணப்பட்ட விலையொன்றில் (மீள்கொள்வனவு விலை) மீள்விற்பனை செய்வதற்கான உடன்படிக்கையொன்றுடன் உடன்பாடு காணப்பட்ட விலையில் (கொள்வனவு விலை) திறைசேரி உண்டியல்/கள் மற்றும் திறைசேரிமுறி/ களை கொள்வனவு செய்யும்.

3. நேர்மாற்று மீள்கொள்வனவு வசதியைப் பயன்படுத்த விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்ட தொகை உட்பட இப்பணிகள் தொடர்பான விபரங்கள் பற்றி தொலைபேசி மூலமாக அல்லது தொலைநகல் மூலமாக உள்நாட்டுத் தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் பிரிவிற்கு அறிவிக்குமாறு கோரப்படுகின்றனர். அதன் பின்னர் மின்னியல் விலைகோரல் முறைமையில் கிடைக்கத்தக்கதாகவுள்ள வசதியினூடாக தேவைப்படும் தொகை, பத்திரங்களற்ற பிணையங்களின் விபரங்கள் என்பவற்றை இவ்வணிகம் நிகழ்வுற்ற 30 நிமிடங்களுக்குள், ஆனால் அதே நாளன்று 1400 மணிக்குப் பிந்தாமல் மின்னியல் ரீதியாக உறுதிப்படுத்த வேண்டும்.

4. நேர்மாற்று மீள்கொள்வனவு வணிக நடவடிக்கைகளின் உறுதிப்படுத்தல்கள் மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக பங்கேற்கும் நிறுவனங்களினால் வணிக நடவடிக்கைகள் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு மணித்தியாலத்திற்கிடையில் ஆனால் அதே நாள் 1500 மணிக்குப் பிந்தாமல் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு வழங்கப்படல் வேண்டும். உறுதிப்படுத்தலானது இணைப்பு I இல் உள்ள படிவத்தினைப் பெரும்பாலும் ஒத்ததாக இருக்கும். பங்கேற்கும் நிறுவனங்கள் அத்தகைய உறுதிப்படுத்தல்களை சரியான முறையில் பார்த்துக் கொள்ளுமாறும் அதன் ஒரு அச்சுப் பிரதியைத் தமது பதிவேட்டில் வைத்துக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்படுகின்றன. தொழில்நுட்பத் தவறுகளின் விளைவாக விலைக்கோரல் முறையினை அணுக முடியாமல் போனதன் விளைவாக உறுதிப்படுத்தலைப் பார்க்க அல்லது அச்சுப்பிரதியை பெற முடியாமல்போகும் சந்தர்ப்பத்தில் கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் பங்கேற்கும் நிறுவனத்தின் வேண்டுதலுக்கிணைங்க உறுதிப்படுத்தல் பிரதியொன்றை தொலைநகலில் அனுப்பும்.

5. லங்கா செகுயரில் உள்ள இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கு எதிராக பிணையங்களின் கொள்வனவு விலைக்காக (ஏற்றுக் கொள்ளப்பட்ட தொகை) பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவு கணக்கில் வரவு

வைப்பதன் மூலமாக முறையானது கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்யவுள்ளமையின் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவையானது 1515 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும். இது தொடர்பாக முறைக்கு எந்தவொரு தீர்ப்பனவு அறிவுறுத்தல்களையும் சமர்ப்பிக்குமாறு பங்கேற்கும் நிறுவனங்கள் கேட்கப்படவில்லை.

6. இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறிகளின் கொள்வனவு விலையானது அத்தகைய நோக்கத்திற்காக மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளின் அடிப்படையில் கணிக்கப்படும். திறைசேரி உண்டியல்/ முறிகளின் அலுவல்சார் விலைகள் சந்தை அபிவிருத்திகளைப் பரிசீலனையில் கொண்டு நடைமுறைச் சந்தை விலைகளை அடிப்படையாகக் கொண்டு நாளாந்த அடிப்படையில் தீர்மானிக்கப்படும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதிவு செய்யப்படுகின்றன.

7. மீளவிற்கும் நாளன்று மேலேயுள்ள கிளைவாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறான அதே நடைமுறை களைப் பின்பற்றி பிணையங்களின் மீளவிற்பனைப் பெறுமதிக்காக (மீள்கொள்வனவு விலை) இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பெறப்பட்ட கொள்வனவு விலைக்கு எதிராக லங்கா செகுயரிலுள்ள பங்கேற்கும் நிறுவனங்களுக்குச் சொந்தமான கணக்கிற்கு கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை முறை யானது மாற்றல் செய்வதன் அடிப்படையில் பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை 1100 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ லங்கா செட்டிலுக்கு சமர்ப்பிக்கப்படும்.

8. மீளவிற்கும் பெறுமதி (மீள்கொள்வனவு விலை) கொள்வனவு விலையுடன் சேர்த்து இலங்கை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட நேர்மாற்று மீள்கொள்வனவு வீதத்தில் கணிக்கப்படவுள்ள வட்டிக்கூறையும் உள்ளடக்கியிருக்கும்.

9. உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் எந்த ஒரு நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காவும் மீளவிற்கும் நாள் (மீள்கொள்வனவு வீதம்) இருக்குமாயின் அது இலங்கை மத்திய வங்கிக்கு நட்டஈடாக, இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் கணிக்கப்பட்ட ஆரம்ப பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்கும் மீள்கொள்வனவு விலைகளுக்குமிடையிலான வேறுபாட்டினை செலுத்துவதற்கு பொறுப்புடையதாகும்.

10. உறுதிப்படுத்தப்பட்ட வர்த்தக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்கள் பூர்த்தி செய்ய பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து, அது இலங்கை மத்திய வங்கிக்கு நட்டஈடாக இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் நியதிகளில் கணிக்கப்பட்ட, ஆரம்ப பிணையங்களின் கொள்வனவு விலைகளுக்கும் மீள்கொள்வனவு விலைகளுக்குமிடையிலான வேறுபாட்டினை செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும்.

11. மீள்கொள்வனவு நாளன்று மீள்கொள்வனவு விலைகளைச் செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினைப் பேணுவதற்கு அந்நிறுவனங்கள் தவறும் சந்தர்ப்பங்களில் மத்திய வங்கி நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை உடனடிக் கொள்வனவுகளாகக் கருதுவதற்கு மத்திய வங்கி உரித்துடையதாக இருப்பதுடன் மேலே கிளைவாசகம் 10 இல் தரப்பட்டுள்ளவாறு கணிக்கப்பட்ட நட்டஈட்டினை பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து அறவிடவும் உரித்துடையதாகும்.

12. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை கௌரவிப்பதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமிடத்து அத்தகைய நிறுவனங்களை நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதிலிருந்தும் மத்திய வங்கி இடைநிறுத்தலாம்.

## ஈ. திறைசேரி உண்டியல் அல்லது முறிகளின் உடனடி விற்பனை

இலங்கை மத்திய வங்கி அவசியமானவேளையில், அது விற்பனை செய்ய எண்ணியுள்ள திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் தொகை, விற்பனை செய்யப்படவுள்ள பிணையங்களின் விபரங்கள் மற்றும் பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்தான விலைக்கோரல்கள் (விலைக்குறிப்பீடு) என்பனவற்றை உடனடி மின்னியல் விலைக்கோரல் முறை அத்துடன்/ அல்லது றொயிட்டர் திரையில் அறிவிக்கும். விலைக்கோரல்கள், ஏலமிடும் நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மத்திய வங்கியிடமிருந்து எந்த திறைசேரி உண்டியலையும்/ முறியையும் கொள்வனவு செய்ய விரும்பும் பங்கேற்கும் நிறுவனமொன்று கொள்வனவு செய்யப்படவுள்ள திறைசேரி உண்டியல்/ முறி/ களின் முகப்புப் பெறுமதி திறைசேரி உண்டியல்/ முறி/ களின் தேவைப்படும் முதிர்ச்சிக்காலம் மற்றும் வட்டி வீதம் (விளைவு வீதம்) மற்றும் எதிர்பார்க்கப்படும் விலை என்பனவற்றை உள்ளடக்கிய ஆகக்கூடியது ஆறு விலைக்கோரல்களை 1400 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ மின்னியல் விலைக்குறிப்பீட்டு முறையினூடாக உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு சமர்ப்பிக்கலாம். மின்னியல் விலைக்கோரல் முறை பழுதடையும் சந்தர்ப்பத்தில் மட்டும் விலைக்கோரலை தொலைபேசி அல்லது

தொலைநகல் மூலம் சமர்ப்பிக்கலாம். தொலைபேசி மூலமாக சமர்ப்பிக்கப்பட்ட விலைக்கோரல்கள் 15 நிமிடங்களுக்குள், ஆனால் 1400 மணிக்குப் பிந்தாமல் எழுத்து மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் எந்த ஒரு சூழ்நிலையிலும் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

3. ஆகக்குறைந்த விலைக்கோரல் தொகை ஒரு மில்லியன் ரூபாவாகவும் விலைக்கோரல்கள் மில்லியனின் பெருக்குத் தொகையாவும் இருத்தல் வேண்டும்.

4. ஏற்றுக்கொள்ளப்பட்ட விலைக்கோரல்களுக்குரிய பங்கேற்கும் நிறுவனங்களுக்கு அத்தகைய ஏற்றுக்கொள்ளல்கள் பற்றியும் பிணையங்களின் தொடர்பான விற்பனை விலை பற்றியும் அதே நாளன்று 1430 மணியளவில் தொலைநகல் மூலமாக அல்லது தொலைபேசி மூலமாக அறிவிக்கப்படும். தீர்ப்பனவுகள் அடுத்த வேலை நாளில் மேற்கொள்ளப்படும்.

5. தீர்ப்பனவு நாளன்று, விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடப்பட்ட பெறுமதிக்காக இலங்கை மத்திய வங்கியின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பெறப்பட்ட நிதிகளுக்கு எதிராக வெற்றிபெற்ற விலைக்கோருநர்களுக்குச் சொந்தமான தொடர்பான கணக்குகளுக்கு விற்கப்பட்ட பிணையங்களை மாற்றல் செய்வதன் வாயிலாக முறையானது கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்வதன் அடிப்படையில் 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை லங்கா செகுயருக்கு சமர்ப்பிக்கப்படும்.

6. விற்கப்பட்ட பிணையங்களின் கழிவிடல் பெறுமதியானது வெற்றிபெற்ற தொடர்பான விலைக்கோருநர்களினால் கோரப்பட்ட திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறிகள் எதுவோ அவற்றின் வீதம்/ விலைகள் மற்றும் திறைசேரி உண்டியல்/ முறிகளில் முதிர்ச்சி நாள் என்பனவற்றின் அடிப்படையில் கணிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனமொன்றின் விலைக்கோரல் மத்திய வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் அது பங்கேற்கும் நிறுவனமொன்றின் கடப்பாடாக அமைவதுடன் அக்கொடுக்கல் வாங்கல் நிறைவேற்றத் தவறுமிடத்து (பங்கேற்கும் நிறுவனத்தினால் கொள்வனவு செய்தல்) பங்கேற்கும் நிறுவனங்களினால் விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு கொள்வனவு விலைமீது மத்திய வங்கிக்கு வட்டிக்கூறினை இழப்பீடாகச் செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும்.

8. வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ஒரே வீதத்தில் விலைக்கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில், கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையானது விகிதசம அடிப்படையில் விலைக்கோருநர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

9. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரல்களை ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மத்திய வங்கி கொண்டிருக்கிறது.

## திறைசேரி உண்டியல்களின்/ திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவு

1. இலங்கை மத்திய வங்கி அவசியமானவேளையில் அது வாங்குவதற்கு எண்ணியுள்ள திறைசேரி உண்டியல்கள்/ முறிகளின் தொகை முதிர்ச்சிக்காலம் ஆகிய விபரங்களுடன் உடனடி மின்னியல் விலைக்கோரல் முறை அத்துடன்/ அல்லது றொயிட்டர் திரையில் அறிவிக்கும். விலைக்கோரல்கள் ஏலமிடும் நாளன்று 1300 மணிக்கும் 1400 மணிக்குமிடையில் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. மத்திய வங்கியினால் குறிக்கப்பட்ட முதிர்ச்சியைக் கொண்ட எந்த ஒரு திறைசேரி உண்டியலை/ முறியை/ களை விற்பனை செய்ய விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனங்கள் இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவின் வணிகபீடத்தில் அவர்களது விலைக்கோரல்களை பின்வரும் விபரங்களுடன் அதே நாளன்று 1400 மணிக்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

   i) விற்கப்படவுள்ள திறைசேரி உண்டியல்/ முறிகளின் முகப்புப் பெறுமதி
   
   ii) திறைசேரி முறியினைப் பொறுத்தவரையில் நறுக்கு வீதமும் நறுக்கு திகதியும்
   
   iii) எதிர்பார்க்கப்படும் வட்டி வீதமும் (விளைவுவீதம்) விலையும்
   
   iv) விற்பனைக்காக முன்வைக்கப்பட்ட திறைசேரி உண்டியல்/ முறிகளின் முதிர்ச்சித்திகதி

3. பங்கேற்கும் நிறுவனங்கள் அவற்றின் விலைக்கோரல்களை உடனடி மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பித்தல் வேண்டும். உடனடி மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில் விலைக்கோரல்களை தொலைபேசியூடாகவும் சமர்ப்பிக்க முடியும். இது 15 நிமிடத்திற்கிடையில் எழுத்து மூலமாக உறுதிப்படுத்தப்பட வேண்டும். அதன் பின்னர் எந்த ஒரு சூழ்நிலையிலும் விலைக்கோரல்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

4. பங்கேற்கும் நிறுவனங்கள் ஆகக்கூடியது ஆறு விலைக்குறிப்பீடுகளைச் சமர்ப்பிக்கலாம். விலைக்கோரலின் ஆகக்கூடிய தொகை ஒரு மில்லியன் ரூபாவாகவும் விலைக்கோரல்கள் ஒரு மில்லியன் ரூபாவின் பெருக்கங்களாகவும் இருத்தல் வேண்டும்.

5. ஏற்றுக் கொள்ளப்பட்ட பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவலர்களுக்கு அத்தகைய ஏற்றுக்கொள்ளல் பற்றி மின்னியல் விலைக்கோரல் முறையினூடாக அதே நாளன்று 1430 மணியளவில் அறிவிக்கப்படும். தீர்ப்பனவுகள் அடுத்த வேலைநாளன்று மேற்கொள்ளப்படும்.

6. லங்கா செகுயரிலுள்ள இலங்கை மத்திய வங்கியின் சொந்தக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் பெறுகைக்கு எதிராக பிணையங்களின் கொள்வனவு செய்யப்பட்ட பெறுமதிக்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் உள்ள வெற்றிபெற்ற விலைக்கோருநர்களின் தொடர்பான தீர்ப்பனவுக் கணக்குகளில் முறை வரவு வைக்கவுள்ளதன் அடிப்படையில் 0830 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ பொருத்தம் செய்யப்பட்ட வர்த்தக வழங்கல் கோவை சமர்ப்பிக்கப்படும்.

7. பங்கேற்கும் நிறுவனமொன்றின் விலைக்கோரல் மத்திய வங்கியால் ஏற்றுக்கொள்ளப்பட்டவுடன் பங்கேற்கும் நிறுவனத்தின் கடப்பாடாக அமைவதுடன், அக் கொடுக்கல் வாங்கல்களை நிறைவேற்றத் தவறுமிடத்து (பங்கேற்கும் நிறுவனமொன்றால் விற்பனை செய்யப்படல்) பங்கேற்கும் நிறுவனத்தால் விலைக் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் முதிர்ச்சிக்கு எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு விற்பனைப் பெறுமதி மீதான வட்டித் தொகைக்கு சமமான தொகையினை மத்திய வங்கிக்கு செலுத்துவதற்கு பங்கேற்கும் நிறுவனங்கள் பொறுப்புடையனவாகும்.

8. வழங்குவதற்கு முன்வைக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ஒரே விதத்தில் விலைக்கோரல்கள் காணப்படும் சந்தர்ப்பத்தில், கிடைக்கத்தக்கதாகவுள்ள தொகையானது "விகிதசம" அடிப்படையில் விலைக்கோருநர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும்.

9. பங்கேற்கும் நிறுவனங்களினால் செய்யப்படும் திறைசேரி உண்டியல்/திறைசேரி முறிகளின் விற்பனைக்கான எந்த ஒரு விலைக்கோரலையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை மத்திய வங்கி கொண்டிருக்கிறது.

பணிப்பாளர்

**உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்**

**சுற்றறிக்கை எண் 35/01/005/0006/05**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

27 சனவரி 2004

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## லங்கா செட்டிலிலுள்ள மீதான பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிரான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்

லங்கா செட்டில் முறையின் விதிகளில் தரப்பட்டவாறு, அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையின் சுமூகமான தொழிற்பாடுகளுக்கு வசதியளிக்குமுகமாக, லங்கா செட்டில் முறையின் மீது தகைமையுடைய பங்கேற்கும் நிறுவனங்களுக்கு இலங்கை மத்திய வங்கியானது, அதன் தற்றுணிபின்படி ஒரு நாளுக்குள்ளான திரவ வசதியின்கீழ் நிதியினை வழங்கலாம். சாதாரணமாக குறித்துரைக்கப்பட்ட வணிகரல்லா விலைக்கோருநர்கள் தவிர்ந்த லங்கா செட்டிலில் உள்ள அனைத்து நேரடிப் பங்குபற்றுநர்களும் ஒரு நாளுக்கான திரவ வசதிக்கு தகைமையுடையவராவர்.

பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்படும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் ஏற்பாடுகளுடன் தொடர்பான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் 2004 பெப்புருவரி 2ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வருவதுடன் இவை பங்கேற்கும் நிறுவனங்களுக்கான நியாயமான அறிவித்தலுடன் மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் திருத்தப்படலாம் அல்லது மாற்றப்படலாம்.

1. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின்கீழான நிதிகள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள்கொடுப்பனவிற்காக குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ வெளிநிற்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியை பங்கேற்கும் நிறுவனங்கள் மீள்கொடுப்பனவு செய்வதன் மூலமாக குறிப்பிட்ட பிணையங்கள் இந்நிறுவ்னங்களினால் மீள்கொள்வனவு செய்யப்படும் என்ற நிபந்தனையின் மீது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு இணங்க பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு தகைமையுடைய பிணையங்களை மாற்றல் செய்ததும் கட்டணங்களெதுவுமின்றி வழங்கப்படுகின்றன.

2. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான தகைமையைப் பெறுவதற்கு அனைத்து தகைமை பெற்ற பங்கேற்கும் நிறுவனங்களும் மத்திய வங்கியுடன் விபரிக்கப்பட்ட படிவமொன்றில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி உடன்படிக்கையொன்றில் கையொப்பமிட வேண்டும்.

3. மத்திய வங்கி, அதன் தற்றுணிபின்படி ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்காக ஏற்றுக் கொள்ளப்படத்தக்கதாக இருக்கும் தகைமையுள்ள பிணையத்தின் வகையைத் தீர்மானிக்கும். தற்பொழுது இலங்கை மத்திய வங்கியானல் வழங்கப்பட்ட பத்திரங்களற்ற அனைத்து திறைசேரி உண்டியல்களும் பத்திரங்களற்ற திறைசேரி முறிகளும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையாகப் பயன்படுத்துவதற்கு தகைமையுடையனவாகும்.

4. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினைப் பெற்றுக்கொள்வதற்கு விரும்புகின்ற பங்கேற்கும் நிறுவனமொன்று, முன்னைய வேலை நாளன்று பி.ப 4.00 மணிக்கு முன்னதாக லங்கா செகுயரிலுள்ள அவர்களின் பங்கேற்பாளர்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கில் போதுமானளவு தகைமையுள்ள பிணையங்களை மீள வைத்துக்கொள்ள வேண்டும். மத்திய வங்கி, பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கில் அத்தகைய நேரத்தில் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் தகைமையுள்ள பிணையங்களின் (கீழே கிளைவாசகம் 6 இல் தரப்பட்டுள்ளவாறு தீர்மானிக்கப்படும்) பெறுமதி அளவிற்கு மட்டுமே ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை வழங்கும்.

5. ஒவ்வொரு வேலை நாளின் தொடக்கத்திலும், பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கில் கிடைக்கத்தக்கதாகவிருக்கும் தகைமையுள்ள பிணையங்கள் லங்காசெகுயரிலுள்ள மத்திய வங்கியின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கில் தன்னியக்கமாகவே மாற்றல் செய்யப்படுவதுடன் தகைமையுள்ள பிணையங்களின் பெறுமதி அத்தகைய நோக்கங்களுக்காக மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அலுவல்சார் விலைகளை அடிப்படையாகக் கொண்டு கணிக்கப்பட்டு

அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையிலுள்ள ஒவ்வொரு பங்கேற்கும் நிறுவனங்களினதும் தீர்ப்பனவுக் கணக்கில் மு.ப 8.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ வரவு வைக்கப்படும்.

6. மேலேயுள்ள கிளை வாசகம் 5 இல் குறிப்பிடப்பட்ட தகைமை பெற்ற பிணையங்களின் அலுவல்சார் விலைகள், நடைமுறைச் சந்தை விலைகள் மற்றும் சந்தை அபிவிருத்திகளைக் கணக்கிலெடுத்து அவற்றின் அடிப்படையில் நாளாந்த ரீதியில் மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்படும். அத்தகைய அலுவல்சார் விலைகள் லங்கா செகுயரில் பதிவு செய்யப்படுகின்றன. அத்தகைய அலுவல்சார் விலைகளின் பட்டியலொன்று, பங்கேற்கும் நிறுவனங்களின் கோரிக்கையின் பேரிலான தகவல்களுக்காக இலங்கை மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கும்.

7. விதி விலக்கான சூழ்நிலைகளில், வேலை நாளன்று அலுவல்சார் விலைகளைத் திருத்துவதற்கும் திருத்தப்பட்ட அலுவல்சார் விலைகளை அடிப்படையாகக் கொண்டு பிணையாக வழங்கப்பட்ட பிணையங்களை மீள்மதிப்பீடு செய்வதற்குமான உரிமையை மத்திய வங்கி கொண்டுள்ளது. அத்தகைய மீள்மதிப்பீடுகள் பிணையாக வழங்கப்பட்ட பிணையங்களை குறைநிரப்ப வேண்டிய தேவையைப் பங்கேற்கும் நிறுவனங்களுக்கு தோற்றுவிக்குமாயின், உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம் பங்கேற்கும் நிறுவனங்களை மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதிக்கு மத்திய வங்கயின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு மேலதிக தகைமை வாய்ந்த பிணையங்களை மாற்றம் செய்வதன் மூலமாக அத்தகைய மீள்நிரப்பல்களை மேற்கொள்ளுமாறு பங்கேற்கும் நிறுவனங்களைக் கேட்டுக்கொள்ளும். அத்தகைய சந்தர்ப்பத்தில், அத்தகைய கோரிக்கை இடம்பெற்று 1 மணித்தியாலத்திற்கிடையில் பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கியின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு அத்தகைய மேலதிக பிணையங்களை மாற்றல் செய்ய வேண்டும்

மத்திய வங்கியினால் கேட்டுக்கொள்ளப்பட்டவாறு மீள்நிரப்பலை பங்கேற்கும் நிறுவனங்கள் வழங்க முடியாத சந்தர்ப்பத்தில், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் வழங்கப்பட்ட நிதியின் பிணையிடப்படாத தொகையின் அளவிற்கு அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையிலுள்ள பங்கேற்கும் கொடுகடன் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிலிருந்து அறவிட்டுக்கொள்ளும் உரிமையினை மத்திய வங்கி கொண்டிருக்கிறது.

8. வேலைநாளின் ஆரம்பத்தில் பெறப்பட்ட ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகள் கொடுப்பனவுக் கடப்பாடுகளை ஈடுசெய்யப் போதுமானதாக இல்லாத சந்தர்ப்பத்தில், பங்கேற்கும் நிறுவன மொன்றிற்கு ஒரு நாளைக்கு மூன்று மேலதிகக் கொடுப்பனவையே ஆகக்கூடுதலாக எடுக்கமுடியும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, வேலைநாளின்போது குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளுக்கான மேலதிக எடுப்பனவுகள் அனுமதிக்கப்படும். மேலதிக எடுப்பனவுகளுக்கான குறித்துரைக்கப்பட்ட நேரம் மு.ப 10.00 மணி முப. 1200 மணி மற்றும் பி.ப 2.00 மணியாகும்.

9. மேலதிக எடுப்பனவுகளுக்கான கோரிக்கைகள், மத்திய வங்கியின் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் பணிப்பாளருக்கு பி. 1.30 மணிக்கோ அல்லது அதற்கு முன்போ தொலைபேசியூடாக மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் அத்தகைய மேலதிக எடுப்பனவுகள் அனுமதிக்கப்படுமாயின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியிலிருந்து அத்தகைய மேலதிக எடுப்பனவுகளுக்கான பிணைகளால் பயன்படுத்திக் கொள்வதற்கு பொருத்தமான குறித்துரைக்கப்பட்ட நேரத்திலோ அல்லது அதற்கு முன்போ பங்கேற்கும் நிறுவனங்கள் லங்கா செகுயரிலுள்ள பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கில் போதுமான தொகை கொண்ட தகைமையுள்ள பிணையங்களை மீள நிலைநிறுத்திக் கொள்ள வேண்டும்.

10. அத்தகைய கோரிக்கை கிடைக்கப்பெற்றதும் மத்திய வங்கி குறித்துரைக்கப்பட்ட பொருத்தமான நேரத்தில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் அத்தகைய மேலதிக எடுப்பனவுகளுக்கான ஒழுங்குகளைச் செய்யும். அத்தகைய மேலதிக எடுப்பனவுகளை வழங்குவதற்கு ஏற்படும் செலவினை பங்கேற்கும் நிறுவனங்களிடமிருந்து அறவிடுவதற்கான உரிமையை மத்திய வங்கி கொண்டுள்ளது.

11. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் கடன்பட்ட நிதியங்களை பங்கேற்கும் கொடுகடன் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மீள் கொடுப்பனவிற்காக குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளச்செலுத்தி பிணையாக வழங்கப்பட்ட பிணையங்களை முழுதாகவோ அல்லது

பகுதியாகவோ மீளப் பெற்றுக்கொள்ள முடியும். குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு முன்னதாக ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் கடன்பட்ட நிதியத்தினை மீளச்செலுத்த விரும்பும் பங்கேற்கும் நிறுவனங்கள் உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாட்டுப் பிரிவிற்கு அத்தகைய மீள்கொடுப்பனவுகள் பற்றி அதாவது தொகை மற்றும் பிணையங்களின் விபரங்கள் பற்றி பி.ப. 2.00 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ தொலைபேசி மூலமாக அறிவித்தல் வேண்டும். அத்தகைய கோரிக்கையானது இரு அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்களினால் சரியான முறையில் கையெழுத்திடப்பட்ட எழுத்து மூலமான உறுதிப்படுத்தல் தொலைநகல் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் கடன்பட்ட நிதியினை வேலை நாளொன்றில் முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ மீளச்செலுத்துவதற்கு (அதாவது இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளை மீளச்செலுத்தவதற்கான குறித்துரைக்கப்பட்ட நேரத்திற்கு முன்பாக, ஒவ்வொரு வேலை நாளன்று ஒரு தரம் மட்டுமே பங்கேற்பாளர்கள் அனுமதிக்கப்படுவர்.

12. அத்தகைய உறுதிப்படுத்தல் கிடைக்கப்பெற்றதும், உள்நாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம், ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் வெளிநின்ற நிதி முழுவதையும் அல்லது அதன் ஒரு பகுதியை அறவிடுவதற்காக பிணையங்களின் தொடர்பான பகுதியினை திருப்பியளிப்பதற்கான ஒழுங்குகளைச் செய்வதற்காக கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்திற்கு கோரிக்கையை அனுப்பி வைக்கும். நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களின் புறந்தள்ளலுக்கான நியம வழங்கல் எதிர் கொடுப்பனவு நடைமுறை அத்தகைய கொடுப்பனவுகள் தொடர்பாகப் பின்பற்றப்படும் அதாவது கொடுப்பவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம் வழங்கல் எதிர்கொடுப்பனவு செய்திகளை உள்ளீடு செய்வதுடன் பங்கேற்கும் நிறுவனங்கள் பெறுகை எதிர்கொடுப்பனவு செய்திகளை பி.ப 2.30 மணிக்கோ அல்லது முன்னதாகவோ உள்ளீடு செய்யலாம். இது முறையினால் பொருத்தம் செய்யப்பட்டு தீர்ப்பனவு செய்யப்படும்.

13. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையாக வழங்கப்பட்ட பிணையங்களுக்கு பதிலீடுகளை வழங்குவது அனுமதிக்கப்பட மாட்டாது.

14. ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிகளின் அனைத்து வெளிநின்ற நிலுவைகளும் ஒவ்வொரு வேலை நாளன்றும் பி.ப 3.15 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ பங்கேற்கும் நிறுவனங்களினால் தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். இந்நோக்கத்திற்காக, வெளிநிற்கும் எந்த ஒரு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியையும் அறவிடுவதற்கு மத்திய வங்கியை இயலச் செய்யும் விதத்தில் பங்கேற்கும் நிறுவனங்கள், குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையில் உள்ள அவர்களின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளமையை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

15. வெளிநிற்கும் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியினை அறவிடும் செயற்பாடு பி.ப 3.15 மணிக்கு கணனி முறையினால் தன்னியக்கமாகவே ஆரம்பமாகும். இது மத்திய வங்கியின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிலிருந்து பங்கேற்பாளர்களின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு பிணையங்களின் மீளளிப்பை உருவாக்கும். தீர்ப்பனவுக் கோரிக்கை வழங்கல் எதிர் கொடுப்பனவு நியதிகளில் அதேநேர மொத்த தீர்ப்பனவு முறைக்கு சமர்ப்பிக்கப்படும். இது மத்திய வங்கியின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிலிருந்து பங்கேற்பாளரின் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக் கணக்கிற்கு நிதியங்களை மாற்றல் செய்வதற்கான அறிவுறுத்தலொன்றுடன் பொருத்தம் செய்யப்படும். ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் மாற்றிப் பதிதல் ஆரம்ப விலைகளிலும் ஆரம்ப கொடுக்கல் வாங்கல் பெறுமதியிலும் மேற்கொள்ளப்படும்

16. மேலே கிளைவாசகம் 14 இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதியின் கீழ் வெளிநின்ற தொகைக்கு மத்திய வங்கிக்கு முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு, எந்த ஒரு காரணத்தின் பொருட்டும் பங்கேற்கும் நிறுவனங்கள் தவறுமாயின், அத்தகைய பங்கேற்கும் நிறுவனமொன்று அவ்வாறு வெளிநின்ற முழுத்தொகையினையும் செலுத்தத்தவறிவிட்டது எனக் கருதப்படுவதுடன் கீழே கிளைவாசகம் 18 இல் காட்டப்பட்டவாறு செலுத்தத் தவறிய வட்டியைச் செலுத்தப் பொறுப்புடையதாக இருக்கும்.

17. மேலேயுள்ள கிளைவாசகத்தில் (16) குறிப்பிடப்பட்டுள்ளவாறு பங்கேற்கும் நிறுவனமொன்று செலுத்தத்தவறி இருக்கிறது என கருதப்படுமிடத்து, அத்தகைய பங்கேற்கும் நிறுவனம் அடுத்த வேலை நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக செலுத்தத்தவறிய தொகையை முழுமையாக மீளச்செலுத்திவிட வேண்டும். இந்நோக்கத்திற்காக, அத்தகைய பங்கேற்கும் நிறுவனம் அடுத்த வேலை நாளன்று நண்பகல் 12 மணிக்கோ அல்லது அதற்கு முன்னதாகவோ கணனி முறைக்கு பெறுகை எதிர்கொடுப்பனவு செய்தியொன்றினை சமர்ப்பித்தல் வேண்டும். இது கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுத் திணைக்களத்தின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தீர்ப்பனவுப் பிரிவினால் கணனி முறைக்கு சமர்ப்பிக்கப்பட்ட வழங்கல் எதிர்கொடுப்பனவு செய்திகளுடன் பொருத்தம் செய்யப்படும். பங்கேற்கும் நிறுவனமொன்று செலுத்தத்தவறிய தொகையினை முழுமையாக மீளச்செலுத்துவதற்கு அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியம் கிடைக்கத்தக்கதாகவுள்ளமையினை அடுத்த வேலை நாளன்று வியாபாரம் முடிவடைகையில் அல்லது அதற்கு முன்னதாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பங்கேற்கும் நிறுவனங்கள் செலுத்தத்தவறிய தொகையை அடுத்த வேலை நாளன்று வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் முழுமையாகச் செலுத்தத்தவறும் சந்தர்ப்பத்தில் அத்தகைய நிதியங்களுக்கு எதிராக வழங்கப்பட்ட பிணையங்களைப் பிடித்துவைப்பதற்கும், அவை தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் மத்திய வங்கிக்கு உரிமையுண்டு.

18. அவ்வாறு செலுத்தத் தவறுகின்ற முதலாவது சந்தர்ப்பத்தில், மத்திய வங்கியினால் காலத்திற்குக்காலம் அறிவிக்கப்படும் வங்கி வீதத்திற்கு சமமான வீதத்தில் பங்கேற்கும் நிறுவனத்தின் மீது செலுத்தத்தவறிய வட்டி வீதம் விதிக்கப்படுவதுடன், அதனைத் தொடர்ந்து கலண்டர் ஆண்டிற்குள் வரும் செலுத்தத்தவறிய ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் அத்தகைய செலுத்தத்தவறும் சந்தர்ப்பங்களில் அத்தகைய செலுத்தத்தவறிய வட்டி வீதம் 100 சதவீத அடிப்படைப் புள்ளிகளினால் அத்தகைய செலுத்தத்தவறும் சந்தர்ப்பங்கள் ஒரு மாதத்தில் ஒரு தடவைக்கும் கூடுதலாக இருக்குமிடத்து ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்காக வழங்கப்பட்ட பிணையங்களைப் பிடித்து வைத்திருக்கும் உரிமையினை மத்திய வங்கி கொண்டிருப்பதுடன், இக்கிளைவாசகத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தத்தவறிய வட்டியின் மீது கட்டணம் விதிப்பதற்கான உரிமைக்குப் புறம்பாக மத்திய வங்கி பொருத்தமான முறையில் இவற்றைக் கையாளும். மீண்டும் மீண்டும் செலுத்தத்தவறும் சந்தர்ப்பங்களில் மத்திய வங்கி பங்கேற்கும் நிறுவனத்திற்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் கிடைப்பனவினை மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒருகாலப்பகுதிக்கு புறக்கீடு செய்து கொள்ளலாம்.

19. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய ஏற்பாடுகள் காணப்பட்டபோதும் செலுத்தத் தவறியமை ஒரு மாத காலப்பகுதிக்குள் ஒரு முறைக்கு மேல் நிகழாமலும் இருக்குமிடத்து, மத்திய வங்கியானது அதன் ஏக தற்றுணிபின்படி, செலுத்தத்தவறிய சூழ்நிலையை கருத்திற்கொண்டு பிணையங்களைப் பிடித்துவைக்க மத்திய வங்கி பொருத்தமான முறையில் இவற்றைக் கையாளுவதற்கு தீர்மானிக்கும்.

20. இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் மற்றைய ஏற்பாடுகள் காணப்பட்டபோதும், செலுத்தத் தவறிய சூழ்நிலையினை கருத்திற்கொண்டு மத்திய வங்கி அதன் ஏக தற்றுணிபின்படி பங்கேற்கும் நிறுவனங்களுக்கான ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் கிடைப்பினை நிரந்தரமாக அல்லது மத்திய வங்கியினால் தீர்மானிக்கப்படும் ஒரு காலப்பகுதிக்கு புறக்கீடு செய்து கொள்ளலாம்.

பணிப்பாளர்

**உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்**

**சுற்றறிக்கை எண்** 35/01/005/0006/06

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

27 சனவரி 2004

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள்

2004 பெப்புருவரி 2 ஆம் நாளன்று லங்கா செகுயர், பத்திரங்களற்ற பிணையங்கள் தீர்ப்பனவு முறை மற்றும் மத்திய வைப்பகமுறை என்பன நடைமுறைக்கிடப்பட்டதன் காரணமாக இலங்கை மத்திய வங்கி, லங்கா செகுயரில் வைக்கப்படும் பத்திரங்களற்ற அரச பிணையங்களின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளை நடத்த தொடங்கும். மத்திய வங்கி வசமுள்ள அரச பிணையங்களின் உருவமழிக்கப்பட்டு 2004 பெப்புருவரி 2 ஆம் நாளிலிருந்து பத்திரங்களற்ற வடிவத்தில் கிடைக்கத்தக்கதாக இருக்கும். ஆகவே குறிப்பிட்ட இந்நாளிலிருந்து அனைத்து மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்களும் உடனடி விற்பனைகளும் முழுமையாக பத்திரங்களற்ற பிணையங்கள் வடிவிலேயே மேற்கொள்ளப்படும்.

எனினும், பங்கேற்கும் நிறுவனங்கள் அவை வசமுள்ள அரச பிணையங்களின் முழு இருப்பையும் உருவ மற்றதாக்குவதற்கு இன்னும் சில காலம் எடுக்கக்கூடுமாகையால், 2004 ஏப்பிறல் 30 ஆம் நாள் வரையான மூன்று மாதங்களைக் கொண்ட இடைக்காலப்பகுதியில் மத்திய வங்கி, நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல்வாங்கல்கள் மற்றும் உடனடிக் கொள்வனவுகள் தொடர்பான வணிகத்தினை பத்திரப் பிணையங்களில் நடத்த அனுமதிக்கும். அதன் பின்னர் திறந்த சந்தைத் தொழிற்பாடுகளின் கீழான கொடுக்கல் வாங்கல்கள் முழுவதும் பத்திரங்களற்ற அரச பிணையங்களிலேயே மேற்கொள்ளப்படும்.

இடைக்காலப்பகுதியில் பின்வரும் மேலதிக அறிவுறுத்தல்கள் ஏற்புடையதாகும்.

அ. திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் தொடர்பாக 2003.09.03 ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பத்திர வடிவிலான நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஏற்புடையதாகும்.

ஆ. பத்திரங்களற்ற அரச பிணையங்களின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான 2004.01.27 ஆம் நாளன்று இலங்கை மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் பத்திரங்களற்ற பிணையங்களின் நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்கும் ஏற புடையதாக இருக்கும்.

இ. ஏலமிடும் முறையின் கீழ், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களுக்காக பங்கேற்கும் நிறுவனமொன்று ஆறு விலைக்கோரல்களைச் சமர்ப்பிக்க அனுமதிக்கப்பட்டது. விலைக்கோரல்கள் பத்திரங்கள் அத்துடன்/அல்லது பத்திரங்களற்ற வடிவிலான பிணையங்களுக்கானதாக இருக்கலாம். எனினும், பங்கேற்கும் நிறுவனங்கள் ஒரு விலைக்கோரலில் பத்திரங்கள் மற்றும் பத்திரங்களற்ற பிணையங்கள் இரண்டினையும் உள்ளடக்குவதற்கு அனுமதிக்கப்படவில்லை.

ஈ. துணைநில் வசதியின் கீழ், நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களுக்காக, பத்திரங்கள் மற்றும் பத்திரங்களற்ற வடிவிலான இரு பிணையங்களையும் தனியொரு வணிக நடவடிக்கையில் உள்ளடக்க அனுமதிக்கப்படவில்லை. பத்திரங்கள் மற்றும் பத்திரங்களற்ற வடிவிலான பிணையங்களின் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக பங்கேற்கும் நிறுவனங்கள் தனித்தனி வணிக நடவடிக்கைகளிலேயே மேற்கொள்ள வேண்டும்.

பணிப்பாளர்

**உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்**

சுற்றறிக்கை எண் 35/01/005/0006/07

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்

3 மே 2004

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

**லங்கா செட்டிலுள்ள பத்திரங்களற்ற அரச பிணையங்களுக்கெதிராக ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி ஏற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்**

இது, மேற்குறிப்பிட்ட தொழிற்கூட்டு அறிவுறுத்தல்கள் மீதான 2004 சனவரி 27 ஆம் நாளிடப்பட்ட எனது சுற்றறிக்கை எண் 35/01/005/006/05 தொடர்பானது.

குறிப்பிட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் 16 ஆவது கிளைவாசகம் கீழேயுள்ளவாறு வாசிக்கப்படும் விதத்தில் உடனடியாக நடைமுறைக்கு வரும் விதத்தில் திருத்தப்படுகிறது.

16. பங்கேற்கும் நிறுவனமொன்று, காரணம் எதுவாக இருப்பினும், ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதியின் கீழ் வெளிநின்ற தொகையை, அதே நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக முழுமையாகத் தீர்ப்பனவு செய்யத் தவறுமிடத்து, பங்கேற்கும் நிறுவனமானது அவ்வாறு வெளிநின்ற முழுத்தொகையினையும் செலுத்தத் தவறிவிட்டது எனக் கருதப்படுவதுடன் கீழே கிளைவாசகம் 18 இல் குறிப்பிட்டவாறு செலுத்தத்தவறிய வட்டியைக் கொடுப்பனவு செய்ய பொறுப்புடையதாகும். அத்தகைய செலுத்தத்தவறிய வட்டித் தொகை இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்பு நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் அடுத்த வேலை நாளன்று பற்று வைக்கப்படும்.

பணிப்பாளர்

**உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்**

சுற்றறிக்கை எண் 35/01/005/0006/08

*உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்*
*3 மே 2004*

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும் முதனிலை வணிகர்களுக்கும்*

## பத்திரங்களற்ற அரச பிணையங்களில் இலங்கை மத்திய வங்கியின் திறந்த சந்தைத் தொழிற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

இது, மேலேயுள்ள தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் மீதான 2004 சனவரி 27 ஆம் நாளிடப்பட்ட எனது சுற்றறிக்கை எண் 35/01/005/006/04 தொடர்பானது.

மேற்குறிப்பிடப்பட்ட தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களின் விடயம் அ இன் கிளைவாசகம் 10 மற்றும் 13 (ஏலமுறையின் கீழான மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களள்) விடயம் ஆ இன் கிளைவாசகம் 15 (நேர்மாற்று நேர்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்), விடயம் இ(அ) இன் கிளைவாசகங்கள் 5 மற்றும் 8 (மீள்கொள்வனவு வசதி) மற்றும் விடயம் இ இன் கிளைவாசகம் 11 (நேர்மாற்று மீள்கொள்வனவு வசதி) மற்றும் விடயம் ஈ இன் கிளைவாசகம் 7 (திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரி முறிகளின் உடனடி விற்பனை) மற்றும் திறைசேரி உண்டியல்/ திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவு என்ற தலைப்பின் கீழான கிளைவாசகம் 7 என்பன பின்வருமாறு வாசிக்கப்படும் விதத்தில் இத்தால் உடனடியாக திருத்தப்படுகின்றன.

### அ. ஏலமிடும் முறையின் கீழான மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

10. வெற்றி பெற்ற பங்கேற்பு நிறுவனங்கள் லங்கா செட்டிலுள்ளவாறு தீர்ப்பனவுக் கணக்கில் பிணையங்களில் கொள்வனவு விலையினைத் முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளது என்பதனை 1245 மணிக்கோ அல்லது அதற்கு முன்பாகவோ உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். பங்கேற்கும் நிறுவனமொன்று அதே நாளன்று லங்கா செகுயர் வியாபாரத்தினை மூடிவிடுவதற்கு முன்னர் மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களைத் தீர்ப்பனவு செய்ய தவறுமிடத்து, பங்கேற்கும் நிறுவனங்கள் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ளவாறு கணிக்கப்பட்ட விற்பனவுப் பெறுமதிக்கும் (கொள்வனவு விலை) மீள்கொள்வனவுப் பெறுமதிக்குமிடையிலான (மீள்கொள்வனவு விலை) வேறுபாட்டிற்குச் சமமான தொகையொன்றினை மத்திய வங்கிக்கு நட்டஈடாகச் செலுத்துவதற்கு பொறுப்புடையனவாகும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும். கொடுக்கல் வாங்கல்கள் ஒன்றிற்கும் கூடுதலான பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கத்தினைக் கொண்ட பிணையங்களுடன் தொடர்பானவையாயின் அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணையங்களிடையான எண்ணும், இக்கிளைவாசகத்தின் நோக்கத் திற்காக தனித்தனி மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்.

13. பங்கேற்கும் நிறுவனங்கள் மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச்செய்யும் விதத்தில் மேலே கிளைவாசகம் 11 இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் மீள்கொள்வனவு நாளன்று லங்கா செகுயரிலுள்ள அவர்களது உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கிடைப்பனவை உறுதி செய்துகொள்ள வேண்டும். மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச்செய்யும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் மீள்கொள்வனவு நாளன்று பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் போதுமான பிணையங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் மேலே கிளைவாசகம் 10 இல் குறிப்பிடப்பட்டவாறு பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு நட்டஈட்டினைச் செலுத்தப் பொறுப்புடையனவாகும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்பு நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

## ஆ. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

15. பங்கேற்கும் நிறுவனங்கள் மீள்கொள்வனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர் மீள்கொள்வனவு விலையினை முழுமையாகச் செலுத்துவதற்கு அவற்றின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினை பேணத்தவறும் சந்தர்ப்பத்தில், மத்திய வங்கி, நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கியின் உடனடிக் கொள்வனவாகக் கருதுவதற்கும் அதற்கும் புறம்பாக மேலே கிளைவாசகம் 14 இல் குறிப்பிடப்பட்டவாறு கணிக்கப்பட்ட நட்டஈட்டினைப் பங்கேற்கும் நிறுவனத்திடமிருந்து அறவிடவும் உரித்துடையதாகும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும். கொடுக்கல் வாங்கல்கள், ஒன்றிற்கும் கூடுதலான அடையாள இலக்கத்தினைக் கொண்ட பிணையங்களுடன் தொடர்பானவையாயின் அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணையங்களின் அடையாள எண்களும் இக்கிளைவாசகத்தின் நோக்கத்திற்காக தனித்தனி மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்.

## இ. துணைநில் வசதி

### அ. மீள்கொள்வனவு வசதி

5. பங்கேற்கும் நிறுவனங்கள், பிணையங்களின் கொள்வனவு விலையினை முழுமையாகத் தீர்ப்பனவு செய்யும் விதத்தில் அதன் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதி கிடைக்கத்தக்கதாகவுள்ளமையை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். அதே நாளன்று, லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக கொடுக்கல் வாங்கல்களை முழுமையாகத் தீர்ப்பனவு செய்வதற்கு பங்கேற்கும் நிறுவனமொன்று தவறுமாயின், பங்கேற்கும் நிறுவனம் இத்தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ளவாறு கணிக்கப்பட்ட விற்பனவுப் பெறுமதிக்கும் (கொள்வனவு விலை) மீள்கொள்வனவுப் பெறுமதிக்குமிடையிலான (மீள்கொள்வனவு விலை) வேறுபாட்டிற்குச் சமமான தொகையொன்றினை மத்திய வங்கிக்கு நட்டஈடாகச் செலுத்துவதற்குப் பொறுப்புடையதாகும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனத்தின் தீர்ப்பனவுக் கணக்கிற்கு பற்று வைக்கப்படும். கொடுக்கல் வாங்கல்கள் ஒன்றிற்கும் கூடுதலான பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கத்தினைக் கொண்ட பிணையங்களுடன் தொடர்பானவையாயின் அத்தகைய ஒவ்வொரு பன்னாட்டு பிணையங்களின் அடையாள எண்ணும் இக்கிளைவாசகத்தின் நோக்கத்திற்காகத் தனித்தனி மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்.

8. பங்கேற்கும் நிறுவனங்கள், மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச்செய்யும் விதத்தில், மேலேயுள்ள கிளைவாசகம் 6 இல் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில், மீள்கொள்வனவு நாளன்று லங்கா செகுயரிலுள்ள அவர்களது உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களின் கிடைப்பனவை உறுதி செய்து கொள்ள வேண்டும். மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களை முழுமையாக மாற்றுவதனை இயலச்செய்யும் விதத்தில் குறித்துரைக்கப்பட்ட நேரத்தில் மீள்கொள்வனவு நாளன்று பங்கேற்கும் நிறுவனங்களின் உள்நாட்டு தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கில் போதுமான பிணையங்கள் காணப்படாத சந்தர்ப்பத்தில் மேலே கிளைவாசகம் 5 இல் குறிப்பிடப்பட்டவாறு பங்கேற்கும் நிறுவனங்கள் மத்திய வங்கிக்கு நட்டஈட்டினை செலுத்தப் பொறுப்புடையனவாகும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்பு நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும்.

### ஆ. நேர்மாற்று மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்கள்

11. பங்கேற்கும் நிறுவனமொன்று, மீள்கொள்வனவு நாளன்று, லங்கா சிகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னர், மீள்கொள்வனவு விலையினை முழுமையாகச் செலுத்துவதற்கு அவற்றின் தீர்ப்பனவுக் கணக்கில் போதுமான நிதியினை பேணத்தவறும் சந்தர்ப்பத்தில், மத்திய வங்கி, நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல் வாங்கல்களை மத்திய வங்கியின் உடனடிக் கொள்வனவாகக் கருதுவதற்கும், அதற்குப் புறம்பாக மேலே கிளைவாசகம் 10 இல் குறிப்பிடப்பட்டவாறு கணிக்கப்பட்ட நட்டஈட்டினைப் பங்கேற்கும் நிறுவனத்திடமிருந்து அறவிடவும் உரித்துடையதாக இருக்கும். அத்தகைய நட்டஈடுகள் அடுத்த வேலை நாளன்று இலங்கை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் தீர்ப்பனவுக் கணக்கில் பற்று வைக்கப்படும். கொடுக்கல் வாங்கல்கள், ஒன்றிற்கும் கூடுதலான அடையாள இலக்கத்தினைக் கொண்ட

பிணையங்களுடன் தொடர்பானவையாயின் அத்தகைய ஒவ்வொரு பிணையங்களின் அடையாள எண்களும் இக்கிளைவாசகத்தின் நோக்கத்திற்காக, தனித்தனி மீள்கொள்வனவுக் கொடுக்கல் வாங்கல்களாகக் கருதப்படும்.

**ஈ. திறைசேரி உண்டியல் அல்லது திறைசேரி முறிகளின் உடனடி விற்பனை**

7. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரலை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வதன் மூலம் அது பங்கேற்கும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனத்தின் கொள்வனவு) கௌரவிக்கத்தவறும் பங்கேற்கும் நிறுவனங்கள் முதிர்ச்சிக்கு இன்னமும் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட விதத்தில் விற்பனைப் பெறுமதி மீதான வட்டிக் கூறிற்கு சமமான தொகையினை மத்திய வங்கிக்கு நட்டஈடாகச் செலுத்தும் பொறுப்பினைக் கொண்டனவாக இருக்கும். அத்தகைய தொகை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் கணக்கிற்கு தீர்ப்பனவு நாளினைத் தொடர்ந்துவரும் அடுத்த வேலை நாளன்று பற்று வைக்கப்பட வேண்டும்.

**திறைசேரி உண்டியல்களின்/ திறைசேரி முறிகளின் உடனடிக் கொள்வனவு**

7. பங்கேற்கும் நிறுவனங்களின் விலைக்கோரலை இலங்கை மத்திய வங்கி ஏற்றுக்கொள்வதன் மூலம் அது பங்கேற்கும் நிறுவனங்களைக் கட்டுப்படுத்துவதுடன் தீர்ப்பனவு நாளன்று லங்கா செகுயரின் வியாபாரம் முடிவடைவதற்கு முன்னதாக கொடுக்கல் வாங்கல்களை (பங்கேற்கும் நிறுவனவிற்பனை) கௌரவிக்கத்தவறும் பங்கேற்கும் நிறுவனங்கள் முதிர்ச்சிக்கு இன்னமும் எஞ்சியுள்ள காலப்பகுதிக்கு பங்கேற்கும் நிறுவனத்தினால் குறிப்பீடு செய்யப்பட்ட வீதத்தில் விற்பனைப் பெறுமதி மீதான வட்டிக் கூறிற்கு சமமான தொகையினை மத்திய வங்கிக்கு நட்டஈடாகச் செலுத்தும் பொறுப்பினைக் கொண்டனவாக இருக்கும். அத்தகைய தொகை மத்திய வங்கியுடனான பங்கேற்கும் நிறுவனங்களின் கணக்கிற்கு தீர்ப்பனவு நாளினைத் தொடர்ந்துவரும் அடுத்த வேலை நாளன்று பற்று வைக்கப்பட வேண்டும்.

பணிப்பாளர்

**உள்நாட்டு தொழிற்பாட்டுத் திணைக்களம்**

**சுற்றறிக்கை எண் 35/01/005/0010/01**

உள்நாட்டுத் தொழிற்பாட்டுத் திணைக்களம்
22 ஒத்தோபர் 2004

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

## நாணயக் கடிதத்திற்கு எதிரான அளவுத் தேவைப்பாடுகள்

உயர்ந்த எண்ணெய் விலைகளின் விளைவாக அதிகரித்த இறக்குமதிச் செலவினத்தினைக் கருத்திற் கொண்டு மத்திய வங்கியின் நாணயச்சபை இறக்குமதியில் ஏற்படும் அதிகரிப்பினைக் கட்டுப்படுத்துகின்ற தற்காலிக நாணய வழிமுறையொன்றினைப் பின்பற்ற தீர்மானித்திருக்கிறது.

இதன்படி, நாணய விதிச் சட்டத்தின் (அத்தியாயம் 422) 103 ஆம் பிரிவின் ஏற்பாட்டு நியதிகளுக்கிணங்க, நாணயச்சபையானது நாணயக் கடிதங்களை திறக்கும் வங்கிகள் அத்தகைய நாணயக் கடிதம் திறக்கப்படுகின்ற வேளையில் அத்தகைய நாணயக் கடிதத்தினை உள்ளடக்கும் விதத்தில் ஆகக் குறைந்தது 100 சதவீதம் கொண்ட காசு வைப்பொன்று செய்யப்பட்டிருந்தாலொழிய, அட்டவணை 'அ' இல் (இணைக்கப்பட்டுள்ளது) குறித்துரைக் கப்பட்ட ஊர்திகளின் இறக்குமதிக்காக, 2004 ஒத்தோபர் 22 ஆம் நாள் வியாபாரம் முடிவடைந்ததிலிருந்து வர்த்தக வங்கிகளினால் நாணயக் கடிதமெதுவும் திறக்கப்படக்கூடாது என வர்த்தக வங்கிகளைப் பணிக்கின்ற கட்டளையொன்றினை பிறப்பித்தது.

அட்டவணை 'அ' இல் குறிப்பிடப்படுகின்ற பொருட்களின் இறக்குமதியை உள்ளடக்குகின்ற தற்போதுள்ள நாணயக் கடிதங்களைப் பொறுத்தவரையில் மேலேயுள்ள பந்தியில் விபரிக்கப்பட்டுள்ள நியதிகளில் தவிர, அத்தகைய நாணயக் கடிதங்களின் பெறுமதியில் அதிகரிப்புக்களைச் செய்ய வங்கிகள் அனுமதியளிக்கக்கூடாது.

நாணயச்சபையின் பணிப்புரைகளுக்கு இணங்கி ஒழுகுமாறு வர்த்தக வங்கிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றன.

பணிப்பாளர்/ உள்நாட்டு தொழிற்பாடுகள்
**இலங்கை மத்திய வங்கி நாணயச்சபையின்**
**அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்**

## அட்டவணை அ
## நாணயக் கடிதத்தின் மீது 100 சதவீத அளவு தேவைப்படுகின்ற விடயங்களின் பட்டியல்

| I | II | III |
|---|---|---|
| இணங்குவிக்கப் பட்ட தலைப்பு | இணங்குவிக்கப் பட்ட குறியீடு | விபரம் |
| 87.02 | | ஓட்டுநர் உட்பட பத்து அல்லது அதற்கும் கூடுதலான ஆட்கள் பயணிக்கக்கூடிய உந்து ஊர்திகள் |
| | 8702.10 | அமுத்த-வெப்பமூட்டல் உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்ரன் எந்திரத்துடன் கூடியது |
| | 8702.10.01 | மூன்றாண்டு பழமையை விஞ்சாத பத்து பயணிகள் இருக்கையினைக் கொண்ட நிசான் பெற்றல், மின்சுபிசி பஜிரோ, டோயேட்டா, லான்ட் குறூஸ்சர், நேஞ்றோவர் மற்றும் அதையொத்த வான் வாகனங்கள் |
| | 8702.10.02 | மூன்றாண்டு பழமையை விஞ்சாத பத்து பயணிகள் இருக்கையினைக் கொண்ட நிசான் பெற்றல், மின்சுபிசி பஜிரோ, டோயேட்டா, லான்ட் குறூஸ்சர், நேஞ்றோவர் மற்றும் அதையொத்த வான் வாகனங்கள் |
| | 8702.10.03 | ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதினைந்து இருக்கைகளை விஞ்சாத இயலளவைக் கொண்ட இயலளவு |
| | 8702.10.04 | ஐந்தாண்டுகளை விஞ்சாத பழமையான ஓட்டுநர் உட்பட வழமையான பதினைந்து இருக்கைகளை விஞ்சாத இயலளவைக் கொண்ட இயலளவு |
| | 8702.90 | ஏனையவை |
| | 8702.90.01 | மூன்றாண்டு பழமையை விஞ்சாத பத்து பயணிகள் இருக்கையினைக் கொண்ட நிசான் பெற்றல், மின்சுபிசி பஜிரோ, டோயேட்டா, லான்ட் குறூஸ்சர், நேஞ்றோவர் மற்றும் அதையொத்த வான் வாகனங்கள் |
| | 8702.90.02 | மூன்றாண்டு பழமையை விஞ்சாத பத்து பயணிகள் இருக்கையினைக் கொண்ட நிசான் பெற்றல், மின்சுபிசி பஜிரோ, டோயேட்டா, லான்ட் குறூஸ்சர், நேஞ்றோவர் மற்றும் அதையொத்த வான் வாகனங்கள் |
| 87.03 | | நிலைய பாரவண்டிகள் மற்றும் ஓட்டப்பந்தய ஊர்திகள் உட்பட (சுங்க வழிகாட்டியின் இணங்குவிப்பு தலைப்பு 8702 இன் கீழ் விபரிக்கப்பட்ட விடயங்கள் தவிர) ஆட்களின் போக்குவரத்திற்காக முக்கியமாக வடிவமைக்கப்பட்ட உந்து ஊர்திகள் |
| | 8703.10 | பனிக்கட்டிகளில் பயணிக்கக்கூடிய வண்டிகள், ஹோல்வ் ஊர்திகள் மற்றும் அதையொத்த ஊர்திகள் |
| | 8703.10.01 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தமை |
| | 8703.10.02 | மூன்றரை ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | | தீப்பொறி பரப்பும் உள்ளக வெப்பமுறக்கூடிய பரிவர்த்தனை பிஸ்டன் எந்திரம். |
| | 8703.21 | 1000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவு |
| | 8703.21.05 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத ஏனைய சிறப்பியல்பு வாய்ந்த போக்குவரத்து ஊர்திகள் |
| | 8703.21.06 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஏனைய சிறப்பியல்பு வாய்ந்த போக்குவரத்து ஊர்திகள் |
| | 8703.21.12 | மூன்றரை ஆண்டுகளை (3 1/2) விஞ்சாத பழைமை வாய்ந்த மற்றைய ஊர்திகள் |
| | 8703.21.13 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த மற்றைய ஊர்திகள் |
| | 8703.22 | 1000 சி.சி யை விஞ்சிய ஆனால் 1500 சிசி யினை விஞ்சாத உருளை இயலளவு |
| | 8703.22.07 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.22.08 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.23 | 1500 சி.சி யை விஞ்சிய ஆனால் 3000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவு |
| | 8703.23.07 | 2000 சி.சி யை விஞ்சாத இயலளவைக் கொண்ட ஆனால் மூன்றரை ஆண்டுகளுக்கு மூன்றரை (3 1/2) குறைவான பழைமை வாய்ந்தவை |
| | 8703.23.08 | 2000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவுடன் மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | 8703.23.10 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தவை |
| | 8703.23.11 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | 8703.24 | 3000 சி.சி இனை விஞ்சிய உருளை இயலளவைக் கொண்டவை |
| | 8703.24.07 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தவை |
| | 8703.24.08 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | | அமுத்த-தீர்ப்பனவு உள்ளக வெப்பமுறக்கூடிய பிஸ்டன் எந்திரம் (டீசல் அல்லது ஓரளவு டீசல்) |
| | 8703.31 | 1500 சி.சி இனை விஞ்சாத இயலளவினைக் கொண்ட உருளை |
| | 8703.31.07 | நிலைய பாரவண்டிகள் உள்ளிட்ட உந்துஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைய ஓட்டப்போட்டிகள் |

| | | |
|---|---|---|
| | 8703.31.08 | நிலைய பார வண்டிகள் உந்துஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஓட்டப்போட்டி ஊர்திகள் |
| | 8703.31.10 | ஐந்து ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்த வான் வகை ஊர்திகள் |
| | 8703.31.11 | ஐந்து ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த வான் வகை ஊர்திகள் |
| | 8703.31.12 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.31.13 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சிய பழைமை வாய்நத ஏனையவை |
| | 8703.32 | 1500 சி.சி யை விஞ்சிய ஆனால் 2500 சி.சி யை விஞ்சாத இயலளவைக் கொண்ட உருளைகள் |
| | 8703.32.05 | ஐந்து ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்த வான் வகை ஊர்திகள் |
| | 8703.32.06 | ஐந்து ஆண்டுகளை விஞ்சிய பழைமை வாய்ந்த வான் வகை ஊர்திகள் |
| | 8703.32.07 | நிலைய பார ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் 2000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட ஓட்டப்போட்டி ஊர்திகள் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தவை |
| | 8703.32.08 | நிலைய பார ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் 2000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட ஓட்டப்போட்டி ஊர்திகள் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சிய பழைமை வாய்ந்தவை |
| | 8703.32.10 | 2000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட ஏனையவை. ஆனால் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தவை |
| | 8703.32.11 | 2000 சி.சி யை விஞ்சாத உருளை இயலளவைக் கொண்ட ஏனையவை. ஆனால் மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | 8703.32.12 | நிலைய பார வண்டிகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்த 2000 சி.சி யை விஞ்சிய உருளை அளவைக் கொண்ட ஓட்டப்போட்டி ஊர்திகள் |
| | 8703.32.13 | நிலைய பார வண்டிகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளை கூடுதலான பழைமை வாய்ந்த 2000 சி.சி யை விஞ்சிய உருளை அளவைக் கொண்ட ஓட்டப்போட்டி ஊர்திகள். |
| | 8703.32.14 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.32.15 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.33 | 2500 சி.சி யை விஞ்சிய சிலிண்டர் இயலளவைக் கொண்டவை |
| | 8703.33.05 | நிலைய பார ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு |
| | | குறைவான பழைமை வாய்ந்தவை |
| | 8703.33.06 | நிலைய பார ஊர்திகள் உள்ளிட்ட உந்து ஊர்திகள் மற்றும் மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | 8703.33.07 | ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்த வான் வகை ஊர்திகள் |
| | 8703.33.08 | ஐந்து ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த வான் வகைகள் |
| | 8703.33.10 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.33.11 | மூன்றரை 3 1/2 ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஏனையவை |
| | 8703.90 | ஏனையவை |
| | 8703.90.01 | மின்பொருட்கள் - மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்தவை |
| | 8703.90.02 | மின்பொருட்கள் - மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| | 8703.90.03 | ஏனையவை மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்தவை |
| | 8703.90.04 | மூன்றரை (3 1/2) ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |
| 87.04 | | பொருள் போக்குவரத்திற்கான உந்து ஊர்திகள் |
| | | ஏனையவை அழுத்திகளுடன் கூடிய தீப்பொறி உள்ளக பிஸ்டன் எந்திரங்கள் (டீசல் அல்லது |
| | | ஓரளவு டீசல்) |
| | 8704.21 | ஐந்து தொன்களை விஞ்சாதவை |
| | 8704.21.01 | 3000 கி.கிறாம்களை விஞ்சாத ஆனால் 5 ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்த |
| | | ஜீப் வகை வான்கள் |
| | 8704.21.02 | 3000 கி.கிறாம்களை விஞ்சாத 5 ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஜீப் வகை வான்கள் |
| | 8704.21.12 | ஐந்து ஆண்டுகளை விஞ்சாத பழைமை வாய்ந்தவை |
| | 8704.21.13 | ஐந்து ஆண்டுகளை விஞ்சிய பழைமை வாய்ந்தவை |
| | | ஏனையவை |
| | | தீப்பொறி சுவாலை உள்ளக அழுத்திப் பிஸ்டல் எந்திரங்கள் |
| | 8704.31 | ஐந்து தொன்களை விஞ்சாதவை |
| | 8704.31.01 | 3000 கி.கிறாம்களை விஞ்சாத 3 ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்த ஜீப் வகை வான்கள் |
| | 8704.31.02 | 3000 கி.கிறாம்களை விஞ்சாத 3 ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்த ஜீப் வகைகள் |
| | 8704.31.10 | ஐந்து ஆண்டுகளுக்கு குறைவான பழைமை வாய்ந்தவை |
| | 8704.31.11 | ஏனையவை ஐந்து ஆண்டுகளுக்கு கூடுதலான பழைமை வாய்ந்தவை |

தொடர்பு 06/05/01/2004

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு 1
2004 சனவரி 06

வெளிநாட்டு செலாவணி தொடர்பில்

அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்

அன்புள்ள ஐயா

## மடகாஸ்கரிலிருந்து இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவொன்றாக இரத்தினக்கல் வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல்

வளர்ச்சியாற்றல் கொண்ட கைத்தொழிலாக அடையாளங் காணப்பட்டிருக்கும் இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் ஆபரணக் கைத்தொழிலை அபிவிருத்தி செய்யும் ஒரு வழி முறையாக, இறக்குமதிகளின் முற்பணக் கொடுப்பனவாக மடகாஸ்கருக்கு பயணம் செய்யும் வேளையில் இரத்தினக்கல் வணிகர்கள் தம்முடன் எடுத்துச் செல்லும் வெளிநாட்டுச் செலாவணியிலிருந்து மடகாஸ்கரிலிருந்து பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களை கொள்வனவு செய்து இறக்குமதி செய்வதற்கும் ஏற்ற விதத்தில் சிறப்பு வெளிநாட்டுச்செலாவணி வசதியினை அவர்களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே, மடகாஸ்கருக்குப் புறப்படவுள்ள பதிவு செய்யப்பட்ட இரத்தினக்கல் வணிகர்கள், இரத்தினக் கற்களின் கொள்வனவுச் செலவு, மற்றும் மடகாஸ்களில் ஏற்படும் தனிப்பட்ட செலவுகள் என்பனவற்றை ஈடுசெய் வதற்காக, தேசிய இரத்திக்கல், ஆபரண அதிகாரசபையிடமிருந்து அவரின் செலாவணிக்கான கோரிக்கையின்மீது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குமாறு விதந்துரைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படுகின்ற விதந்துரைப்புக் கடிதத்தினை சமர்ப்பிக்குமிடத்து அவர்களுக்கு ஐ.அ.டொலர் 15,000வரையான (இதில் ஐ.அ.டொலர் 5,000 மாத்திரம் நாணயத் தாள்களாகவும் மீதி பயணிகள் காசோலையாக அல்லது வங்கி வரைவாகவும் வழங்கப்படல் வேண்டும்) வெளிநாட்டுச் செலாவணியினை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும்போது, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் விதந்துரைப்புக் கடிதம் யாருக்கு முகவரியிடப்பட்டதோ அந்த அங்கீகாரம் பெற்ற வணிகர்கள் இரத்தினக்கல் வணிகரிடமிருந்து பின்வருவனவற்றை மேற்கொள்வர் என்ற உத்தரவாத மொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(அ) செலாவணி விடுக்கப்பட்டு 45 நாட்களுக்கிடையில் விடுவிக்கப்பட்ட செலாவணியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரத்தினக் கற்களை இலங்கைக்கு அவர் கொண்டுவர வேண்டியதுடன் இலங்கைக்கு அவர் வரும்வேளையில் அவ்வாறு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களின் அளவு பெறுமதி ஆகிய விபரங்களை தருகின்ற சுயமாகத் தயாரிக்கப்பட்ட பொருட் பட்டியலை மூன்று பிரதிகளில் புறக்குறிப்பீடு செய்வதற்காக இலங்கைச் சுங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். (வெளிநாட்டுச் செலாவணி விடுவிக்கப்பட்டு 60 நாட்களுக்கிடையில் இலங்கைச் சுங்கத்தினால் புறக்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஒரு பொருள் பட்டியல் வெளிநாட்டுச் செலாவணி யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேளையில் மற்றையது தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

(ஆ) அவரினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத அனைத்து வெளிநாட்டு செலாவணியினையும் அவர் நாட்டிற்குள் கொண்ட வரவேண்டியதுடன் அவ்வாறு கொண்டுவந்த வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரம் பெற்ற வணிகர்களிடம் ஏழு நாட்களுக்குள் சமர்ப்பித்தல்

வேண்டும். (இதற்கான சான்றினை வெளிநாட்டுச் செலாவணி யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.)

(இ) இணைப்பு 1இல் உள்ள படிவத்தில், அவர் பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களின் கொள்வனவிற்கும், தனிப்பட்ட விடயங்களுக்குமாக வெவ்வேறாகச் செலவிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஆகிய விபரங்களடங்கிய முழுமையான கணக்குக்கூற்றினை பயன்படுத்தப்படாத வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் ஒப்படைத்த சான்றுடன் சேர்த்து செலாவணி விடுவிக்கப்பட்ட 60 நாட்களுக்கிடையில் அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் அவர் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட உத்தரவாதங்களையும் தேவைப்பாடுகளையும் இரத்தினக்கல் வணிகர்கள் நிறைவேற்றத் தவறும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணி விடுவிக்கப்பட்ட மூன்று மாத காலப்பகுதிக்குள் மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கும் அறிவிக்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,

ஒப்பம். **எச். ஏ. ஜி. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

இணைப்பு - 1

**இரத்தினக் கற்களின் கொள்வனவிற்காக மடகாஸ்கருக்கு பயணம் செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பான கணக்குக் கூற்று**

| நோக்கம் | கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை | செலவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை | பயன்படுத்தப்படாத மீதி |
|---|---|---|---|
| இரத்தினக் கற்களின் கொள்வனவு | | | |
| தனிப்பட்ட செலவு | | | |
| மொத்தம் | | | |

- வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி:
- வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்:
- மடகாஸ்கருக்குச் சென்ற திகதி:
- இலங்கைக்கு வருகை தந்த திகதி:
- பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தை ஒப்படைத்த திகதி:
- வெளிநாட்டு நாணயம் விற்பனை செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்:
  (வெளிநாட்டு நாணயம் ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்று இணைக்கப்பட்டுள்ளது)

மேலேயுள்ள தகவல்கள் எல்லாம் உண்மையானதும் சரியானதுமென நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**இரத்தினக்கல் வணிகரின் கையொப்பம்**

தொடர்பு 06/05/02/2004

செலாவணிக் கட்டுப்பாட்டு த் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு 1
2004 மார்ச்சு 09

*அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

*அன்புள்ள ஐயா*

**முற்பணக் கொடுப்பனவு நியதிகளில் செய்யப்பட்ட இறக்குமதிகள் மீதான கண்காணிப்புத் திட்டம்**

முற்பணக் கொடுப்பனவு நியதிகளின்மீது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களுக்காக வழங்கப்பட்ட கால அவகாசம் 30 நாட்களிலிருந்து 90 நாட்களுக்கு நீடிக்கப்பட்ட2003 திசெம்பர் 18 நாளிடப்பட்ட இறக்குமதி ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகளின்பால் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களினதும் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

இத்தளர்த்தலின் காரணமாக, ஒழுங்கு விதிகளுக்கிணங்க இறக்குமதிகள் மேற்கொள்ளப்படுகின்றன என்பதனை உறுதிப்படுத்துவதற்காக பொருத்தமான கண்காணிப்பு திட்டமொன்று மிக அவசியமானதொன்றாக இருக்கிறது.

இதன்படி, அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இறக்குமதிப் பொருட்களுக்கான முற்பணக் கொடுப்பனவாக வெளிநாட்டுச் செலாவணியினை விற்பனை செய்யும் பொழுது கீழே குறிப்பிடப்பட்ட நடைமுறைகளை பின்பற்றுமாறு இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள்.

(1) அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் இறக்குமதியாளர்களினால் சரியான முறையில் நிரப்பப்பட படிவம் 1இன் இரு பிரதிகளை மாதிரிப் பொருட் பட்டியலுடன் சேர்த்து பெற்றுக்கொள்ள வேண்டியதுடன் முற்பணக் கொடுப்பனவிற்கான வெளிநாட்டுச் செலாவணியின் விற்பனை நாளிலிருந்த 90 நாட்களுக்கிடையில் இறக்குமதிப் பொருட்களின் சான்றினை(அதாவது சுங்கத்தினால் சரியாக முத்திரையிடப்பட்ட வர்த்தக ரீதியான பொருட்பட்டியலின் ஒரு பிரதியையும் சுங்க வெளிப்படுத்துகையின் பிரதியொன்றியையும்) அவர் சமர்ப்பிப்பார் என்பதனை உறுதிப்படுத்தும் விதத்தில் இணைக்கப்பட்ட படிவத்தில் உத்தரவாதமொன்றினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(2) மாதிரிப் பொருட் பட்டியலின் பிரதி ஒன்றும் உத்தரவாதப்படுத்தலின் பிரதியொன்றும், 1998 திசெம்பர் 24ஆம் நாளிடப்பட்ட எண் ஈசி/07/98 கொண்ட எமது தொழிற்பாட்டு அறிவுறுத்தலின் நியதிகளின்படி செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய படிவம் 1இன் மூலத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(3) படிவம் 1இன் இரு பிரதிகளிலொன்றையும், பொருட் பட்டியலின் பிரதியையும், இறக்குமதியாளரால் உத்தரவாதமளிக்கப்பட்ட கடிதத்தையும் இணைங்கப்பட்ட 90 நாள் காலப்பகுதிக்கிடையில் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டமையை உறுதிப்படுத்துகின்ற ஆவணச் சான்றுகளை இறக்குமதியாளர் சமர்ப்பிக்கும்வரை தன்னுடன் வைத்திருத்தல் வேண்டும். சான்றுகள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னரும்கூட, தேவையானவிடத்து இத் திணைக்களத்தின் பின்னைய பரிசோதனைகளுக்காக குறைந்தது மேலும் 3மாத காலப்பகுதிக்கேனும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய தொடர்பான அகற்றல் ஆவணங்களைத் தம்முடன் வைத்திருத்தல் வேண்டும்.

(4) இணங்கிக் கொள்ளப்பட்ட 90 நாள் காலப்பகுதிக்கிடையில் பொருட்களின் இறக்குமதியினை உறுதிப்படுத்துகின்ற ஆவணச்சான்றிதழ்களை சமர்ப்பிப்பதற்கு இறக்குமதியாளளொருவர் தவறுமிடத்து இணங்கிக் கொள்ளப்பட்ட 90 நாள் முடிவடைந்ததிலிருந்து 2 வாரங்களுக்குள் கண்காணிப்பு நோக்கங்களுக்காக அத்தகைய இறக்குமதியாளரின் விபரங்களை எமக்கு அறிவித்தல் வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,

**ஒப்பம். எச். ஏ. ஜி. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

**இணைப்பு 1**

முகாமையாளர்

........................................................

........................................................

........................................................

நான்/நாங்கள் பொருட்களின் இறக்குமதிக்காக தொடர்பு எண் ........... கொண்ட வரைவு/அஞ்சல் மாற றல் / தந்தி மாற்றல் மூலமாக செய்யப்பட்ட முற்பணக் கொடுப்பனவு தொடர்பாக, சுங்கத்தினால் சரியான முறை யில் முத்திரையிடப்பட்ட வர்த்தகப் பொருட் பட்டியலின் பிரதி ஒன்றினையும் சுங்க வெளிப்படுத்தலின் பிரதி ஒன்றினையும் கீழே தரப்பட்டுள்ள திகதியிலிருந்து 90 நாட்களுக்குள் தங்களுக்குச் சமர்ப்பிப்பேன் என்பதற கு இத்தால் உறுதியளிக்கின்றேன்.

........................................................

இறக்குமதியாளரின் ஒப்பம்

........................................................

திகதி

தொடர்பு 06/04/03/2004

செலாவணிக் கட்டுப்பாட்டு த் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு 1
2004 யூலை 16

இலங்கை அபிவிருத்தி முறிகளுக்காக குறித்துரைக்கப்பட்ட முகவர்களாக நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கும் வெளிநாட்டு செலாவணி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட அனைத்து வணிகர்களுக்கும்

அன்புள்ள ஐயா

## இலங்கை அபிவிருத்தி முறிகள்

செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் 17ஆம் பிரிவின் நியதிகளுக்கிணங்க மூலதனமும் வட்டியும் ஐ.அ.டொலர்களில் செலுத்தப்படத்தக்க இலங்கை அரசாங்கத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவு மற்றும் சந்தைப்படுத்தல் நோக்கங்களுக்காக இலங்கை அபிவிருத்தி முறிகளின் கையேற்பு, வைத்திருத்தல் அல்லது மாற்றலுக்காக வெளிநாட்டுச் செலாவணி தொடர்பில் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரினால் (பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்) நியமிக்கப்பட்டுள்ள முகவர்களான முதனிலை வணிகர்கள் ஆகிய இருவருக்கும் இத்தால் அனுமதி வழங்கப் படுகிறது.

2. மேற்குறிப்பிடப்பட்ட நோக்கத்திற்காக வெளிநாட்டுச் செலாவணி வர்த்தகத்தில் அதிகாரமளிக்கப்பட்ட வணிக ரொருவராக நியமிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் ஐ.அ.டொலர்களில் பின்வரும் இரண்டு சிறப்புக் கணக்குகளைப் பேணுவதற்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது.

(i) அரசாங்கத்திற்கு செலுத்தப்படத்தக்கதும் அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை நேரடியாகக் கொள்வனவு செய்யும் பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையிலிருந்து கிடைக்கின்றதுமான நிதிகளை வரவு வைப்பதற்காக அரசாங்கத்தின் சார்பில் பேணப்படும் "இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு " என்ற பெயரிலான ஐ.அ.டொலர்களில் வட்டி உழைக்கின்ற கணக்கொன்று

(ii) அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்தல் மற்றும் பந்தி 3இல் குறித்ரைக்கப்பட்ட முதலீட்டாளர் வகையினருடன் இலங்கை அபிவிருத்தி முறிகளை வர்த்தகப்படுத்தல் ஆகிய நோக்கங்களுக்காக "முறி முதலீட்டிற்கான டொலர் கணக்கு" என்ற பெயரில் ஐ.அ.டொலர் கணக்கொன்று (அத்தகைய குறித்துரைக்கப்பட்ட முகவர் வெளிநாட்டுச்செலாவணியின் அங்கீகரிக்கப்பட்ட முகவரொருவராக இருக்குமிடத்து இக் கணக்கினைப் பேணுவதற்கு அவசியம் கிடையாது)

3. முதலீட்டாளர்களின் வகைகள்

(i) இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியில் வதியும் வெளிநாட்டுப் பிரசைகள்

(ii) இலங்கைக்கு வெளியே நிரந்தரமாக தங்கியிருக்கும் இலங்கைப் பிரசைகள்

(iii) தொழில் வாய்ப்பிற்காக இலங்கைக்கு வெளியே சென்றுள்ள அல்லது வியாபாரத்தினை ஏற்படுத்து வதற்காக அல்லது தொழில் நிபுணத்துவத்திற்காக வெளிநாடுகளில் வதிகின்ற இலங்கைப் பிரசைகள்

(iv) இலங்கை தவிர்ந்த நாடொன்றினது சட்டங்களின்கீழ் நிறுவப்பட்ட கூட்டிணைக்கப்பட்ட , கூட்டிணைக்கப்படாத கம்பனிகள்.

(v) 1978ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க இலங்கை முதலீட்டுச்சபைச் சட்டத்தின் பிரிவு 17 இன் நியதிகளில் உடன்படிக்கைகளைச் செய்துகொண்டுள்ள கம்பனிகள், இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்துக் கொள்வனவுகளும், அத்தகைய கம்பனிகளின் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்களை வரவு வைக்கும் நோக்கத்திற்காக மாத்திரம் பேணப்படும் வெளிநாட்டு நாணயங்களிலிருந்து செய்யப்படும் பற றுக்களிலிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளின் அனைத்துக் கொள்வனவுகளும் செய்யப்படுமிடத்து, செலாவணிக் கட்டுப்பாட்டு ஏற்பாடுகளிலிருந்தும் முழுமையாக விலக்குப்பெறும்.

4. இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கு

இக் கணக்கிற்கான வரவுக்குட்பட்ட பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்தப்படும்.

(i) வரவுகள்

அரசாங்கத்திடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்வதற்காக மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து ஐ.அ.டொலர்களில் பெறப்பட்ட பணவனுப்பல்கள்

(ii) பற்றுக்கள்

(அ) மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களின் இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவிற்காக அரசாங்கத்திற்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளு வதற்கு (இக் கொடுப்பனவுகள் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்பட்ட அற விவுறுத்தல்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட வேண்டுமென்பதுடன் இது பொதுப்படுகடன் கண்கணிப்பாளரினால் இலங்கை மத்திய வங்கியில் பேணப்படும் "பொதுப்படுகடன் உதவுதொகை ஐ.அ. டொலர் கணக்கிற்கு" செலுத்தப்பட வேண்டியதுமாகும்)

(ஆ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தல்களின் மீது மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களுக்கு மீளளிப்பு மூலமாக பணவனுப்பல்களை மேற் கொள்ளுவதற்கு

(இ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளரின் அறிவுறுத்தல்களின்மீது மற்றைய எந்தவொரு நோக்கத்திற காகவும்

குறிப்பு: இக்கணக்கிற்கு பெறப்பட்ட பணம் பொதுப்படுகடன் கண்காணிப்பாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு இணங்க அரசாங்கத்திற்கு மாற்றல் செய்யப்படல் வேண்டும்.

5. முறி முதலீடுகளுக்கான டொலர் கணக்கு

கணக்கிற்கான வரவுகளும் பற்றுக்களும் பின்வருவனவற்றிற்கு மட்டுப்படுத்த வேண்டும்.

(i) வரவுகள்

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்கின்ற நோக்கத்திற்காக வாங்கப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட ஐ.அ.டொலர்கள்

(ஆ) மேலே பந்தி 3இல் குறித்துரைக்கப்பட்ட முதலீட்டாளர்களிடமிருந்து அவர்களுக்கான இலங்கை அபிவிருத்தி முறிகளின் விற்பனையின் மீது பெறப்பட்ட விற்பனைப் பெறுகைகள்

(இ) கணக்கு வைத்திருப்போர் வசமுள்ள இலங்கை அபிவிருத்தி முறிகள் மீதான முதல் தொகையின் மீள் கொடுப்பனவாகவும் வட்டிக் கொடுப்பனவாகவும் பெறப்பட்ட தொகை

(ii) பற்றுக்கள்

(அ) இலங்கை அபிவிருத்தி முறிகளின் கையேற்புக்காக அரசாங்கத்திற்குச் செய்யப்பட்ட கொடுப்பனவுகளுக்காக. அத்தகைய கொடுப்பனவுகள் முன்னர் குறிப்பிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கிற்கு கொடுப்பனவு செய்யத்தக்க விதத்தில் செய்யப்பட வேண்டும்.

(ஆ) இரண்டாந்தரச் சந்தையில் கணக்கு வைத்திருப்பவர்களினால் செய்யப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறிகளின் கொள்வனவிலிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை விற்பனை செய்தவர்களுக்கு கொடுப்பனவுகளைச் செய்வதற்காக.

(இ) பொதுப்படுகடன் கண்காணிப்பாளருக்கு செலுத்தப்படத்தக்க முறிகள் போன்றவற்றின் துணைப்பிரிவு மற்றும் திரட்சிக்காக செலுத்தப்படத்தக்க கட்டணம் போன்ற மற்றைய எந்த ஒரு தொகையும். இவையும்கூட முன்னர் குறிப்பிடப்பட்ட இலங்கை அபிவிருத்தி முறி முதலீட்டுக் கணக்கிற்கு செலுத்தப்படத்தக்க விதத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும்.

(ஈ) இலங்கை அபிவிருத்தி முறிகளைக் கொள்வனவு செய்வதற்கு தேவையானதிலும் பார்க்க மிகைக் கணக்கில் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விற்பனை செய்வதற்கு

6. மேற்குறிப்பிட்ட கணக்குகள் பேணப்படும் அங்கீகரிக்கப்பட்ட வணிகர்கள் அத்தகைய கணக்குகளின் பற்று மற்றும் வரவுகளின் விபரங்களை எடுத்துக் காட்டும் கூற்றுக்களை செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக் களத்திற்கு அடுத்துவரும் மாதம் 15ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்போ சமர்ப்பித்தல் வேண்டும்.

7. செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் பிரிவு 5இன் நியதிகளுக்கிணங்க, அரசாங்கத்திடமிருந்து அல்லது இலங்கை அபிவிருத்தி முறிகளை வைத்திருப்போரிடமிருந்து இலங்கை அபிவிருத்தி முறிகளை கொள்வனவு செய்ய அவசியமான ஐ.அ.டொலர்களை மட்டும் அங்கீகரிக்கப்பட்ட வணிகரொருவரிடமிருந்து கொள்வனவு செய்வதற்கு முகவர்களாக நியமிக்கப்பட்ட முதனிலை வணிகர்களுக்கு இத்தால் அனுமதி வழங்கப்படுகின்றது. இலங்கை அபிவிருத்தி முறிகளை வாங்குவதற்கு கொள்வனவு செய்யப்பட்ட எந்த ஒரு தொகையும் தேவைப்படாத விடத்து முதனிலை வணிகர்கள் காலந்தாழ்த்தாமல் வெளிநாட்டுச் செலாவணியினை அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு உடனடியாக விற்றுவிட வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,

**ஒப்பம். எச். ஏ. ஜி. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

தொடர்பு 06/05/04/2004

செலாவணிக் கட்டுப்பாட்டு த் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு 1
2004 ஒகத்து 24.

*வெளிநாட்டு செலாவணி தொடர்பில்*

*அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

*அன்புள்ள ஐயா*

**மியன்மாரிலிருந்து இரத்தினக்கற்களை இறக்குமதி செய்வதற்கான முற்பணக் கொடுப்பனவொன்றாக இரத்தினக்கல் வணிகர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவித்தல்**

பட்டை தீட்டப்படாத இரத்தினக் கற்களைக் கொள்வனவு செய்வதற்காக மடகாஸ்கருக்குப் பயணம் செய்வதற்கு இரத்தினக்கல் வணிகர்களுக்கு வழங்கப்பட்ட சிறப்பு வசதிகள் இந்நோக்கத்திற்காக மியன்மாருக்கு பயணம் செய்யும் இரத்தினக்கல் வணிகர்களுக்கும் வழங்கப்படலாம் என்பது பற்றி அதிகாரம் பெற்ற வணிகர்களுக்கு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

ஆகவே, மியன்மாருக்குப் புறப்படவுள்ள பதிவு செய்யப்பட்ட இரத்தினக்கல் வணிகர்கள், இரத்தினக் கற்களின் கொள்வனவுச் செலவு, மற்றும் மியன்மாரில் ஏற்படும் தனிப்பட்ட செலவுகள் என்பனவற்றை ஈடுசெய்வதற்காக, தேசிய இரத்திக்கல், ஆபரண அதிகாரசபையிடமிருந்து அவரின் செலாவணிக்கான கோரிக்கையின்மீது வெளிநாட்டுச் செலாவணியினை வழங்குமாறு விதந்துரைத்து அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கு வழங்கப்படுகின்ற விதந் துரைப்புக் கடிதத்தினை சமர்ப்பிக்குமிடத்து அவர்களுக்கு ஐ.அ.டொலர் 15,000வரையான (இதில் ஐ.அ.டொலர் 5,000 மாத்திரம் நாணயத் தாள்களாகவும் மீதி பயணிகள் காசோலையாக அல்லது வங்கி வரைவாகவும் வழங்கப்படல் வேண்டும்) வெளிநாட்டுச் செலாவணியினை விற்பனை செய்ய அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகிறது.

மேலே குறிப்பிடப்பட்டவாறு வெளிநாட்டுச் செலாவணியினை விடுவிக்கும்போது, தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையின் விதந்துரைப்புக் கடிதம் யாருக்கு முகவரியிடப்பட்டதோ அந்த அங்கீகாரம் பெற்ற வணிகர்கள் இரத்தினக்கல் வணிகரிடமிருந்து பின்வருவனவற்றை மேற்கொள்வர் என்ற உத்தரவாதமொன்றினைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

(அ) செலாவணி விடுக்கப்பட்டு 45 நாட்களுக்கிடையில் விடுவிக்கப்பட்ட செலாவணியிலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட இரத்தினக் கற்களை இலங்கைக்கு அவர் கொண்டுவர வேண்டியதுடன் இலங்கைக்கு அவர் வரும்வேளையில் அவ்வாறு இலங்கைக்குக் கொண்டு வரப்பட்ட பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களின் அளவு பெறுமதி ஆகிய விபரங்களை தருகின்ற சுயமாகத் தயாரிக்கப்பட்ட பொருட் பட்டியலை மூன்று பிரதிகளில் புறக்குறிப்பீடு செய்வதற்காக இலங்கைச் சுங்கத்திடம் சமர்ப்பிக்க வேண்டும். (வெளிநாட்டுச் செலாவணி விடுவிக்கப்பட்டு 60 நாட்களுக்கிடையில் இலங்கைச் சுங்கத்தினால் புறக்குறிப்பீடு செய்யப்பட்ட அத்தகைய ஒரு பொருள் பட்டியல் வெளிநாட்டுச் செலாவணியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அங்கீகரிக்கப்பட்ட வணிகர்களுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய வேளையில் மற்றையது தேசிய இரத்தினக்கல் ஆபரண அதிகார சபையிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

(ஆ) அவரினால் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படாத அனைத்து வெளிநாட்டு செலாவணியினையும் அந் நாட்டிற்குள் கொண்ட வரவேண்டியதுடன் அவ்வாறு கொண்டுவந்த வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரம் பெற்ற வணிகர்களிடம் ஏழு நாட்களுக்குள் சமர்ப்பித்தல் வேண்டும் (இதற்கான சான்றினை வெளிநாட்டுச் செலாவணி யாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டதோ அந்த அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்).

(இ) இணைப்பு 1இல் உள்ள படிவத்தில், பட்டை தீட்டப்படாத இரத்தினக்கற்களின் கொள்வனவிற்கும், தனிப்பட்ட விடயங்களுக்குமாக வெவ்வேறாகச் செலவிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி ஆகிய விபரங்களடங்கிய முழுமையான கணக்குக்கூற்றினை பயன்படுத்தப்படாத வெளிநாட்டுச் செலாவணியினை அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் ஒப்படைத்த சான்றுடன் சேர்த்து செலாவணி விடுவிக்கப்பட்ட 60 நாட்களுக்கிடையில் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகரிடம் அவர் சமர்ப்பித்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட உத்தரவாதங்களையும் தேவைப்பாடுகளையும் இரத்தினக்கல் வணிகர்கள் நிறைவேற்றத் தவறும் அனைத்துச் சந்தர்ப்பங்களிலும் வெளிநாட்டுச் செலாவணி கொள்வனவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர் வெளிநாட்டுச் செலாவணி விடுவிக்கப்பட்ட மூன்று மாத காலப்பகுதிக்குள் மத்திய வங்கியின் செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கும் இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபைக்கும் அறிவிக்க வேண்டும்.

உங்கள் உண்மையுள்ள,

ஒப்பம். **எச். ஏ. ஜி. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

இணைப்பு - 1

## இரத்தினக் கற்களின் கொள்வனவிற்காக மியன்மாருக்கு பயணம் செய்யும் நோக்கத்திற்காக கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயங்கள் தொடர்பான கணக்குக் கூற்று

| நோக்கம் | கொள்வனவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை | செலவு செய்யப்பட்ட வெளிநாட்டு நாணயத்தின் தொகை | பயன்படுத்தப்படாத மீதி |
|---|---|---|---|
| இரத்தினக் கற்களின் கொள்வனவு | | | |
| தனிப்பட்ட செலவு | | | |
| மொத்தம் | | | |

- வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்பட்ட திகதி:
- வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்
- மியன்மாருக்குச் சென்ற திகதி:
- இலங்கைக்கு வருகை தந்த திகதி:
- பயன்படுத்தப்படாத வெளிநாட்டு நாணயத்தை ஒப்படைத்த திகதி:
- வெளிநாட்டு நாணயம் விற்பனை செய்யப்பட்ட அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்

(வெளிநாட்டு நாணயம் ஒப்படைக்கப்பட்டமைக்கான சான்று இணைக்கப்பட்டுள்ளது)

மேலேயுள்ள தகவல்கள் எல்லாம் உண்மையானதும் சரியானதுமென நான் உறுதிப்படுத்துகின்றேன்.

**இரத்தினக்கல் வணிகரின் கையொப்பம்**

தொடர்பு 06/07/05/2004

செலாவணிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி
அ.பெ.883
கொழும்பு 1
2004 ஒகத்து 25

*அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்களுக்கான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள்*

*அன்புள்ள ஐயா*

**பொருட்களின் கப்பலேற்றம் மற்றும் உள்நாட்டு வான் பட்டியல்/ உள்நாட்டு ஏற்றுமதி முறிகள்/ கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச்சீட்டுக்கள் என்பனவற்றின் வழங்கல்**

மேலே குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பாக எண் ஈசி/ 48/ 91 (ஜி) கொண்ட 1991.07.12ஆம் நாளிடப்பட்டதும் எண் ஈசி/ 04/ 97 (ஜி) கொண்ட 1997 மார்ச்சு 04ஆம் நாளிடப்பட்டதுமான எனது தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானது. 2003.12.13இன் பின்னர் இலங்கை மத்திய வங்கியில் பதிவு செய்து கொண்டுள்ள பின்வரும் கப்பலேற்றுவோரை 2003.12.13இற்கு முன்னரான தொழிற்பாட்டு அறிவுறுத்தல்களில் தரப்பட்டுள்ள கப்பலேற்றுவோர் பட்டியலில் உள்ளடக்குமாறும் ஏற்றுமதிச் சரக்குகள் தொடர்பான கொடுக்கல் வாங்கல்களுக்காக அவர்களால் வழங்கப்படும் உள்நாட்டு வான்வழிப்பட்டியல்கள்/ உள்நாட்டு ஏற்றுமதிகள் / கப்பலேற்றுவோரின் சரக்குப் பற்றுச் சீட்டுக்கள் ஆகியவற்றை ஏற்றுக் கொள்ளுமாறும் அதிகாரமளிக்கப்பட்ட வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றர்.

| கப்பலேற்றுவோரின் பெயர் | பதிவுஎண் |
|---|---|
| 1. பராமவுன்ட் லொஜிஸ்டிக் பிரைவேட் லிமிட்டட் | 06/ 07/ 009/ 0121 |
| 2. சிப்பிங் அன்ட் கார்கோ சேர்விஸ் (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0122 |
| 3. டீஏஇஸட் இன்ரநசனல் சிப்பிங் அன்ட் கொன்சோலிடேட் (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0123 |
| 4. சில்வர்மில்ஸ் லிமிடெட் | 06/ 07/ 009/ 0124 |
| 5. எம்ஏ லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0125 |
| 6. இஸ்டுவார்ட் போர்வாடிங் (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0126 |
| 7. ஜரிஎஸ் எக்ஸ்பிறஸ் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0127 |
| 8. கார்கோ பிளான் இன்ரநசனல் (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0128 |
| 9. எம்எஸ்ஏ சிப்பிங் (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0129 |
| 10. என்வைகே லொஜிஸ்டிக் அன்ட் குசுகாரா லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0130 |
| 11. பீ. ஏ. எல் ரான்ஸ் லொஜிஸ்டிக் லங்கா (பிரைவேட்) லிமிட்டட் | 06/ 07/ 009/ 0131 |

உங்கள் உண்மையுள்ள,

ஒப்பம். **எச். ஏ. ஜி. எட்டியாராச்சி**

செலாவணிக் கட்டுப்பாட்டாளர்

பன்னாட்டு தொழிற்பாடுகள் திணைக்களம்
*2004 ஒத்தோபர் 11*

தொழிற்பாட்டு அறிவுறுத்தல்கள் எண் 1/2004
தொடர்பு 33/05/031/0004/001

*அனைத்து உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளுக்கும்*

**வெளிநாட்டுச் செலாவணி பரிமாற்றம் (ஐ.அ.டொலர்/ இ.ரூபா) மீதான வர்த்தக வங்கிகளுக்கான வழிகாட்டல்கள்**

ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கினை வைத்திருக்கும் உள்நாட்டு கம்பனி வாடிக்கையாளர்களுக்கு வெளிநாட்டுச் செலாவணி (ஐ.அ.டொல்/ இ.ரூபா) பரிமாற்றத்தினை வழங்குவது பின்வரும் நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும் என வர்த்தக வங்கிகளுக்கு இத்தால் அறிவிக்கப்படுகிறது.

(அ) உள்நாட்டில் தொழிற்படுகின்ற வர்த்தக வங்கிகளில் ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் தமது ஏற்றுமதிப் பணப் பெறுகைகளைப் பேணுகின்ற வணிகப் பொருட்களின் ஏற்றுமதியாளர்களுக்கு மட்டும் வெளிநாட்டுச் செலாவணி (ஐ.அ.டொலர்/இ.ரூபா) பரிமாற்றத்திற்கு அனுமதி வழங்கப்படுவதுடன் அத்தகைய பரிமாற்றம் ஏற்றுமதியாளர் வெளிநாட்டு நாணயக் கணக்கில் உள்ள நிதியங்களுக்கு எதிராக மட்டுமே மேற்கொள்ளப்பட வேண்டும்;

(ஆ) வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்றம் (ஐ.அ.டொலர்/இ.ரூபா) செலாவணிக் கட்டுப்பாட்டு ஒழுங்கு விதிகளின் கீழ் முன்னோக்கிய உடன்படிக்கையில் நுழைவிற்கு தகைமை பெற்றவர்களினால் மட்டுமே மேற்கொள்ளமுடியும். பரிமாற்ற ஒழுங்குகளின் குறைந்தது ஒரு பகுதியாவது குறித்துரைக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுடன் தொடர்புபட்ட தொகையுடன் தொடர்பான பரிமாற்றத்தின் பகுதியின் தொகையுடன் அனுமதிக்கப்பட்ட குறிப்பிட்ட கொடுக்கல் வாங்கல்களை அடிப்படையாகக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) வெளிநாட்டுச் செலாவணிப் பரிமாற்ற காலம் 120 நாட்களை விஞ்சக்கூடாது.

(ஈ) பரிமாற்ற கொடுக்கல் வாங்கல்களின் இருபகுதியும் நாளாந்த வெளிநாட்டுச் செலாவணி நிலைமை அறிக்கையில் பன்னாட்டுத் தொழிற்பாட்டு திணைக்களத்திற்கு நாளாந்தம் அறிக்கையிடப்பட்டு வருவதுடன் அவை வங்கிகளுக்கு வழங்கப்பட்ட வெளிப்படுத்துகை வரையறைக்குள்ளேயே இருந்தும் வருகின்றன.

(உ) தொழிற்பாட்டு இடர்நேர்வுகளைத் தடுப்பதற்காக திறைசேரி தொழிற்பாடுகளுக்கு ஏற்புடைத்தான போதுமான உள்ளகக் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன; அத்துடன்

(ஊ) இவ்வெளிப்படுத்துகைகளை 100% இடர்நேர்வு நிறையில் இடர்நேர்வு நிரையீடு செய்வதன் மூலம் மூலதன போதுமை விகிதத்தினை ஈடுசெய்வதற்குப் போதுமான மூலதனத்தினை வங்கிகள் பேணி வருகின்றன.

**பி. வியனகே**

பதில் பணிப்பாளர்/ பன்னாட்டு தொழிற்பாடுகள்

பிரதிகள்: செலாவணிக் கட்டுப்பாட்டாளர், இ.ம.வங்கி
பணிப்பாளர், வங்கி மேற்பார்வை, இ.ம.வங்கி
பணிப்பாளர், பொருளாதார ஆராய்ச்சி, இ.ம.வங்கி

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

*2004 சனவரி 16*

34/07/029/0001/001

**சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/01/2004**

*அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

**மத்திய வைப்பக முறையின் முன் உடனடி விடுவிப்பினை மத்திய கணக்கீட்டு முறையுடன் பரீட்சிப்பதற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினைத் திறத்தல்**

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்களத்தின் கண்காணிப்பாளரின் 2004 சனவரி 16ஆம் நாளிடப்பட்ட தொடர்பு இலக்கம் 08/14/025/001/009 கொண்ட கடிதத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களுக்கிணங்க மத்திய வைப்பக முறையின் முன் உடனடி விடுவித்தலினை உடனடி கணக்கீட்டு முறையூடாக பரீட்சிக்கின்ற வரையறுக்கப்பட்ட நோக்கங்களுக்காக அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறையானது 2004 சனவரி 27, 24 மற்றும் 31ஆம் நாட்களில் திறந்து வைக்கப்படுமென்பது இத்தால் அறியத்தரப்படுகிறது.

மத்திய வைப்பக முறையினை பரீட்சிப்பதற்காக பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட தொகையினை வரவு வைப்பதற்கு பங்கேற்பாளர்களை இயலச் செய்யும் நோக்கத்திற்காகவும் பரீட்சையின் முடிவில் அவ்வாறு வரவு வைக்கப்பட்ட தொகையை மீள மாற்றுவதற்காகவும் மாத்திரம் இம்மூன்று நாட்களிலும் அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை திறந்திருக்குமென்பதனை பங்கேற்பாளர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும்.

இலங்கை மத்திய வங்கியின் பொதுப்படுகடன் திணைக்கள கண்காணிப்பாளரினால் குறித்துரைக்கப்பட்ட பரீட்சார்த்த கொடுக்கல் வாங்கல்கள் தவிர்ந்த எந்தவொரு செல்லுபடியான கொடுக்கல் வாங்கல்களின் தீர்ப்பனவிற்காகவும் மேற்குறிப்பிட்ட மூன்று நாட்களும் அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை திறக்கப்படமாட்டாது என்பதனை தயவு செய்து கவனத்தில் கொள்ளவும்.

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**

பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

*2004 மார்ச்சு 29*

34/07/029/0001/001

**சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/02/2004**

*லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

**லங்கா செட்டில் முறைக்கான புதிய பங்கேற்பாளரின் நியமனம்**
**நட் வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்**

1923ஆம் ஆண்டின் 8ஆம் இலக்க உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் மற்றும் 1937ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்குகள் மற்றும் பிணையங்கள் சட்டத்தினது ஏற்பாட்டு நியதிகளில் நேரடி பங்குபற்றுநராகவும் வணிகர் நேரடி பங்கு பற்றுநராகவும் நியமிக்கப்பட்டுள்ள 6ஆம்மாடி, மிலேனியம் கவுஸ், 46/ 58 நவம் மாவத்தை கொழும்பு 2இல் அமைந்துள்ள நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட் 2004 ஏப்பிறல் 6ஆம் நாளிலிருந்து லங்கா செட்டில் முறையில் பங்கு பற்றுவதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அதிகாரமளிக்கப்பட்டுள்ளமை பற்றி தங்களுக்கு இத்தால் அறியத்தரப்படுகின்றது. இதன் சுவிப்ற் வங்கி அடையாள குறியீடு, அதேநேர மொத்த தீர்ப்பனவு கணக்கு இலக்கம் மற்றும் தொடர்பு கொள்ள வேண்டிய விபரம் ஆகியன கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| **சுவிப்ற் வங்கி அடையாள குறிமீடு** | NWSLLKLX |
| **அதேநேர மொத்தத் தீர்ப்பனவு கணக்கு இலக்கம்** | NWSLLKLXXXX010004561 |

**தொடர்பு கொள்ளல் விபரங்கள்**

| | |
|---|---|
| முதன்மை நிறைவேற்று அலுவலர் | திரு. தம்மிக றனவன |
| தொலைபேசி | 001 4703000 |
| தொலைநகல் | 001 4716275 |
| மின் அஞ்சல் | info@natwealth.com |

நட்வெல்த் செக்குறிட்டீஸ் லிமிடெட்டின் தீர்ப்பனவுக் கணக்கு அதாவது NWSLLKLXXXX010004561 அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறையில் 2004 ஏப்பிறல் 02ஆம் நாளன்று இடைநிறுத்தப்பட்ட நிலையிலும் 2004 ஏப்பிறல் 6ஆம் நாள் தொடக்கம் இடைநிறுத்தப்படவில்லை என்ற நிலையிலும் காணப்படும். லங்காசெட்டில் முறையின் அனைத்து பங்கேற்பாளர்களும் இந்நடைமுறை தொடர்பாக சுவிப்ற் செய்திகளைப் பெறுவர்.

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**

பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

2004 ஏப்பிறல் 23

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/03/2004

*லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

## 2004 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்தல்

2004 ஏப்பிறல் 30ஆம் நாளன்று (மே தினம் சனிக்கிழமை வருவதனால் அதற்குப் பதிலாக அரைநாள் விடுமுறை புரகடனப்படுத்தப்பட்டது) லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவல் நேரத்தினைக் கட்டுப்படுத்துவதனைக் கருத்திற்கொண்டு மத்திய வங்கி 2004 ஏப்பிறல் 30ஆம் நாளன்று லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினை மு.ப.8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை கட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்தது. இதன்படி, 2004 ஏப்பிறல் 30ஆம் நாளிற்கான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு மாற்றப்படவுள்ளன.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| எம். எல். என். எஸ். - பிராந்திய தீர்ப்பனவுகள் | 12.00 நண்பகல் |
| தி. ச. தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏல) தீர்ப்பனவுகள் | 12.45 பி.ப |
| முதலாந்தர ஏலங்களின் பேரிலான தேறிய தீர்ப்பனவுகளை மூடுதல் | 1.00 பி.ப |
| எம். எல். என். எஸ். தீர்ததல் தீர்ப்பனவு மற்றும் முக்கிய வரைவு தீர்ப்பனவு | 2.00 பி.ப |
| மூன்றாம் தரப்பினரின் கொடுப்பனவுகளை மூடுதல் | 2.00 பி.ப |
| தி. ச. தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (துணைநிதிவசதி) தீர்ப்பனவு | 2.15 பி.ப |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி மாற்றல் | 2.30 பி.ப |
| அலுவல்களை மூடுதல் | 3.00 பி.ப |
| முறையினை மூடுதல் | 4.00 பி.ப |

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**

பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

2004 யூலை 08

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/04/2004

*லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

## லங்கா செட்டில் முறையின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணைக்கான திருத்தங்கள்

லங்கா செட்டில் முறையின் நாளாந்தம் முடிவிடும் நேரத்தினை முன்னகர்த்துமாறு பல்வேறு பங்கேற்பாளர்களினாலும் விடுக்கப்படட கோரிக்கைகள் மற்றும் 2004 யூன் 30ஆம் நாளன்று நடத்தப்பட்ட அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை - பத்திரங்களற்ற பிணையங்கள் முறையின் துணைக் குழுவின் கூட்டத்தில் பங்கேற்பாளர்களினால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் என்பனவற்றைக் கருத்திற் கொண்ட மத்திய வங்கி, லங்கா செட்டிலின் முறை ஒழுங்குவிதிகளின் தொகுதி 4இன் கிளைவாசகம் 1.2இன்கீழ் வழங்கப்பட்ட லங்கா செட்டிலின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணையின் நாள் முடிவிலான செய்முறை நேரத்தினை 2004 யூலை 19ஆம் நாளிலிருந்து நடைமுறைக்கு வரும் விதத்தில் 30 நிமிடத்தினால் குறைப்பதற்கு மத்திய வங்கி தீர்மானித்திருப்பதனை இத்தால் தங்களுக்கு அறியத்தரப்படுகிறது.

இதன்படி, 2004 யூலை 19ஆம் நாளிலிருந்து லங்கா செட்டிலின் நாளாந்த தொழிற்பாட்டு அட்டவணை நாள் முடிவு வரையிலான செய்முறை நேரமாக பி.ப 4.00 மணியிலிருந்து பி.ப 5.00 மணியாக விளங்குவதுடன் கணனி முறையானது பி.ப. 5.00 மணிக்கு மூடப்படும்.

முறைமை ஒழுங்குவிதிகளின் தொகுதி 4இன் கிளைவாசகம் 1.2இன் கீழான நாளாந்தத் தொழிற்பாட்டு அட்டவணை திருத்தப்பட்டவாறு வாசிக்கப்படல் வேண்டும்.

**எச். என். தேனுவர**
கண்காணிப்பாளர்/ பொதுப்படுகடன் திணைக்களம்

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**
பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

34/07/029/0001/001

சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/05/2004

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்

2004 யூலை 28

*லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

## 2004 ஒகத்து 01ஆம் நாளன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவு முறை – பொதுப்பேரேடு இடைத்தளமுக பரீட்சிப்பிற்காக அதேநேர மொத்த தீர்ப்பனவு முறையினைத் திறத்தல்

மத்திய வங்கியினால் அதேநேர மொத்த தீர்ப்பனவுமுறை பொதுப் பேரேட்டு இடைத்தளமுக நடவடிக்கையினை பரீட்சிக்கின்ற வரையறுக்கப்பட்ட நோக்கத்திற்காக முன்பதியப்பட்ட விடயங்களை வேறோரிடத்தில் பதவி செய்யும் தலத்தில் 2004 ஏப்பிறல் 1ஆம் நாளன்று அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை திறந்து வைக்கப்படுமென்பது இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அதேநேர மொத்தத் தீர்ப்பனவுமுறை வேறு எந்தவொரு கொடுக்கல் வாங்கல்களுக்காகவும் திறக்கப்பட மாட்டாது என்பதனை தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும்.

இத்தால் நீங்கள் பின்வருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்

(i) 2004 யூலை 30 வெள்ளிக்கிழமையன்று பி.ப. 4.00 மணிக்குப் பின்னர் (வியாபாரம் முடிவடைந்ததன்பின்னர்) சுவிப்ற் செய்திகளுடன் தொடர்பான முன் திகதியிட்ட அதேநேர மொத்தத் தீாப்பனவுகள் எதனையும் அனுப்ப வேண்டாம்; அத்துடன்

(ii) பெறுமதித் திகதியாகிய 2004.08.01 இனைக் கொண்டிருக்கக்கூடிய CBCELKLAXXX அல்லது CBCELKLXXXX இன் 2004 ஒகத்து 1ஆம் நாளன்று உருவாக்கக் கூடியதுமான அனைத்து சுவிப்ற் செய்திகளையும் கவனிக்காது விடவும்.

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**
பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

34/07/029/0001/001

கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவுத் திணைக்களம்
2004 திசெம்பர் 12

சுற்றறிக்கை எண் . ஆர்ரிஜிஎஸ்/06/2004

*லங்கா செட்டில் முறையின் பங்கேற்பாளர் அனைவருக்கும்*

**லங்காசெட்டிலின் அலுவல் நேரத்தினை 2004ஆம் ஆண்டு திசெம்பர் 24ஆம் நாளன்றும் திசெம்பர் 31ஆம் நாளன்றும் கட்டுப்படுத்தல்**

2004 திசெம்பர் 24ஆம் நாளன்றும் (சுதந்திர தினம் சனிக்கிழமை வருவதனால் அதற்குப் பதிலாக அரை நாள் பிரகடனப்படுத்தப்பட்டது) 2004 திசெம்பர் 31ஆம் நாளன்றும் (உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளினால் பொது மக்களுக்கான அலுவல் நேரம் மட்டுப்படுத்தப்பட்டது. லங்கா செட்டிலில் பங்கேற்கும் நிறுவனங்களின் அலுவல் நேரத்தினை மட்டுப்படுத்துவதனைக் கருததிற்கொண்டு மத்திய வங்கி 2004 திசெம்பர் 24ஆம் நாளன்றும் 2004 திசெம்பர் 31ஆம் நாளன்றும் லங்கா செட்டிலின் அலுவல் நேரத்தினை மு.ப. 8.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணிவரை மட்டுப்படுத்துவதற்கு தீர்மானித்தது. இதன்படி, 2004 திசெம்பர் 24ஆம் நாளிற்கும் 2004 திசெம்பர் 31ஆம் நாளிற்குமான லங்கா செட்டிலின் தொழிற்பாட்டு அட்டவணையின் நண்பகல் 12.00 மணிக்குப் பின்னைய நிகழ்வுகள் பின்வருமாறு திருத்தப்படவுள்ளன.

| நிகழ்வு | திருத்தப்பட்ட நேரம் |
|---|---|
| எம். எல். என். எஸ். - பிராந்திய தீர்ப்பனவுகள் | 12.00 நண்பகல் |
| தி. ச. தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (ஏல) தீர்ப்பனவுகள் | 12.45 பி.ப |
| முதலாந்தர ஏலங்களின் பேரிலான தேறிய தீர்ப்பனவுகளை மூடுதல் | 1.00 பி.ப |
| எம். எல். என். எஸ். தீர்ததல் தீர்ப்பனவு மற்றும் முக்கிய வரைவு தீர்ப்பனவு | 2.00 பி.ப |
| மூன்றாம் தரப்பினரின் கொடுப்பனவுகளை மூடுதல் | 2.00 பி.ப |
| தி. ச. தொழிற்பாடுகள் - மீள்கொள்வனவு (துணைநிதிவசதி) தீர்ப்பனவு | 2.15 பி.ப |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவவசதி மாற்றல் | 2.30 பி.ப |
| அலுவல்களை மூடுதல் | 3.00 பி.ப |
| முறையினை மூடுதல் | 4.00 பி.ப |

**சி. பிறேமரத்ன**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

**கே. ஆர். எம் சிறிவர்த்தன**
பணிப்பாளர்/ கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு

பொதுப்படுகடன் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
2004 சனவரி 6

சுற்றறிக்கை எண் 08/24/002/0005/004

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

**தம்வசமில்லாத பிணையங்களின் விற்பனை மீதான பணிப்பு**

பதிவு செய்யப்பட்ட பங்குகள், பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் வழங்கப்பட்ட 2002 பெப்புருவரி 1 ஆம் நாளிடப்பட்ட ஒழுங்கு விதிகளின் பிரிவு 12 இன் நியதிகளுக்கிணங்க இப்பணிப்புரை வழங்கப்படுகிறது. இப்பணிப்புரையின் நியதிகளின்படி தம்வசமுள்ள பிணையங்களின் விற்பனைகளிலிருந்தும் முதனிலை வணிகர்கள் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். முதனிலை வணிகர்கள் எவரும் தொடர்பான பிணையங்கள் உண்மையில் அவற்றின் சொத்துப்பட்டியல் உடமைகளில் இல்லாத எந்த ஒரு பிணையங்களையும் விற்கக்கூடாது. நேர்மாற்று மீள்கொள்வனவு கொடுக்கல்வாங்கல்களின் மீதான பிணையங்களாகப் பெறப்பட்ட பிணையங்களை முதனிலை வணிகர்களின் சொந்தப் பிணையங்களாகக் கருதமுடியாதாகையினால் அவற்றை விற்பனை செய்யமுடியாது.

இது கிடைத்தமை பற்றி அறியத்தரவும்.

**கே.ஜி.டி.டி. தீரசிங்க**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்

பொதுப்படுகடன் திணைக்களம்
இல. 30 சனாதிபதி மாவத்தை
2004 சனவரி 29

*அனைத்து வர்த்தக வங்கிகள், முதனிலை வணிகர்கள் மற்றும் ஊழியர்சேமநிதியம்*

அன்புள்ள ஐயா

**2003 ஆம் ஆண்டு ஒகத்தின் லங்கா செட்டில் முறையின் ஒழுங்கு விதிகளுக்கான திருத்தம்**

2003 ஆம் ஆண்டு ஒகத்தின் லங்கா செட்டின் முறையினது ஒழுங்குவிதிகளின் தொகுதி 3 இன் கிளைவாசகம் 4.2 இத்தால் நீக்கப்பட்டு அதற்குப்பதிலாக பின்வரும் திருத்தப்பட்ட கிளைவாசகம் புகுத்தப்படுகின்றது.

முறை ஒழுங்கு விதிகளுக்கான இத்திருத்தம் 2004 பெப்புருவரி 2 ஆம் நாள் தொடக்கம் நடைமுறைக்கு வரும்.

**உங்கள் உண்மையுள்ள**
**கே. ஜி .டி .டி. தீரசிங்க**
கண்காணிப்பாளர் பொதுப்படுகடன் திணைக்களம்

## 4.2 லங்கா செகுயரில் கிடைக்கத்தக்கதாகவுள்ள கணக்கு வகைகள்

லங்கா செகுயரில் பின்வரும் கணக்கு வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. மத்திய வங்கியானது அதன் தற்றுணிபின்படி பங்கேற்பாளருக்கும் அல்லது பங்கேற்பாளர் வகைக்கும் அதேபோன்று ஒவ்வொரு கணக்கு வகைக்கும் ஏற்புடைத்தாகக்கூடிய கொடுக்கல்வாங்கல் வகைகளையும் கட்டுப்படுத்தலாம்.

| கணக்கு வகை | குறிமீடு | நோக்கம் |
|---|---|---|
| பங்கேற்பாளருக்கு/ மத்திய வங்கிக்கு சொந்தமான கணக்கு | OWN | பங்கேற்பாளர்/ மத்திய வங்கிக்கு சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்கு |
| ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதி கணக்கு | ILF | பங்கேற்பாளர்களைப் பொறுத்தவரையில் ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையங்களாக மத்திய வங்கிக்கு மாற்றல் செய்யப்படவுள்ள மற்றும், மத்திய வங்கியைப் பொறுத்தவரை பங்கேற்பாளர்களினால் மத்திய வங்கிக்கு ஒரு நாளுக்குள்ளேயான திரவ வசதிக்கான பிணையமாக மாற்றல் செய்யப்படும் பிணையங்களை வைத்திருப்பதற்கு |
| பிணைக்கணக்கு | PLG | பங்கேற்பாளர்களுக்கு (ஒப்புதலளிக்கப்பட்ட கொடுகடன் முகவர் ஒருவரைப் பொறுத்தவரை) அல்லது பங்கேற்பாளர் யாருக்காக தொழிற்படுகின்றார்களோ அந்த முயற்சிக்கு பிணையிடப்பட்டிருக்கிற பிணையங்களை வைத்திருப்பதற்காக பிணையாளரின் பெயர் சொந்தக்காரரின் இடத்தில் பதிவு செய்யப்படுகிறது. ஏற்புடைத்தான ஒழுங்கு விதிகளுக்கு இணங்கவன்றி இக்கணக்குகளிலுள்ள பிணையங்களை விற்பனை செய்யமுடியாது. |
| வாடிக்கையாளர் கணக்கு (வதிவோர்) | CSL | பிணைய உடமைகள் பங்கேற்பாளர்களின் வாடிக்கையாளரான "இலங்கையில் வதியும் ஆட்களுக்கு" சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்கு கணக்கானது பிணையக் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள குறித்துரைக்கப்பட்ட வதியும் சொந்தக்காரரினால் உருவாக்கப்பட்டதாக இக்கணக்கு வகை வணிகர் நேரடி பங்கு பற்றுநர்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. |
| வாடிக்கையாளர் கணக்கு (வதிவற்றோர்) | CSF | "இலங்கைக்கு வெளியே வதியும் ஆட்களுக்கு" சொந்தமான பிணையங்களை வைத்திருப்பதற்காக கணக்கானது பிணையக் கொடுக்கல் வாங்கல்களிலுள்ள குறித்துரைக்கப்பட்ட வதிவற்ற சொந்தக்காரரினால் உருவாக்கப்பட்டதாகும். இக்கணக்கு வகை வணிகர் நேரடிப்பங்கு பற்றுநர்களுக்கு மட்டுமே கிடைக்கத்தக்கதாகவுள்ளது. |
| வர்த்தகப்படுத்தத்தக்க மீள்கொள்வனவுக் கணக்கு | CRP | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மறுதரப்பினருக்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களை வைத்திருப்பதற்காக. அவை அத்தயை உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் எதிர்கால திகதிக்கு மாற்றப்படும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவாகும். |
| வர்த்தகப்படுத்த முடியாத மீள்கொள்வனவுக் கணக்குகள் | REP | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மறுதரப்பினருக்கு மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களை வைத்திருப்பதற்காக. அவை அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் எதிர்காலத்திற்கு மாற்றப்படும். இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகம் செய்ய முடியாதனவாகும். |
| வர்த்தகப்படுத்தத்தக்க வாடிக்கையாளர் நேர் மாற்று மீள் கொள்வனவுக் கணக்கு | CRE | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மாற்றம் செய்யப்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் எதிர்காலத் திகதி ஒன்றிற்கு மாற்றப்படும். பிணையங்களை வைத்திருப்பதற்காக. இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவாகும். |
| வர்த்தகப்படுத்த முடியாத வாடிக்கையாளர் நேர் மாற்று மீள் கொள்வனவு கணக்குகள் | CRR | நேர்மாற்று மீள்கொள்வனவு உடன்படிக்கையின் கீழ் பங்கேற்பாளர்களினால் அல்லது வாடிக்கையாளர்களினால் மாற்றல் செய்யப்பட்ட அத்தகைய உடன்படிக்கையின் நியதிகளின்கீழ் எதிர்காலத் திகதியொன்றிற்கு மாற்றப்படும். பிணையங்களை வைத்திருப்பதற்காக இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்த முடியாதவையாகும். |
| நியதி முதலீட்டுக் கணக்கு | STI | பங்கேற்பாளர்களினால் விதிக்கப்பட்ட நியதி ஒதுக்கு தேவைப்பாட்டினை ஈடுசெய்வதற்காக பங்கேற்பாளர்களினால் வைத்திருக்கப்படும் பிணையங்கள் |

| | | |
|---|---|---|
| முதலாந்தர ஏலக் கொள்வனவுக் கணக்கு | PAP | முதலாந்தர ஏலங்களில் கொள்வனவு செய்யப்பட்ட பிணையங்களை வைத்திருப்பதற்கு. (முதனிலை வணிகர்கள் மற்றும் நியமிக்கப்பட்ட வணிகரல்லா விலைக்கோருநரின் பயன்பாட்டிற்கு மாத்திரம்) |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் மீள்கொள்வனவுக் கணக்கு | DOP | மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ் மத்திய வங்கியினால் பங்கேற்பாளர்களுக்கு மாற்றல் செய்யப்பட்ட எதிர்காலத் திகதியொன்றில் மத்திய வங்கிக்கு திருப்பி அனுப்பப்படும் பிணையங்களை வைத்திருப்பதற்கு. இக்கணக்கிலுள்ள பிணையங்கள் வர்த்தகப்படுத்தத்தக்கனவல்ல. |
| உள்நாட்டுத் தொழிற்பாடுகள் நேர்மாற்று மீள்கொள்வனவுக் கணக்கு | DRP | மீள்கொள்வனவு உடன்படிக்கையின்கீழ், மத்திய வங்கிக்கு பங்கேற்பாளர்களால் மாற்றல் செய்யப்பட்ட பிணையங்களை வைத்திருப்பதற்கு எதிர்காலத் திகதியொன்றில் பங்கேற்பாளர்களுக்கு திருப்ப அனுப்பப்படும். |

பொதுப்படுகடன் திணைக்களம்
30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1
2004 யூன் 7

*சுற்றறிக்கை எண் 08/24/002/0005/004*

*முதனிலை வணிகர்களின் முதன்மை நிறைவேற்று அலுவலர்களுக்கு*

*அன்புள்ள ஐயா,*

**சீராக்கப்பட்ட வர்த்தகப்படுத்தல் மீதான பணிப்பு (சந்தை விலையிலும் உயர்வான விலை)**

சீராக்கப்பட்ட வர்த்தகப்படுத்தல் அல்லது அவர்களின் கொடுக்கல் வாங்கல்களைப் பதிவு செய்வதற்காக தற்போதைய சந்தை விலையிலும் உயர்வான விலைகளைப் பயன்படுத்தலிலிருந்தும் விலகியிருக்குமாறு முதனிலை வணிகர்கள் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

சீராக்கப்பட்ட விலை என்பது சந்தையில் நிலவும் பெறுமதிக்கு கூடுதலான விலையில் பிணையத்தினை விற்பதுடனும் சமகாலத்தில் அதே அல்லது வேறுபட்ட பிணையத்தினை அதன் சந்தைப் பெறுமதியிலும் பார்க்க கூடுதலான விலையில் கொள்வனவு செய்து பதிவு செய்வதுடனும் தொடர்புபடுகின்ற ஒரு நடைமுறையாகும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் விற்கப்பட்ட பிணையங்கள் மீதான இழப்புக்களை பொருத்தமற்ற முறையில் தாமதிக்கின்ற வேளையில் பொறுப்பேற்கப்பட்ட பிணையங்களுக்கான மிகையான அறிவிக்கப்பட்ட பெறுமதியொன்றினை உருவாக்குகின்றது.

இப்பணிப்பானது, பதிவு செய்யப்பட்ட பங்குகள் பிணையங்கள் கட்டளைச்சட்டம் மற்றும் உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச்சட்டம் என்பனவற்றின் கீழ் நிதியமைச்சரினால் வழங்கப்பட்ட 2002 பெப்புருவரி 1 ஆம் நாளிடப்பட்ட ஒழுங்குவிதிகளின் பிரிவு 12 இன் நியதிகளுக்கிணங்க வழங்கப்பட்டது.

தயவுசெய்து இப்பணிப்புரை கிடைத்தமை பற்றி அறியத்தரவும்.

**கலாநிதி. எச். என். தேநுவர**
பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்